தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

மே 1995

## மே -1 அனைத்துலக தொழிலாளர் தினம்

## மே -5 தமிழீழ விடுதலைப் புலிகள் வரலாற்றுப் பிறப்பு



ஒரு கைத்துப்பாக்கியுடன்
விடுதலைக்கு அகரம் எழுதிய தலைவன்

பத்தொன்பது ஆண்டு நடந்து
விடுதலையின் வாசலில் தேசம்





நாப்பமண் வெளியீடு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






# அக்கறைப்பூக்கள்

## எரிமலையே வா!

**உ**ன்னை அலங்கரிக்கும் புதிய விமர்சகன்
ஆனால் பழைய வாசகன் நான்.

இதுவரை.... உன்னை நான் எழுதவில்லை.
உன்னைச் சிந்திக்கும் நேரத்தில்
என் மண்ணையும், மண்ணைக் காவல் செய்யும்
என் மைந்தரையும் எழுதுவேன்.

நீயும் அதனைத்தானே பேசுகிறாய்.

உன் முதுகைத் தட்டிக் கொடுப்பது
என் முதுகை நானே தட்டிக்கொள்வது
போலாகும்.

உன் விருப்பம் அதுவாயின் எனக்கும் சம்மதம்.

இன்றிருந்து என் மாலை மரியாதைகள்-
அன்பளிப்புகள் ஏன் அம்புகளும் கூட வரும்
தயாராக இரு!

உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை
உன்னை வருணிக்க வேண்டும்
இல்லையா?

முதலில்.... என் தோணி எது என்றும்
துறைகள் எவை என்றும் விசாரித்தாய்
உனக்கு நன்றி.

தமிழ்க் கடலிலே கவிதைப் படகேறி
என் பேனாத் துடுப்பு வலித்து
பயணம் செய்யத்தான் - என் விருப்பம்.

இலக்கியப் பூங்காவில் எத்தனையோ
வாசமுள்ள மலர்களைப்
பறித்து வைத்திருக்கிறேன்.
எரிமலைக் கூந்தலிலே சூட்டி அழகு பார்க்க
ஆசைப்படுகிறேன்.

அதற்கு....
எரிமலை எனக்கு ஒரு கலங்கரை விளக்கு!

உன்னை நான் எழுதுவதும்
என்னை நீ விசாரிப்பதும் காலத்தின் கட்டாயம்
தேவையும் கூட.

எரிமலையே வா!
உன்னை எழுதும் போது என் பேனா
உள்ளம் மகிழ்கிறது.

உனக்குப் பட்டம் சூட்டி
வீரப்பதக்கம் பூட்டி
உன் பெயரை முதலில் உச்சரித்த
அந்த நாவிற்கு என் முதல் நன்றி.

உன் நெற்றியைப் பார்க்கும் எவரும்
நீ ஒரு ஆழமான மனிதன்
கனமான காத்திரமான உணர்வுகளை
நீ கொண்டிருப்பாய் எனப் புரிவார்கள்.

'மனிதனை இலக்கியம்
வழி நடத்துகிறதோ இல்லையோ
இலக்கியத்தை மனிதன் வழிநடத்துகிறான்!
என்பதில் உனக்கும் எனக்கும்
முரண்பாடு இல்லை?

சீரழிந்த சஞ்சிகைகள் படித்து
செந்தமிழன் உளுத்துப் போனான்.
அவன் உணர்வுகளும் செத்துப் போயின.

அவனுக்கு புத்துணர்வு ஊட்டி
புது மனிதனாக்குகிறாய் பாராட்டுகிறேன்!

தமிழ் வாசம் வீசும் என் நெஞ்சம்
உன் முன்னால் ஒரு கணம் தலை குனியும்!

கலப்புக் கலாச்சார நிலத்தில் விளைந்து
முற்றி கதிராகி அறுவடை ஆகிறாய்
ஆச்சரியப்படுகிறேன்!

உன்னை எம் சொந்த மண்ணில்
பயிரிடும் காலம் எப்போ?
காத்திருக்கிறேன்!

என் பேனாவில் கறுப்புத்துளி
என் உடலில் சிவப்புத் துளி
இருக்கும் வரை....
உன்னை எழுதுவேன்
உனக்காக என் மண்ணை எழுதுவேன்!

என்றென்றும் இனிய அன்புடன்
துறையூரான் - யாழ்ப்பாணம்

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

தென்னிந்திய சலனப் படங்களை ஏன் தடைசெய்ய வேண்டும் என்பது பற்றி ஆசிரியர், விவசாயி, எழுத்தாளர், பேராசிரியர், ஓவியர் போன்ற சமூகத்தின் பலதரப்பட்டவர்கள் கூறிய கருத்துக்கள் எம் மக்கள் இக் கொடிய பிசாசிடம் இருந்து விடுபட்டுக்கொண்டு வருகிறார்கள் என்பதையே சுட்டிக்காட்டுகிறது. எரிமலை ஒரு சரித்திரப் பெட்டகம். வியாசன், புதுவை இரத்தினதுரை ஆகியோரின் கவிதைகளில் இனவாதத்தின் கொடூரத்தையும், ஒடுக்குமுறைக்கெதிராக கிளர்ந்தெழுவதையும் காணமுடிகிறது. இவர்களின் போர்க்கால இலக்கியங்கள் போற்றிப் பேணப்பட வேண்டியவை.

இந்திரக்குமார்
எகிப்து.

என்றும் அன்பும் அறிவுமுடைய எரிமலை ஆசிரியருக்கு,

இந்தியன் ஆமியின் கொடுமையால் தாய் நாட்டைவிட்டு ஓடிவந்து தனிமையில் வாழும் என் போன்றோருக்கு எரிமலைதான் தாயின் மடி. தாய் மண்ணின் நிழல்.

என் மனம் இளைப்பாற இது எனக்கு வண்ணப் பூங்கா. என் நாட்டைக் காட்டும் கண்ணாடி. வேங்கைகளின் வீரத்தைக் காட்டும் காவியம். இன்னும் எத்தனையோ உவமைகளுக்கு ஒத்த இந்த உன்னத மலர் மாதம் ஒருமுறையா? வாரம் ஒருமுறை வாராதா? என ஏங்க வைக்கிறது. என்றென்றும் எரிமலைக்கு என் வாழ்த்துக்களும், வீரச்சாவடைந்த எம் சகோதர சகோதரிகளுக்கு என் வீர அஞ்சலியும், எம் தலைவருக்கு என் வணக்கங்களும்!

இப்படிக்கு
நடராசா கேதீஸ்வரி
குவைத்.

அன்புடன் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

எரிமலையைப் படிப்பதால் விடுதலைப் புலிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்வதுடன் மற்றவர்களுக்கும் அதைப்பற்றி விபரமாக எடுத்துச் சொல்லவும் எளிதாக இருக்கிறது.

மு. வரதராசு
மலேசியா.

அன்புடன் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

எரிமலை, களத்தில் போன்ற வெளியீடுகளைப் பார்த்துவிட்டு இங்குள்ள பலர் தமிழீழத்தின் உண்மையான நிலையை தற்போதுதான் தாங்கள் தெளிவாக உணர்வதாகச் சொன்னார்கள். இவ்வளவு காலமும் அரசாங்கம் கொடுக்கும் செய்திகளை மட்டுமே பார்த்திருந்த அவர்களுக்கு, எங்கள் தமிழீழத்தின் வளர்ச்சியைப் பார்க்கும் போது அதிசயமாக உள்ளது. தமிழீழப் போராளிகளின் சீருடைகளையும் அவர்களது கம்பீரமான தோற்றத்தையும் பார்க்கும் போது மெய்சிலிர்த்துப் போகின்றார்கள். என்னுடன் இந்தியாவைச் சேர்ந்தவர்களும் வேலை செய்கிறார்கள். எமது வெளியீடுகளைப் பார்த்த பின்பு ஒரு தடவையேனும் தமிழீழ மண்ணிற்கு வரவேண்டும் என்றும் போராளிகளை நேரடியாகச் சந்தித்துப் பாராட்ட வேண்டும் என்றும் இருக்கிறார்கள். தமிழீழத்தின் உண்மையான நிலையையும், போராளிகளின் வீரத்தையும் சிவில் நிர்வாகம் நடத்தும் முறையையும் பார்த்துப் பாராட்டுகின்றார்கள்.

உதயக்குமார்
சவூதி அரேபியா

அன்புடன் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

தமிழீழத்தின் தேசியத் தலைவர் அவர்கள் தமிழனத்தையே தலைநிமிரச் செய்து வருகிறார். அவர் காலம் தமிழினத்தின் பொற்காலம். அவர் காலத்தில் நாம் வாழ்வதே பெருமைக்குரிய விடயம். எமது மூதாதையர் விட்ட தவறை இனிவரும் தலைமுறையினருக்கு நாம் விட்டுவிடக்கூடாது என்பதே நமது தேசியத் தலைவரின் தனிச்சிறப்பு. அவருக்கு தமிழினமே நன்றி கூறித் தலை வணங்குகிறது.

மற்றும், ஜனவரி இதழில், கிட்டண்ணாவின் உருவப்படம், எனது நெஞ்சத்தை வேதனையாக்கிவிட்டது. எம் தேசத்தை வலம் வந்த கிட்டண்ணா, எங்களில் ஒருவராய் கலந்திட்ட கிட்டண்ணா, எதிரிகளை நிலை கலக்கிய கிட்டண்ணா இன்றும் இதயக் கண்களில், ஆயிரமாயிரம் நாடி நரம்புகளில்....

இப்படிக்கு
முகுந்தன், குவைத்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




## அடைக்கலமும் தந்து....

- வாசன் -

எந்நேரமும் சங்கீதம்
இசைக்கிறதாய்
எங்கள் வீடு இருக்கும்.

முற்றத்தில் தம்பியவங்கள்
மான்குட்டிகளைப் போல
துள்ளித் துள்ளி......

மழைக்கு
வெயிலுக்கு
குடையுமாகி
நிற்கிற எங்கள் வீட்டுக்கு
எரிநெருப்பைக் கொணர்ந்தவன் யார்? யார்?

தூக்குமேடைக்குப் போகுமுன்
சில குறிப்புக்களை எழுதிவைக்க
ஆசைப்பட்டவனைப் போல சீவியம்.

எங்களின் வீடுகளில்
எரிநெருப்பைக் கொட்டுவதற்கு
அன்போடுதான்
தொட்டிலில் அழுகின்ற பாலகனை
கிள்ளியும் விடுவதற்கு
எரிக்க, நூர்க்க
அடிக்க, அணைக்க
உதைக்க, தூக்க
அப்பாடி இரு தசாப்தங்களுக்குள்
எத்தனையைக் கண்டிருப்போம்!
சர்வதேச நாணய நிதியமே!
உங்களுக்கு
பச்சையாகச் சொன்னால் என்ன?
நீங்கள் கொடுப்பதெல்லாம்
குண்டாய், கொடிய துவக்காய் மாறி
எந்நேரமும்
சங்கீதம் இசைக்கிறதாய்
இருக்கின்ற எங்கள் வீடுகளில்
அழுகையையும்
ஒப்பாரியையும்
நிறைத்து
எங்களை உங்கள் வீடுகளில்
அடைக்கலம் தந்து வைத்திருக்கிறீர்கள்
நாங்கள் எல்லோரும்
அதை நம்புவோமாக.

## இதழின் உள்ளே


★ சந்திரிகா கூறும் கௌரவமான தீர்வு 05
★ இரண்டு தசாப்தங்களுள் இருளை வென்று 06
★ நரபலி எடுத்தவனும் உயிர்விலை கொடுத்தவனும் 10
★ பிரபாகரன் என்ற ஓர் இயக்கச் சக்தியின் உந்துதலே ஈழப் போர் 12
★ நேர்காணல் - வண. பிதா க. பிரான்சிஸ் ஜோசப் அடிகள் 14
★ நிலையான நினைவாகிச் சென்றோர் நினைவோடு தமிழீழம் வெல்வோம் 17
★ தமிழ் நாடக வளர்ச்சி 24
★ கலை இலக்கியக் கல்வியும் திறனாய்வும் 28
★ அபத்தமும் அர்த்தமும் 33
★ பிஞ்சுகளின் சோகம் 36
★ சிறைமீட்பு 39


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# எரிமலை

கலை பண்பாடு

அரசியல் சமூக ஏடு

பதின்நான்காம்

ஆண்டு

மே 1995

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

எரிமலை

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrénées,

75020 Paris.

Tel: 43 58 11 42


## சிறீலங்கா இராணுவத்தின் மேல் விழுந்த அடி

தமிழீழ விடுதலைப் புலிகள், சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்தும், மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும், 19ம் திகதியன்று விலகிக் கொள்வதாக அறிவித்தது மாத்திர மில்லாமல், திருகோணமலையில், இரு பீரங்கிப் படகுகள் மீது அன்றே தாக்குதல் நடத்தி சிறீலங்கா அரசாங்கத்திடம் மிக உறுதியாகவும், கடுமையாகவும், ஒரு விஷயத்தை வலியுறுத்தியுள்ளனர். அதாவது பேச்சுவார்த்தை என்பது மிகவும் எழுந்தமான விடயமல்ல என்பதே அது. மிகவும் ஆழமான புரிந்துணர்வுடனும், அடிப்படைப் பிரச்சினைகளை அறிந்துகொண்ட தெளிவுடனும், அவற்றைத் தீர்ப்பதற்கான உண்மையான உணர்வுடனும் நடத்தப்பட வேண்டும் என்பதே அவ் அறிவுறுத்தல். அப்படி நடத்தப்படாவிட்டால், பேச்சுவார்த்தைப் பாதையில் தொடர்ந்து செல்லுதல் சாத்தியமில்லை என்று பலதடவைகள் விடுதலைப் புலிகளின் தலைமைபீடத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பல தடவைகள் இக்கருத்து விடுதலைப் புலிகள் தரப்பில் கூறப்பட்டதோடு, மார்ச் 17ம் திகதி, சிங்களச் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டபோது, சந்திரிகாவுக்கு எழுதிய கடிதத்தில், தலைவர் பிரபாகரன், மார்ச் 28ம் திகதியை காலக்கெடுவாக வைத்து, அக்கால அவகாசத்துள் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் திருப்திகரமாகத் தீர்க்கப்படாவிட்டால், பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக் கொள்ளும் வேதனையான காரியத்தைச் செய்யவேண்டிவரும் என்று தெரிவித்திருந்தார். பின்னர் மீண்டும் 28ம் திகதி இக்காலக்கெடு, ஏப்ரல் 19-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கடிதம் மூலம் அறிவித்தார். பின்னர், ஏப்ரல் 10-ம் திகதி யாழ்ப்பாணத்தில் பேச்சுவார்த்தை நடந்தபோது, அதில், அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் இவ்விடயத்தை அரசாங்கம் உதாசீனம் செய்யக்கூடாது என்று உறுதியாகத் தெரிவித்திருந்தார். ஆயினும் அரசாங்கம் இவ்விடயம் குறித்து போதிய கவனம் எடுக்கவில்லை. பெரும்பாலான பொருட்களுக்கான பொருளாதாரத்தடை நீங்கியபோதும் ஏனைய விடயங்களில் அசமந்தப் போக்கையே அரசாங்கம் காட்டியது. பூநகரிப் பாதை, கிழக்கில் போராளிகளின் பாதுகாப்பு விடயத்தில் தீர்வுகள் பின்போடப்பட்டன. கடல் வலயத் தடை விடயத்தில், அரசாங்க ஆலோசனைகள் மீன்பிடிப்புக்குத் தொடர்ந்தும் தடைகளையே விதித்தன. பொருளாதாரத் தடைநீக்க விடயத்திலும், அரசாங்க வாக்குறுதிகளுக்கு எதிராக, நடைமுறையில், தடைசெய்யப்பட்ட பொருள்களின் போக்குவரத்தில், தடைகளும், காலதாமதமும். இராணுவத்தால் பேணப்பட்டு வந்தன. யூரியா போன்ற விவசாய பசளைகளுக்கான தடையும் நீக்கப்படவில்லை. பொருளாதாரத் தடை என்பது பொதுமக்களுக்கு எதிராக, இராணுவ நோக்கங்களுக்காக பொருளாதாரத்தை பயன்படுத்துவதாகும். இதுவும், கடல்வலயச் சட்டமும், சர்வதேசப் போர்விதிகளுக்கு முரணானவை. இவ்விடயங்களைப் பேச்சுவார்த்தையில் பேரப் பொருளாகப் பாவியாது பூரணமான தடைவிலக்கலை மேற்கொள்ளவேண்டுமென்று விடுதலைப் புலிகள் கோரியிருந்தனர். அதற்கு மாறாக சிறீலங்கா அரசாங்கம், தொடர்ந்து பேச்சுவார்த்தையில் இவற்றைத் தமக்குச் சாதகமான காய் நகர்த்தலுக்குத் துரும்பாகப் பாவித்தது.

இதன் காரணமாகவே, விடுதலைப் புலிகள், பேச்சுவார்த்தையில் இருந்து விலகிக்கொண்டதும், மீண்டும் அத்தடைகளை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது. பொதுமக்கள் மீதான எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளது. இதிலிருந்து நாம் அறிவது என்னவெனில் இந்த அரசாங்கமும், வேறொரு அணுகுமுறையில், தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைப் போரைத் தொடர்ந்து நடத்தவிரும்புகிறது என்பதுதான்.

இத்தகைய ஒட்டுமொத்தமான இராணுவ தந்திரோபாயத்துக்குள், இப் பேச்சுவார்த்தை நாடகம் நடத்தப்படுவதை எதிர்த்தும், தமிழ் மக்கள் மீண்டும் சிங்கள ஏமாற்று வித்தையில் சிக்கப்படுவதை தவிர்த்தும், தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனையின் தார்ப்பரியத்தை ஆழமாக உணர்ந்து அதன் அடிப்படையில் எதிர்கால சமாதான முயற்சிகளை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுமே விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து பின்வாங்கிய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

சிங்கள இனவாதிகளினதும் இந்திய அரசாங்கத்தினதும் ஆலோசனைகளின் பேரில், செயல்பட முற்பட்ட சந்திரிகா அரசாங்கம், இராணுவத்தீர்வை நோக்கிய தந்திரோபாய அடிப்படையில் செயல்பட முற்பட்டதை தெளிவாகக் கண்டு கொண்டதன் விளைவே விடுதலைப் புலிகளின் இத்தீர்க்கதரிசனமான நடவடிக்கை. நிரந்தரமான யுத்த நிறுத்தத்துக்கு சிங்கள அரசாங்கம் முன்வராமையும், இதுவரை காலமும் எவ்வித தீர்வுத்திட்டத்தையும் சமர்பிக்க சிறீலங்கா அரசாங்கம் தயாரில்லாமையும், இராணுவ முஸ்தீபுகள், ஆயத்தங்கள் முடுக்கி விடப்பட்டமையும், சந்திரிகாவின் இந்தியப் பயணமும் இவற்றை ஆணித்தரமாகக் காட்டின. விடுதலைப் புலிகள், தமிழர் தாயகத்தை அங்கீகரித்து சமஸ்டிக் கட்டமைப்பிலான தீர்வொன்றைப் பரிசீலிக்கத் தயார் எனக்கூறிய போது சிறீலங்கா அரசாங்கமோ, வடக்கு, கிழக்கைப் பிரித்த ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வொன்றைத் தயாரித்து, அதனை முன்வைப்பதற்கான இராணுவ அரசியல் சாதக நிலையைப் பார்த்துக் காலம் கடத்தி நின்றது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் சிங்கள இனவாதத்துக்கும், இந்திய மேலாதிக்கத்துக்கும் மேல் விழுந்த அடியாகும். இதன் மூலம், சிறீலங்கா அரசாங்கத்தினதும் சமாதான முகமூடி கிழித்தெறியப்பட்டு அதன் இராணுவ வாதம் தோலுரித்துக் காட்டப்பட்டுள்ளது.

அடுத்த நகர்வை எடுக்க வேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. போரின்மூலம் தமிழ்மக்களின் அபிலாசைகளை குழிதோண்டிப் புதைத்து விடலாம் என்ற அரசாங்கத்தின் கற்பனைக்கு மாற்றான, யதார்த்தமான, நடைமுறைச் சாத்தியமான சமாதான முன்னெடுப்புக்களை அரசாங்கம் இனிமேலாவது மேற்கொள்ளல் வேண்டும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## சந்திரிகா கூறும்

# ‘கௌரவமான தீர்வு’



## தலைகீழாகவா? சரிநேராகவா?

“சிங்கள மக்களின் உரிமையைப் பாதிக்காத தீர்வு”, “சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு”, “கௌரவமான தீர்வு” இப்படியாகத் தீர்வு பற்றிப் பல அடைமொழிகளை திருமதி. சந்திரிகா விஜயகுமாரதுங்க கூறி வருகிறார்.

தமிழ் மக்களின் உரிமை பற்றிய பிரச்சினையைக் கதைக்குமிடத்து சிங்கள மக்களின் உரிமையைப் பாதிக்காதிருக்கவேண்டும் என்று சந்திரிகா அடிக்கடி கூறுகிறார்.

தமிழ் மக்களின் உரிமையைச் சிங்கள அரசு மீறுகின்றது. தமிழ் மக்களின் உரிமையை மீறாதிருத்தல் என்பதுதான் இங்குள்ள பிரச்சினை.

தமிழ் மக்களின் உரிமை என்பது சிங்கள மக்களின் உரிமையைப் பறித்தல் என்பதில்லை. தமிழ் மக்களின் உரிமை தமிழ் மக்களின் பிறப்புரிமை. ‘தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை நீக்கு’ என்பதுதான் இங்கு கோரிக்கையே தவிர ‘உங்களுடையவற்றை எங்களுக்குத் தாருங்கள்’ என்பதல்ல.

எமது உரிமையை மீறாதீர்கள் என்பதன் பொருள் உமது உரிமையைப் பறிப்பதென்பதில்லையே. அப்படியில்லையெனில் தமிழரின் உரிமையைப் பறிப்பதும் சிங்களவர்களின் உரிமைகளில் ஒன்று என்பது வாதமாகுமோ?

அடுத்து “சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு” என்பது தமிழர் தமக்குச் சொந்தமில்லாத ஒன்றை சிங்களவருக்குச் சொந்தமானதை, தமக்குப் பிச்சையாகத் தருமாறு இரந்து கேட்கும்போதுதான் தருபவனும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிலை எழுகிறது. தமிழ் மக்களின் உரிமையைச் சிங்கள மக்கள் அபகரிப்பதை நிறுத்தவேண்டும் என்று சந்திரிகா சொல்லும் நாள் வருமோ?

அடுத்து சந்திரிகா கூறும் “கௌரவமான தீர்வு” என்பதைப் பார்ப்போம்.

ஒடுக்குமுறையை நிறுத்துவதுதான் கௌரவம். அபகரிப்பைக் கைவிடுவதுதான் கௌரவம். உண்மை இப்படியிருக்க சந்திரிகா கருதும் “கௌரவம்” என்ன?

சிங்களத் தலைவர்கள் எப்போதும் பதங்களை தலைகீழாகவும், தமக்குச் சாதகமாகவும் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் எதனையும் ஒடுக்குமுறையின் கோணத்திலிருந்து பார்க்கிறார்கள். உதாரணமாக சிங்களத் தலைவர்கள் வடக்குக் கிழக்கு இணைப்பு என்னும் பிரச்சினை பற்றிக் கதைக்கிறார்கள். இங்கு பிரச்சினை இணைப்பு பற்றியதல்லவே; பிரச்சினை ஏன் பிரிக்கிறீர்கள் என்பதுதான். எனவே இங்கும் பிரச்சினை இணைப்புப் பற்றிய பிரச்சினை அல்ல; பிரிப்புப் பற்றிய பிரச்சினைதான். தமிழ் மக்களை நீங்கள் இரண்டாகப் பிரிக்கிறீர்கள். ஒடுக்குமுறையாளர்கள் எப்போதும் பொருளையும் பதத்தையும் தலைகீழாக்குவது வழக்கம். உதாரணமாக இந்தியா ஈழத் தமிழ் மக்கள் மீது இராணுவ ஒடுக்குமுறைகளைப் புரிந்த காலத்தில் ஒடுக்குமுறை வானொலிச் சேவைகள் நடாத்தினார்கள். அந்த வானொலிச் சேவைகளில் ஒன்றிற்குப் பெயர் “அன்பு வழி” மற்றையதற்குப் பெயர் “நேசக்கரம்”. இந்த “நேசக் கரங்கள்” தமிழ் மக்களை எப்படிக் கொன்று குவித்தன என்பதை வரலாறு காட்டியது.

இப்படித் தலைகீழாகப் பிரச்சினைகளை விளங்காமல் பார்க்காமல் சரிநேராகப் பிரச்சினைகளை விளங்கவும் பார்க்கவும் வேண்டும். அதுதான் கௌரவமான தீர்வு.

**- சாரணன்**

சந்திரிகாவின் அரசு எரிபொருள் தடையை நீக்குவது, இராணுவக் கடல் வலயச் சட்டத்தைச் செயலிழக்கச் செய்வது, தென் தமிழீழத்தில் புலிவீரர் தமது பாதுகாப்பிற்காக ஆயுதங்களுடன் சென்று சமாதானப் பிரச்சாரம் செய்ய அனுமதிப்பது போன்ற குண்டுமணி அளவிலான சின்னப் பிரச்சினைகளையே தீர்த்துவைக்க முடியாது இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு இழுத்தடித்து காலம் கடத்துவது சர்வதேச நாணய நிதியம் - உலகவங்கி போன்றவற்றிலிருந்து வரும் உதவி கிட்டும்வரை தான் என்று யாராவது நினைத்தால் அந்த நினைப்பிலும் நியாயம் இருப்பதாகவே நமக்குப்படுகிறது.

நாங்கள் பேச்சுக்குத் தயாராக இருந்தோம். புலிகள்தான் குழப்பிவிட்டார்கள் என்று அயல் நாட்டுக்கும் உலக நாடுகளுக்கும் சொல்ல, ஒப்பனைக்கு இந்தப் பேச்சுவார்த்தை நாடகத்தை அரங்கேற்ற சிங்கள அரசு எண்ணுமேயானல் காலம் நிச்சயம் காட்டும்.

எங்களைப் பொறுத்தவரையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் கொண்டுவரும் உலங்குவானூர்தி இறங்குவதற்கான “எச்” வடிவிலான வெள்ளைக் கோடுகளை நாம் இன்னும் அழிக்கவில்லை என்பதிலிருந்து எம் சமாதான முயற்சிகளையும், முன்னெடுப்புக்களையும் சிறீலங்கா அரசு புரிந்து கொள்ளட்டும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இரண்டு தசாப்தங்களுள் இருளை வென்று



தமிழ் மக்கள், மாறி மாறி வந்த அரசுகளால் ஒடுக்கப்பட்டார்கள். பிறப்புரிமையான அவர்களது சுதந்திரம் பறிக்கப்பட்டது. இவ் ஒடுக்கு முறைக்கெதிராக அகிம்சைப் போராட்டங்களை தொடுத்து தோல்விகண்ட நிலையில் தமிழ் மக்கள் தக்க தலைவனின்றி தவித்தார்கள். காந்திய தலைவர்களின் கையாலாகத்தனத்தைக் கண்டு விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட இளைஞர்கள் புதுகரமான, புரட்சிகரமான ஒரு பாதையை விரும்பிய காலமது. அந்த வேளையில் புதிய தமிழ் புலிகள் என்ற இயக்கத்தை தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் ஆரம்பித்தார்கள். அதன் பின்பு 1976ம் ஆண்டு வைகாசி மாதம் 5ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எனப் பெயர்சூட்டிக்கொண்டு புதுவேகத்துடன் எழுந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டத்தின் மூலமே தமிழீழ விடுதலையை வெல்லமுடியும் என்ற அசையாத நம்பிக்கையைக் கொண்டிருந்தது. இலட்சிய உணர்வுடைய இளம் புரட்சிவாதிகளை அவ் இயக்கத்தில் அணி திரட்டி ஒரு புரட்சிகர வரலாற்றை படைக்கத் தொடங்கியது.

இந்த போராட்ட வரலாற்றில் சந்தித்த நெருக்கடிகளும், இழப்புகளும் சொல்லில் அடங்காதவை. அத்தனை துயரையும் வெற்றிப் படிகளாக்கினார் எமது தேசியத் தலைவர் அவர்கள்.

அடங்கி ஒடுங்கிக் கிடந்த பெண்ணினத்தைத் தட்டி எழுப்பி மகளிர் படையணியைக் கட்டி எழுப்பினார். சின்னாபின்னப்பட்டுக் கிடந்த தமிழினத்தை "நாங்கள் தமிழர்கள்" என்ற தேசிய உணர்வோடு எழுந்திடச் செய்தார்.

சிங்கள அடக்குமுறையாளர்களுக்கும் அவர்களது இராணுவத்துக்கும் சிம்மசொப்பனமாகவே எமது இயக்கம் விளங்கியது. புலிகள் இயக்கத்தின் வரலாற்றுச் சாவை பேராவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த சிங்களப் பேரினவாதம் தலைவரால் கட்டியெழுப்பப்பட்ட கடற்புலிகளின் எழுச்சியால் பலமாகத் தாக்குண்டது.

எமது மண்ணை அபகரித்து, எமது மக்களை தமது பாதங்களில் மண்டியிட வைத்துவிடலாம் என்ற அதன் பேராவலை புதைகுழிக்குள் இட்டார்கள் புலிகள்.

இரத்தத்தாலும், கண்ணீராலும் வளர்த்த எமது விடுதலையை அழித்துவிடும் நோக்கோடு இந்திய அரசு ஒரு போரையே தொடுத்தது. அவ்வல்லாதிக்க அரசின் கனவுகளைத் தகர்தெறிந்தார்கள் தமிழீழ மக்கள்.

இன்று உலகம் வியக்கும் உன்னத விடுதலைப் போராட்டமாகவும் அந்த விடுதலைப் போரை நிகழ்த்தும் உலகத்தின் மிகச் சிறந்த கெரில்லாத் தலைவராகவும் எமது தேசியத் தலைவர் போற்றிப் புகழப்படுகின்றார். இரு தசாப்தங்களுள் பல இன்னல்களைத் தாண்டி எழுந்த உலகத்தின் மிகச் சிறந்த விடுதலை இயக்கமாக விளங்கி நிற்கின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# கேள்வி - பதில்

தவராஜா - பரிஸ்

**இம்முறை நடந்துகொண்டிருக்கும் பேச்சுவார்த்தை தோல்வியடைய நேர்ந்தால் தொடர்ந்தும் சிறீலங்கா இனவாத அரசுடனான பேச்சுவார்த்தை தொடருமா?**

பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்த்து வைக்கப்படுவதற்கே தொடர்ந்து விடுதலைப் புலிகள் முயற்சிப்பர். எனினும், இராணுவத்தீர்வு என்ற இலக்கினை நிறைவேற்ற பேச்சுவார்த்தை அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படுமானால், இன்னொரு போர் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

சிவானந்தன் - பரிஸ்

**தற்போது கொழும்புத் தமிழ் குழுக்களின் குரல்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஏற்றுக் கொள்வது போன்று ஒலிக்கின்றனவே அது எப்படி?**

சர்வதேச சமூகமே தமிழீழ விடுதலைப் புலிகளை, ஈழத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக அங்கீகரிக்கும் சூழ்நிலை உருவாகும் இக்காலகட்டத்தை இக்குழுக்களும் தெளிவாகப் புரிந்துகொள்கின்றன என்பதே அர்த்தம். விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நிலவும் சமபல நிலை, விடுதலைக்குச் சாதகமாக இன்னும் மாறும்போது, இக்குழுக்கள் தங்களைக் கலைத்துவிடும் சந்தர்ப்பமும், அதன் உறுப்பினர்கள் விடுதலைப் போராட்டத்தில் இணையும் போக்குமே இனிமேல் அதிகரிக்கும்.

தமயந்தி - பரிஸ்

**சிறீலங்காவில் இராணுவ ஆட்சி ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளனவா?**

சிறீலங்காவில் 3 முறை இராணுவப் புரட்சிக்கான முயற்சிகள் இடம்பெற்று இருக்கின்றன. இறுதியாக இவ்வரசாங்கம் பதவிக்கு வரும் சந்தர்ப்பத்தில் நடந்தது. இராணுவத்தை அரசியல் மயப்படுத்தும் வேலையை (Politicization) தீவிரமாக்கியவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவே. உள்நாட்டுப் போரின் விளைவாக அரசியலில் இராணுவ ஆதிக்கம் மேலும் அதிகரித்திருக்கிறது. சிங்கள மேலாண்மையைப் பாதுகாக்கவென இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்பு இருக்கவே செய்கிறது.

ராஜா - பரிஸ்

**ருவாண்டாவில் சிறுபான்மை இன ரூட்சி தீவிரவாதிகள் பெரும்பான்மையின ஹுட்டு அரசைக் கவிழ்த்தமை பற்றி தங்களின் கருத்து என்ன?**

ருவண்டாவில் இடம்பெறுவது இனமரபுக் குழுக்கள் (Tribal) இரண்டுக்கிடையிலான முரண்பாடு. சிறுபான்மைக் குழுவோ, பெரும்பான்மைக் குழுவோ எது வாயினும் ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்த முற்படும் போது, அது இனப்படுகொலைக்கும், உள்நாட்டுப் போருக்கும் வழிவகுத்துள்ளதை ருவண்டாவிலும் பார்க்கிறோம். அதில் சிறுபான்மை ருட்சி குழுவினர் இறுதியில் வெற்றிபெற்று ஆட்சி அமைத்துள்ளதையும் பார்க்கிறோம்.

அங்கு தற்போது நிலவும் சிறுபான்மைக் குழுவின் ஆதிக்கம் தற்காலிகமானது என்பதையும் அனைவரும் அறிவர். இது இன்னொரு உள்நாட்டுப் போருக்கு வழிவகுக்காமல், இரண்டு இன மரபுக் குழுக்களின் தலைமைகளும் கூடி ஆராய்ந்து பொருத்தமான தீர்வினைக் கண்டறிதலே நல்லது.

சுரேஷ் - ஜேர்மனி

**இந்திய இராணுவ பலத்தினால் இந்தியா விரும்புகிறபடி எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட முடியுமென்று கருதுமாயின் இந்தி**



மோதல் தவிர்ப்புக் கண்காணிப்புக் குழுவினருடன் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**யாவிலும் பார்க்க இராணுவ பலம் கூடிய வல்லரசுகள் தாம் விரும் புகின்றபடி இந்திய அரசியலில் ஆதிக்கம் செலுத்த நேரிடுமா?**

இந்தியா அணு ஆயுத ஏவு கணை வல்லாதிக்க சக்தியாக 21ம் நூற்றாண்டினுள் நுழைந்துகொண் டிருக்கிறது. அந்த நிலையில், தன் னைச் சூழ உள்ள நாடுகளை, மக்க ளைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் எமது போராட்டத்தை நசுக்கவே முற்படும்.

தற்போது, ஒரேயொரு பெரும் வல்லரசாக (Super power) அமெரிக்கா விளங்குவதால் அது பொருளாதாரம், தொழில்நுட்பம், அரசியல், இராணுவம் ஆகிய துறைகளில், தனது ஆதிக்கத்தைப் பல்வேறு வழிகளில் இந்தியா மீது செலுத்தவே முற்படுகின்றது. ஆயி னும் இது இந்தியாவை அடிபணிய வைக்காது. 21ம் நூற்றாண்டில், பொருளாதாரத்தை பிரதான அடிப்படையாகக் கொண்டு பல வல்லரசுகள், வல்லரசுக் கூட்டுகள் பல்வேறு பிராந்தியங்களில் ஏற் படும் சந்தர்ப்பங்களும், அவற்றிற் கிடையிலான போட்டிகளுமே நிலவும் என எதிர்பார்க்கலாம்.

சிறீதரன் - கனடா

**குஷ்புவையும், ஜெயலலிதாவை யும், ரஜனிக்காந்தையும் தெய்வமா கக் கும்பிடுகிற அளவுக்குள்ள தமிழக மக்கள் பற்றியும் தமிழகத் திலுள்ள அரசியல் தலைமைகள் பற்றியும் தங்கள் கருத்தென்ன?**

தமிழகத்தில் சினிமா மோகம் நிறைந்திருப்பதும், சினிமா நடிகர் களை தலைவர்களாக ஆக்கும் போக்கு இருப்பதும் வாஸ்தவம் தான். தமிழ் நாட்டில் 50 வீதம் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கும் நிலையில், அம் மக்கள் தம் பிரச்சினைகளில் இருந்து தப்பும் மார்க்கமாகவே (Escapism) இதனையும், பெரும்பாலான மக்களுக்குப் படிப்பறிவு இன்மை யையும் அடிப்படையாக வைத்து, தமிழக மக்களை நிரந்தர அடிமை களாக்கும் நோக்குடன் சினிமா, மேலாதிக்க சக்திகளால் நன்கு பயன்படுத்தப்படுகின்றது. மக்க ளுக்கு உண்மைகளை மறைத்து, மயக்கிச் சுரண்டும் ஊடகமாக தற்போது சினிமா. தன்மானமுள்ள தமிழ்ச் சமூகத்தின் உருவாக்கமே இச் சீரழிவுக் கலாச்சாரத்தை நீக்குவதோடு, நல்ல அரசியல் தலைமையையும் மக்களிடமிருந்து உருவாகும். இம் மாற்றத்தைக் கொண்டுவர, இது பற்றிய பிரக்ஞை உள்ளோர், முழுமையான தன்னீகத்துடன் செயல்பட வேண் டும். அதற்குச் சினிமாவும் பயன் பட வேண்டும்.

தீபன் - சுவிஸ்

**சந்திரிகா பாரிஸ் மாநாட்டில் கலந்துகொள்ளும் வரையே சமா தான முயற்சிகளில் அக்கறை உடை யவராக இருப்பாரென்று கூறப் படுகிறதே?**

சமாதான வியூகத்தில், உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமும் முக்கியமான அம்சம்தான். வெளி நாட்டு நிதி உதவிகளோ, வேறு உதவிகளோ முண்டு கொடுக்க முடியாத பல்வேறு உள்நாட்டு காரணிகள், சந்திரிகாவை சமா தானப் பாதையில் உந்தியிருப்பதும் கண்கூடு. சிங்கள மேலாதிக்க வரையறையைத் திணிக்க சந்திரிகா விரும்பினால், அது இராணுவத் தீர்வாலேயே சாத்தியமாகும். அப்போது, சமாதான வியூகமும், போர் வியூகமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்று உணர்ந்து கொள்வோம். ஆனால் எந்த வியூகமும் சந்திரிகாவிற்கு கை கொடுக்கப் போவதில்லை.

பாபு - பரிஸ்

**சமஷ்டித் தீர்வு பற்றி பேசுகிறீர் களே? தமீழீழ உருவாக்கத்தில் நம்பிக்கையில்லையா?**

தமிழீழத் தனிநாடுதான், தமிழ் மக்களுக்குப் பூரண சுதந்திரத்தைக் கொண்டுவரும் என்று நாம் நம்பு கின்றோம். இதே சுதந்திரத்தை தற்போதைய அரசிற்குள் நாம் அனுபவிக்கலாம் என்று சமாதா னம் பேச வந்த அடக்குமுறை அரசாங்கம் கூறுகின்றது. அப் போது அதற்கான தீர்வுத் திட்ட மாக ஒரு சமஷ்டி அமைப்பு முறையையாவது உன்னால் தர முடியுமா, நாம் பரிசீலிக்க என்று கோருவதாகவே விடுதலைப் புலிக ளின் நிலைப்பாடு உள்ளது.

❒❒

**அமைதி காக்கவென வந்தவர்கள்**
**எங்கள் மண்ணை ஆக்கிரமித்த போது**
**அனலாக எழுந்த வீரனே!**

**புலியென ஆகி**
**போர்முரசறைந்து எதிரியை**
**புறமுதுகிட்டு ஓடச் செய்தவனே**

**எங்கள் மண்ணையும்**
**மக்களையும்**
**இரு கண்கள் என நேசித்து**
**தென்றலாய் திரிந்தவனே**

**நீயும் உனை ஒத்த வீரர்களும்**
**எழுகின்ற ஈழமண்**
**யார்க்கும் பணியாது**




17-5-1989 கொக்குவிலில் இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## இன்னல்கள் தொலைந்து...

# 'புனித பூமி'

## சிறுவர் கல்வி நலன் காப்பகம் முத்தையன்கட்டு - முல்லை

சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் இராணுவம் ஏற்படுத்திய காயங்கள் என்றும் ஆறாதவை. ஒரு இனத்தின் மீது எத்தகைய கொடிய துன்பியலை எழுத முடியுமோ அந்தளவிற்கு அது தன் கோரத்தைப் பதித்தது. தாய், தந்தையின்றி அனாதரவாக்கப்படும் சிறுவர் சிறுமியர்கள் கவனிப்பாரற்று போய்விடுவதன்மூலம் எதிர் காலத் தமிழீழச் சமுதாயம் பலமற்றதாக, ஆரோக்கியமற்றதாக, மீள முடியாத கொடிய இருளில் சிக்கித் தவிக்கும் என்று எதிரி நீண்டகால நோக்குப் பயன் கருதிப் பல கொடுமைகள் இழைத்தான.

தமிழ்த் தேசியம் தழைத்து ஓங்கிச் செழிப்பதை அவன் தனக்கு ஆபத்தாக கருதினான். தமிழ்ச் சிறுவர்கள் வீதிகளில் தெரு நாய்கள் போல் அலைவதையும், பிச்சை எடுத்துப் பிழைப்பதையும், சமூகத்தில் வாழத் தகுதியற்றவர்களாகி விடுவார்கள் எனக் கனவு கண்டான்.

ஆனால் இன்று சிறீலங்காவிலேயே சிங்களச் சிறுவர் சமூகமானது தன் வாழ்வை இழந்து கொடிய இருளில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றது.

போரினால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அழிவைப் பார்ப்பதா? பொருண்மியத் தடையை உடைப்பதா? போஷாக்கின்மைப் பிரச்சினையைப் பார்ப்பதா? அகதிகளைப் பராமரிப்பதா? பிரச்சினை விளையும், சிக்கல்களையும், நெருக்கடிகளையும் எதிர் கொண்டு எதிர் நீச்சல் இடுகிற ஒரு வலிமை எமது சமூகத்தின் உறுதியான ஆயுதமானது.

இத்தகைய உறுதியான முன்னெடுப்புக்களில் ஒன்றாக, முல்லை மாவட்டத்தில் முத்தையன்கட்டில் உள்ள சிறுவர் கல்வி நலன் காப்பகம் விளங்குவிக்கின்றது.

போரினால் தமது தாய், தந்தையரை இழந்த சிறுவர்களின் காப்பகமாகத் திகழும் அந் நிலையம் இரண்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இயங்கிக் கொண்டிருக்கின்றது.

வற்றாத ஜீவ நதிக்கு அண்மையில் முத்தையன்கட்டில் நெஞ்சறை எனப் புகழப்படும் வலதுபுறமா உள்ள நதிக் கரையிலே சிறீலங்கா ஆக்கிரமிப்புப் போரினால் தாய், தந்தையரை இழந்த அந்தச் சிறுவர்கள் தம் கவலைகளை மறந்து குதூகலமாய் ஆடிப் பாடி மகிழ்கின்றார்கள்.

குயில்களும், கிளிகளும் பாடும் பசுமை நிறைந்த அந்தத் தென்னம் சோலையிலே உள்ள 'புனித பூமி' சிறுவர் கல்வி நலன் காப்பகம், தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனை ஊற்றிலே உதித்து முல்லை மாவட்டத்தின் சிறப்புத் தளபதி, தமிழீழ விடிவுக்கு வித்தாகிப்போன லெப். கேணல் அன்பு அவர்களின் செயற்திட்டத்தில் அருவியாய் உருவெடுத்துள்ளது. மாவட்ட அரசியல் பொறுப்பாளர்களினதும் முல்லை மக்களினதும் அயராத முயற்சியினால் வேரூன்றி செழித்தோங்கி நிழல் தந்து புனித பூமி வளர்ந்து வருகின்றது.

அன்புடன்
எரிமலை வாசகர்களுக்கு,

எரிமலை இதழ், அடுத்த கட்ட வளர்ச்சி நிலைக்குச் செல்ல வேண்டியமை பற்றி எரிமலை வாசகர்கள் அவ்வப்போது கடிதங்கள் மூலமும், நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும், உறுப்பினர்கள் மூலமாகவும் தங்களது கருத்துக்களை எமக்குத் தெரியப் படுத்தியுள்ளீர்கள்.

இதன் பொருட்டு எரிமலையின் வடிவமைப்பில் புதிய தன்மையைக் கொண்டுவர முனைந்திருக்கின்றோம். உலகெங்கிலும் வாழும் புலம் பெயர்ந்த தமிழ் மக்களிடம் எரிமலை சென்றடைய வேண்டும் என்பதே எமது பேரவா.

**எரிமலை வாசகர்களே!**

எரிமலை குறித்த அபிப்பிராயங்களையும், விமர்சனங்களையும் எமக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.

எரிமலையின் சிறுகதைப் போட்டியில் பங்கு கொள்ளுங்கள்.

கார்ட்டூன் சித்திரங்கள் வரையவல்ல ஓவியர்களே! கார்ட்டூன் சித்திரங்களை வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களின் ஆர்வமுள்ள ஒத்துழைப்பே எரிமலையை மென்மேலும் பலப்படுத்தும்.

ஆற்றல்மிகு தலைவரின் வழிநடத்தலில் எமது மண் செழுமை பெற்று ஓங்கி வளர்ந்து வருகின்றது. எமது மண்ணைப் பற்றியும், எமது மக்களைப் பற்றியும், அவர்களது துன்ப துயரங்களையும் சதா அறிந்தும், அவர்களோடு தோளோடு தோள் நிற்க வேண்டிய வரலாற்றுக் கடமை குறித்தும் விழிப்போடு இருந்து செயற்படுங்கள். அயராது உழையுங்கள்; விடுதலை தூரத்தில் இல்லை.

எரிமலை ஆசிரியர் குழு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நரபலி எடுத்தவனும், உயிர்விலை கொடுத்தவனும் தராசுத்தட்டில்... சமனாக முடியாது!

மேகக் கூந்தல் காற்றில் விரிய
வந்திறங்கி வரமளிக்கும் தாயே!
வருக!
"ஒலிவ்" கிளை சுமந்த சமாதான தேவதையே!
உலங்கு வானூர்தியில் வந்திறங்குகின்றாயே
வணக்கம் வருக.
உன் பூம்பாதங்கள் புண்படலாகாதென்று,
செங்கம்பளம் விரித்துவைத்துள்ளோம்.
அச்சமின்றி நடந்துவருக.
முள்ளேதும் குத்திவிடக்கூடுமென்று
நேற்று
பாதையெங்கும் பஞ்சுகொண்டு ஒத்தியெடுத்தோம்.
மஞ்சள் தெளித்து மலர்தூவி வைத்துள்ளோம்.
பேச்சுவார்த்தைக்கு வந்த பேரழகியே!
புன்னகைத்தபடி வருக.
பார்;
உன் பக்கத்தில்
யார் நிற்கிறார்கள்?
எங்கள் சீருடைச் செல்வங்கள்.
"மூத்திரம் பெய்யத் தெரியாத பையன்கள்"
இவர்களை
தெற்கில் இப்படித்தான் சொல்லுகின்றனர்.
பக்கத்தில் அழைத்துப் பார்த்துக்கொள்.
மீசை முளைக்காத முகங்களைப் பார்.



உற்று நோக்கினால்....
உன் விழிகள் கூசும்.
நெருப்பைச் சுமக்கும் நிலவுகள் இவர்கள்.
பூநகரிக்குள்ளே புகுந்த
புயல்கள் இவர்கள்தான்.
மண்கிண்டிமலை இவர்களிடம்தான் மண்டியிட்டது.
சிங்கத்தின் பிடரிமயிரைப் பிடித்து
உலுப்பிய சிறுவர்கள்.
எதிரி இறங்கினால் எரிந்துபோகக்கூடிய
மணலாற்றில் பாயும்
அனலாறு இவர்கள்தான்.
அனிச்சம் பூவிலும் மென்மையான முகங்களை
கொலை வெறியரென்று ஏன் குறிப்பிடுகின்றனர்?
இந்தப் பூக்களா யுத்தப் பிரியர்கள்?
காலத்தின் சுமையை தோளிற் சுமக்கும்
"இந்திர சித்துக்கள்"தானே இவர்கள்.

## உலைக்களம்

**வியாசன்**

மேசையில் அமர்ந்து பேசலாம் தாயே!
வலதுகாலை எடுத்துவைத்துப் படியேறி,
நேரே நிமிர்ந்து பார்.
சுவரில் தெரிவது யார்?
புலித்தலைவன் பிரபாகரன்.
உற்றுப்பார்
முகத்தில் உலகமே தெரியும்.
இந்த முகத்தையா கெந்தகம் என்கிறார்கள்?
இனிப் பேசத்தொடங்கலாம் பெருமாட்டி.
பூநகரிப் பாதை திறப்பு
பெற்றோல் மீதான தடையை நிறுத்து.
'செஸ்' விளையாடத் தெரியுமா சீமாட்டி?
ஆயின் கையை நகர்த்து.
தவளை பாய்ந்த தங்கத்தை கேட்பதினால்....
நிலமை மோசமென்று நினையாதே.
புலிகளின் பலம்தான் பேசுகிறது.
பலவீனம் மேசைக்கு வரவில்லை.
பேச்சுவார்த்தை தோற்றுப் போனால்...
தோற்ற இடத்திலிருந்து தொடரும் எம் போராட்டம்.
பேச்சுவார்த்தை கூடப் போராட்டம்தானே!
தூதுக்கு வந்த தேவதையே!
ஏது; பேசமறந்து இருக்கின்றாய்.
வாயைத்திறந்து வார்த்தைகளை வரவிடு.
அடிமனத்தின் ஆழத்தைக் காட்டு.
பொய்யாகக் கைகுலுக்குவதிலும் பார்க்க
போர்க்களத்தில் சந்திப்பதே பெருமை தரும்.
குருவிகள் கொத்துப்பட நேர்ந்தால்
குறிப்பெடுத்துக் கொள்ளுதற்கு
வெளிநாட்டிலிருந்து
வெள்ளைக் கழுகுகள் வந்திருக்கின்றன.
நல்லது தாயே!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


பக்கத்து வீட்டுப் பாம்பிலும் பார்க்க
பசுபிக் சமுத்திரத்து "திமிங்கலங்கள்"
பரவாயில்லை.
சரி, பூநகரி பற்றியே பேசுவோம்.
குரங்கு வால் போல...
குடாக்கடலில் நீளும் பாதையிலும்
இறங்குதுறையிலும் இராணுவம் நிற்கிறது.
கயிற்றால் முறுக்கி
கழுத்தைத் திருகிக்கொண்டு
உயிரைப்பற்றி எப்படி பேசலாம்?
விடுதலையின் கரங்களில்
விலங்கைப் பூட்டிவிட்டு
சிறையுடைப்பிற்கு எப்படித் தேதி குறிக்கலாம்?
பூநகரி வெறும் பொட்டல் வெளியல்ல.
தமிழர் தாயகத்தின் சான்றுகள் புதைந்துள்ள
பழைய தலைவாசல்.
ஆழத் தோண்டினால் அரண்மனை தெரியும்.
வாழ்ந்து முடித்த வரலாறு தெரியும்.
நந்தி பதித்த நாணயம் கிட்டும்.
சொந்தம் எமதென்று 'தோம்பு' கிடைக்கும்.
கொடியுடன் ஆண்ட கொற்றவையின்
அத்திவாரத்தில் "அவர்கள்" மலம் கழிக்க
எப்படித்தாயே! இணக்கம் காணலாம்?
முப்பது வருட முகமறிவையும்,
நரலிழைகூட இற்றுப்போன உறவையும்,
நினைத்தவுடன் நெளிவுதட்டி
நிமிர்த்த முடியுமா?
விட்டுக்கொடுப்பும்
விரிந்த மனப்பான்மையும்
தட்டுப்பாடான "பேரினவாத"ச் சந்தையில்
எப்படி "இணக்கத்தை" இலகுவில் வாங்கலாம்?
நரபலி எடுத்தவனும்,
உயிர் விலை கொடுத்தவனும்,
தராசுத்தட்டில் சமனாக முடியாது.
நீதிக்கான போருக்கும்,
நியாயத்துக்கான பேச்சுக்கும்,
தர்மமே தலைமை தாங்கவேண்டும்.
பூநகரி ஒரு குறியீடு.
பூநகரி ஒரு சோதனைக் களம்.
எதையெதை "அவர்கள்" எமக்குத் தருவார்கள்
என்பதை அறியும் அளவுக் கருவி.
பேச்சுக்கு வந்த பெருமாட்டி!
போய்ச்சொல்லு.
நல்ல சமிக்ஞையாய்
நம்பிக்கை ஒளிகாட்டி,
பூநகரிப் பாதையின் பூட்டுக்களைத் திறந்து,
பெற்றோல் வண்டியை முதலில் விடச்சொல்லு.
அதன் பிறகே,
நடப்பன யாவும் நல்லன ஆகும்.
நன்றி.
சென்று வருக.

# மே 1

சிக்காக்கோ நகரில் பெருங்கடலென உழைக்கும் மக்கள் ஆர்ப்பரித்தெழுந்த நாள்தான் 1886 மே முதல் நாள்.

அதிகாலை முதல் அந்தி சாயும் வரை, என்பதுதான் அப்போதெல்லாம் வேலை நாள்.

இந்த அடிமைத் தழையிலிருந்து விடுபட எட்டு மணி நேர வேலை கேட்டுப் போராடிய இந்நாள் இன்று உலகமெங்கும் தொழிலாளர் எழுச்சி தினமாக கொண்டாடப்படுகிறது.

உழைக்கும் மக்களின் நலன்களைப் பேணுபவர்களும், அவர்களின் தலைமையை ஏற்றுக்கொள்பவர்களும் மாத்திரமே கொண்டாட உரித்துடையவர்களாவார்கள். ஆனால்;

உலகின் மூலை முடுக்குகளிலுமுள்ள வறிய, சிறிய நாடுகளையெல்லாம் தேடி தனது ஆதிக்கக் கரங்களுக்குள் பணியவைக்க முயலும் ஏகாதிபத்திய நாடுகளும்;

விடுதலைக்காகப் போராடும் மக்களை நசுக்கி, விடுதலை உணர்வையே பயங்கரவாதம் எனச் சித்தரிக்கும் பாஸிச நாடுகளும்;

தனது மக்களின் உழைப்பையே மூலதனமாக்கி அரச கட்டிலில் தனது ஆட்சியை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும் ஆளும் வர்க்கங்களும்;

இன்று மேதினத்தை விமரிசியாகக் கொண்டாடி மேதினத் திற்குப் புதுப்புது அர்த்தங்கள் கற்பித்து வருகின்றன.

மேதினத்தை கேளிக்கை தினமாக மாற்றுவதன் மூலம் இத்தினத்தின் முக்கியத்துவத்தை சீர்குலைத்து வருகின்றன.

தெற்கில் சிறீலங்கா அரசு மேதினத்தன்று சினிமாப் பாடகர்களை வரவழைத்தும், திரையரங்குகளில் கட்டணக் குறைப்பை மேற்கொண்டும் தொழிலாள வர்க்கத்தின் விடுதலை யுணர்வுக்கு மாற்றுத் தீனி போடும் தந்திரோபாய நடவடிக்கை களைக் கையாளுகிறது.

வடக்கு - கிழக்கில் தொழிற்சாலைகளின் மீது குண்டுகளை வீசியும், தொழிற் புலங்களை, விளைநிலங்களை ஆக்கிரமிப்புச் செய்தும், பொருளாதாரத் தடை விதித்தும் எமது தேச விடுத லையின் முதுகெலும்புகளான தொழிலாள வர்க்கத்தினரை நலிவுபடுத்தும், உதிரிகளாக்கும் போருபாய நடவடிக்கைகளைக் கையாளுகிறது.



எதிரில் தெரியும் தடைகளெல்லாம் தகர்த்துவிடும் நம்பிக்கையில் எழுந்த பேரணி - 1994 மே 1

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பிரபாகரன் என்ற ஓர் இயக்கச் சக்தியின் உந்துதலே ஈழப்போர்

## தமிழீழத் தலைவருக்கு ஒரு தமிழனின் மடல்

*தமிழீழ விடுதலைப் புலிகளின்*
*தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களே,*

*வணக்கம்.*

நலம் உங்கள் நலம் பற்றி நானறிவேன். தமிழ் ஈழத்தின் விடுதலைக் காற்றே உங்கள் நலத்தை உயிர்ப்பிக்கும். அதுவரை உங்களுக்கு தனிப்பட்ட நலமேது?

இந்த உருண்டை பூமியில், தமிழன் வாழ்கிறான் என்ற பட்டறிவு மதிப்பீட்டை பிற இனத்தவருக்கும் பிற நாட்டவருக்கும் உணர்த்திக்கொண்டிருக்கும் தமிழினத் தலைவர் நீங்களே!

உலகிலுள்ள பல நாடுகளில் தமிழன் இருக்கிறான். ஆனால், தமிழன் வாழ்கிறான் - தமிழனுக்கும் வாழ்வும் சாவும் நிகழ்கின்றது என்பதை பறைசாற்றிக் கொண்டிருப்பது உங்கள் போராட்டமே.

உலகெங்கிலுமுள்ள தமிழன் போராடிப் போராடியே ஓய்ந்துபோன இனமாகவும், சோர்வையே போர்வையாக்கித் தூங்கிக்கொண்டிருக்கும் இனமாகவும் காட்சியளிக்கிறான். இந்நிலையைத் தான் பிற இனத்தாரும் நாட்டாரும் நம்மைப் பற்றி அறிந்துகொண்டது.

தமிழன் என்பவன் வாழ்வியல் நிலை பெற்றவன். அவன் பிறருக்கு முன்னோடி வாழ்வு வாழ்ந்தவன். வாழ்வினையால் மறைக்கப்பட்டும், மறக்கப்பட்டும் உள்ளான் என்பதை உலகில் எத்தனை பேர் ஒப்புக் கொள்வர்?

தமிழீழத் தலைவர் அவர்களே,

நீங்கள் தமிழீழத்திற்கு மட்டும் தலைவர் அல்ல. ஒரு சிறு கூட்டிற்குள் உங்களை அடைத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் ஒரு தேசியத் தலைவர் அல்ல. உலகளாவிய தலைவர். இடைக்கால தமிழனுக்குரிய உரிமையைப் போராடிப் பெற்றவர். தன்மான உணர்வுள்ள ஒவ்வொரு தமிழனுக்கும் நீங்களே தலைவராக இருக்கின்றீர்கள்.

ஈழப்போர் என்பது ஈழத்தமிழனின் போர் மட்டுமல்ல, உலகில் எங்கெங்கு தமிழன் வாழ்கிறானோ அங்கெல்லாம் இப்போர்முழக்கம் உருப்பெறுகின்றது. பல வேளைகளில் போர் இலக்கியமாகவும் - சில வேளைகளில் போர் வாழ்வியலாகவும் இருந்து வந்துள்ளது இனப் போர்,



**தேசியத் தலைவர் வே. பிரபாகரன்**

இன வளர்ச்சியின் முதல் முனைப்பாகவும்
இன உயர்வுக்கான பற்றுச்சீட்டாகவும்
ஒரு தேசியத்தின் முதல் மூச்சாகவும்
புரட்சியின் முதல் வித்தாகவும் இருக்கவேண்டும்.

போர் என்பது புறநானூறு - அகநானூறு காட்சியாகக் கண்டு களித்த தமிழன், இப்பொழுதுதான் போர் என்பது நாளைய செழுமைக்கான இன்றைய புண் என்பதைத் தெரிந்துகொண்டான்.

உலகில் எந்த வளர்ச்சி புண்படாமல் தொடங்கியுள்ளது.

புல்லின் முனைப்புக் கூட மண்ணை கிழித்துத்தானே புறப்பட்டுள்ளது.

இன்றைய நாகரிகம் எத்தனை அநாகரிகத்தின் பிணமேட்டில் தொடங்கப்பட்டுள்ளது!

சிற்பம் என்பது சிதைபட்ட கல்லின் வெற்றிதானே
குழந்தை என்பது தாய் வயிற்றின் கிழியல் தானே.

இப்படியாக ஒவ்வொரு வளர்ச்சியும் ஓராயிரம் சிதைவுகளுக்குப் பின்தானே உருப்பெற்றுள்ளது.

தமிழனின் பெருந்த தலைவன் அவர்களே,

உலகெங்கிலுமுள்ள தமிழனுக்கு ஏற்படும் வாழ்வியல் போராட்டங்கள் ஏறத்தாழ ஒரே அச்சில் வார்த்த

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



வடிவமாகவே காட்சியளிக்கின்றன:

உரிமைப் போராட்டம்
மொழிச் சிதைவு
அரசியல் ஏமாற்று
உணர்வு மறுதலிப்பு
பண்பாட்டுச் சீரழிவு
பொருளியல் தாழ்வு....

இப்படியாக தமிழன் குறைபாடுகள் நீண்டு கொண்டே போகின்றன. இவை யாவும் இயல்பான இயற்கை நிலையில் நீள்வதல்ல. மாறாக நன்கு திட்டமிடப்பட்டு செயற்கையாக உருவமைக்கப் படுகின்றது. தமிழனின் தாழ்வு மனப்பான்மையைப் பயன்படுத்திக்கொண்டு வகுக்கப்பட்ட குறைபாடுகளே இவை. பல வேளைகளில் தமிழன் இதற்கு சோரம் போய் உள்ளான்.

அன்றாட வாழ்வியலில், சிறு செயலுக்குக் கூட தமிழன் பெரும் போராட்டம் நடத்தியாக வேண்டு மென்ற நிலை உள்ளது. நம் உரிமையை நமக்குக் கொடுப்பது பாவமென்று நினைக்கும் கூட்டம் உள்ளது. இதற்கு தக்க சான்று உங்கள் போராட்டமே.

இந்நிலையில், தமிழன் தாழ்ந்தவன் - குட்டக் குட்டக் குனிபவன் - அடிமை மனப்பான்மை கொண் டவன் - வாளா வாயினன் - தன் இனத்தை வீழ்த்தப் பேரம் பேசுபவன் என்ற இழிவுக்கூறுகளையெல்லாம் ஒரே மூச்சில் ஒடித்துப் போட்டது ஈழப் போர்.

நன்குணர்ந்து சொல்லவேண்டுமானால், போரை தமிழன் இலக்கியமாகக் கண்டான் - ஆனால் நீங்கள் தான் வாழ்வாகக் கண்டீர்கள்!

தலைவர் வே. பிரபா அவர்களே,

தமிழன் தன் உணர்வைப் போலித் தாலாட்டுக்களில் பொத்தி வைத்திருந்தான். கடந்த பத்தாண்டுகளுக்கு மேலான, உங்களது போராட்டமே உலகிலுள்ள பெரும் பாலான தமிழனை உணரவும் உணர்த்தவும் செய்துள் ளது.

அதன்பிறகுதான், தமிழன் தன் வாழ்வை எண்ணி எண்ணி வருந்தியுள்ளான். தனக்குரிய உரிமை தான் அறியாமலே மறைத்துவைக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்தான். கிடைத்தவரை போதாது; கிடைக்க வேண்டியது இன்னும் ஏராளம் என்ற அரிய விழிப்புணர்வைப் பெற்றான். தன் இன வாழ்வை பிற இன வாழ்வோடு ஒப்பு நோக்கும் திறன் பெற்றான்.

இவற்றுக்கெல்லாம் காரணமாக இருந்தது ஈழப் போர். பிரபாகரன் என்ற ஓர் இயக்கச் சக்தியின் உந்து தலே இதற்கு காரணம் என்பதை அறியும் போது மனம் கசிகின்றது.

தலைவர் அவர்களே,

ஓர் உயிரின் உண்மைச் சுதந்திரம் எது தெரியுமா?

அவன் சுவாசிக்கும் காற்று, அவன் நிலத்திலிருந்து புறப்பட்ட தென்றலாகும்போதுதான் - உயிர்மையின் உண்மை விடுதலையாகும்.

இது வரை நீங்கள் புரிந்துள்ள சாதனைகள் அரியது. இன்ச் சாதிக்கப்ப போவதே சரித்திரமாகும். சாதித்ததைக் கொண்டு சாதனைக்குப் புறப்பாடு செய்துள்ளீர்கள். உங்கள் சாதனையில் உச்சரிக்கப் போவது பிரபாகரன் என்ற தனிப்பெயரல்ல - தமிழன் என்ற பெரும் சக்தி. எண்ணிலடங்கா இன்னல்களை தோள்களில் தூக்கிக்கொண்டு சுமந்துள்ளீர்கள். உங்கள் சோதனைக்குரிய சாதனை வெகு தூரமில்லை. தொடருங்கள்....

உங்கள் சுவாசிப்பில் தமிழன் விழித்துக்கொண்டான்.

இனி நாங்கள் விழித்ததோடு வினையாற்றலும் அவசியம்.

சமாதானங்கள் நம்மை நாடி வருவதாக அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி. ஆனால் இது வழுக்கல் நிறைந்த உடன் படிக்கை. ஓரினத்தின் உயிர்மூச்சை உறுதிப்படுத்தும் உடன்படிக்கை.

இதுவரை நீங்கள் நடந்தது கரடுமுரடான பாதை. இதில் வழுக்குவதற்குச் சாத்தியமில்லை. ஆனால் இப்போது நீங்கள் நடக்கவிருப்பது களிமண் பாதை - வழுக்குவதற்கு இடமுண்டு. உங்களை வீழ்த்துவதற்கான சூழ்ச்சிகளும் முயற்சிகளும் முன்னோடியாக்கப்பட்டுள் ளன.

எங்கள் இனிய தலைவர் அவர்களே,

உங்கள் பொறுப்பு மிகப் பெரியது - அரியது
வீரமும் இனமானமும் ஈடேற்றும் பொறுப்பு

நிதானத்தைக் கடைப்பிடித்து, நல் ஆலோசனை பெற்று சீரிய முடிவெடுங்கள்.

உங்கள் கையில் உள்ளது வெறும் பேனாவல்ல. தமிழ் இனத்தின் தலையெழுத்தை எழுதிடும் தூரிகை.

வெற்றி நம்மைச் சேரட்டும்!

*அன்புடன்*
*சீ. அருணாசலம்*
*பகாவ், மலேசியா*

"......தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு. தமிழீழ இலட்சியத்திற்காகவே நான் தொடர்ந்து போராடுவேன் என்பதையும் நான் இங்கு திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை. எமது இலட்சியம் வெற்றி பெறுவதானால் எமது மக்களாகிய உங்களின் ஏகோபித்த ஆதரவு என்றும் எமக்கு இருக்கவேண்டும்...."

*(தலைவர் பிரபாகரனின் கருத்துத் தொகுப்புக்கள் அடங்கிய "எனது மக்களின் விடுதலைக்காக.." என்னும் நூலிலிருந்து)*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# வண. பிதா க. பிரான்ஸிஸ் ஜோசப் அடிகள்

**மனித நேயமும் இந்த மண்ணின் மீது பாசமும் கொண்ட வண. பிதா. பிரான்ஸிஸ் ஜோசப் அடிகள் நீண்ட காலமாக புனித சம்பத்தரிசியார் கல்லூரியின் அதிபராகப் பணிபுரிந்தவர். தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவராக இருந்து தமிழீழ மக்களின் கல்வி வளர்ச்சிக்கு அளப்பரிய தொண்டாற்றி வருபவர். தமிழீழ விடுதலைப் போரின் நியாயத்தை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று அவாவுறும் இவர் எங்களின் போராட்டத்துக்குக் குரல் கொடுப்பவர். தமிழிலக்கியத்தில் ஈடுபாடும் புலமையும் மிக்க இவரை இவரது ஆயர் இல்லத்தில் சந்தித்தோம்.**

**✍ முதலில் உங்களது இளம் பராய வாழ்க்கை பற்றியும் அந்த வாழ்க்கையில் நீங்கள் பெற்ற அனுபவங்கள் பற்றியும் விபரித்துக் கூறுங்கள்:**

✎ ஒரு ஏழ்மைக் குடும்பத்திலேயே பிறந்தேன். நான் பிறந்த இரண்டு மாதத்தில் தந்தை இறந்து விட்டார். தனிப்பிள்ளையாகிய என்னை தாயாரே வளர்த்தார். திருமணம் செய்து இரு வருடங்களுக்குள் தன் கணவனை இழந்த என் தாயாரின் பெயர் அருளப்பு அன்னம்மா. நான் பிறந்த காலத்திலிருந்து இந்த அறுபத்தொரு வருடங்களாக அவர் விதவையாகவே இருந்து வாழ்ந்து வருகிறார். அவரின் இறைபக்தியும், என்னை வளர்த்த முறைமையும் இன்றும் எனது வாழ்வுக்கும், மனதுக்கும் உந்துசக்தியாக இருக்கின்றன. தான் வறுமையில் மிகவும் உழன்றபோதும் எனது தேவைகளுக்காக என்னை ஒருபோதும் அங்கலாய்க்க வைத்ததில்லை. அன்று தாழ்த்தப்பட்ட சமூகம் என்று சொல்லப்படும் சமூகத்தைச் சேர்ந்த நான், சென்பற்றிக்ஸ் கல்லூரியில் சேர்ந்து படிக்க வாய்ப்புக் குறைவு. என்னுடைய தாயாரின் பரித்தியாகமும் ஊக்கமும்தான் எனக்கு கல்லூரி வாய்ப்பையும், இந்த வாழ்வுக்கான ஊக்கத்தையும் தந்தன. தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து (எங்கள் மறைமாவட்டத்தில்) சேவை செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குரு நான்தான் என நினைக்கிறேன். இது ஒரு வகையில் பெருமையும்தான். என்னுடைய மாமனார் தந்தையாரின் நிலையில் இருந்து என்னை நெறிப்படுத்தியவர். அவரும் இன்று குருவானவராயுள்ளார். அவர் பல இடர்பாடுகளின் மத்தியில் பெற்றிருந்த ஆங்கில அறிவுதான் என்னை ஆளாக்கியது. ஆனால் அவர் பெற்ற இடர்களை நான் பெறவில்லை. இந்த அடிப்படை தான் இன்று இந்த உரிமைப் போராட்டத்துக்கு, தேசிய உரிமைக்கு, மனித உரிமைக்குக் குரல் கொடுக்கத் தூண்டுகிறது.

✍ நீங்கள் ஒரு துறவியாக வாழ்கின்ற போதும் இந்த மண்ணின் மீது அன்பும் அக்கறையும் கொண்டு செயற்பட்டு வருகின்றீர்கள். இந்தத் தேசப்பற்றுணர்வு ஏற்படுவதற்கான காரணிகள் என்னவென்று கூறமுடியுமா?

✎ நான் முன்னர் சொன்ன அடிப்படையிலேயே இந்த ஈடுபாடு வந்தது. ஒடுக்கப்பட்டவர்களுக்காக, உரிமை மறுக்கப்பட்டவர்களுக்காக கிறிஸ்து தனது பகிரங்க வாழ்வின் பணியை நோக்கமாகக் கொண்டார். இந்த வகையிலேயே எம்மையும் அழைத்துள்ளார். இந்தப் பின்னணியிலேயே மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் பணிசெய்ய என் உள்ளம் தூண்டுகிறது. எங்களுடைய வேதாந்தமும் அதையே சொல்லுகிறது.

✍ இந்தத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் மதங்களின் பங்கு எப்படி அமைய வேண்டும் என்பது பற்றி விளக்குவீர்களா?

✎ இந்த விடுதலைப் போராட்டம் முழுமனித சமூக விடுதலைப் போராட்டம். மதங்களும் முழு மனித விடுதலையை, மனிதனை அடக்கும் சகல சக்திகளிலிருந்தும் விடுதலை அடைவதையே நோக்கமாகக் கொண்டன. இந்தத் தேசிய விடுதலைப் போராட்டமும் பரந்த, முழுமையான நோக்கமுடையது. நாங்களும் எங்களால் இயன்றவரை எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டுக் கொண்டு முழுமனித விடுதலைக்காக உழைக்கவேண்டும். தேசிய விடுதலைப் போராட்டம் தனியே அரசியல் விடுதலைப் போராட்டமல்ல. அது ஒரு முழுமனித விடுதலைப் போராட்டம். அந்தந்த மதங்களுக்குள்ள வளங்களைப் பயன்படுத்தி இயலுமான வரையில், சக்திக்கேற்ற வகையில், இந்தப் போராட்டத்தில் பங்கேற்கலாம். உண்மை, நீதி என்பவற்றுக்காகக் குரல் கொடுக்கவேண்டிய பாரிய பொறுப்பு எமக்குண்டு. எங்கு நீதி மறுக்கப்படுகின்றதோ, எங்கு உண்மை மறுக்கப்படுகின்றதோ அங்கே எமது குரல் கிளம்பவேண்டும். துயர்ப்படும், துன்பப்படும் மக்களுக்காக நாம் செயற்படவேண்டும்.

✍ நீண்டகாலமாக தமிழீழ மக்கள் சிங்கள இனவாத ஒடுக்குமுறையின் கீழ் நசுக்கப்பட்டு வருகின்றார்கள். இந்த மக்களின் விடுதலையை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



நோக்கமாகக்கொண்டு நடாத்தப்படும் இந்தப் போராட்டம் பற்றி உங்கள் கருத்தென்ன?

நாம் பலகாலமாக, அதாவது நாற்பது வருடங்களாக பல்வேறு வகையில் எமது விடிவை எதிர்பார்த்தோம். இயன்றவரையில் அதிகாரத்தில் இருந்தவர்களிடம் எமது உரிமைகளைத் தரும்படி கேட்டோம். எமது நியாயமான குரலுக்குச் செவிசாய்க்கும்படி பல தடவை கோரிக்கை செய்தோம். ஆனால் ஆட்சியாளர்கள் மிகப்படு மோசமான விளைவுகளையே எம்மீது திணித்துக்கொண்டார்கள். எனவேதான் மிகவும் நீதியின் அடிப்படையிலும், காலத்துக்கு ஏற்றதாகவும், தவிர்க்கமுடியாததாகவும் இந்தப் போராட்டம் நிகழ்ந்தது. சொந்த இலாபங்களுக்காக, குறுகிய நோக்கங்களுக்காக, சுய திருப்திக்காக இந்த விடுதலைப் போராட்டம் நடைபெறவில்லை. தன்னலமற்ற தியாகத்தின் அடிப்படையில், பரந்த நோக்குடன் இது நடைபெறுகிறது. இந்தப் போராட்டத்தை ஆழ்ந்து பார்க்கும்போது இந்தத் தன்மைகளைப் புரிந்து கொள்ளமுடியும். இப்போராட்டத்தின் தன்னலமற்ற தன்மையையும், எல்லா மக்களினதும் விடுதலையே பிரதானம் என்பதையும் அனைத்து மக்களும் புரிந்துகொள்ள வேண்டும். நீதிக்காக குரல் கொடுக்கும் பொழுது, உண்மைக்காக போராடும் பொழுது, வெற்றி நிச்சயம் கிட்டும். உண்மையும் நீதியும் எப்போதும் வென்றதாகவே சரித்திரம் உண்டு.

நீங்கள் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவராகப் பணியாற்றி வருகிறீர்கள். இதன்மூலம் எமது சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு இன்றைய போர்ச் சூழ்நிலையில் எவ்விதம் தொண்டாற்ற முடியுமெனக் கருதுகிறீர்கள்?

சமூகம் வளரவேண்டுமாயின் எதிர்கால நோக்கு வேண்டும். அறிவால் ஆய்ந்து திட்டமிட்டுச் செயற்படவேண்டும். அதற்கான ஆற்றலுள்ள, ஆளுமையுள்ள பேரறிஞர்கள் இந்தப் பேரவையில் இருகின்றார்கள். நாம் எல்லோரும் சமுதாயத்தின் பொது நலனையும், அதன் முழு விடுதலையையும் மனதில் கொண்டு இயங்கவேண்டும். இவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுவோமேயானால் இன்றைய போர்ச் சூழ்நிலையிலும் நல்ல பங்களிப்பை நல்கமுடியும். போரின் வெற்றியும், கல்வியின் வளர்ச்சியும் ஒன்றோடொன்று இணைந்து செயற்படவேண்டிய; செல்லவேண்டிய தேவை இருக்கிறது. அத்துடன் இந்தப் போருக்கும், சமூக, பொருண்மிய வளர்ச்சிக்கும் தேவையான அறிவைக் கொடுப்பது கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும். ஆகவே தொழில்சார் கல்விக்கும், விஞ்ஞானக் கல்விக்கும் எமது கலை, பண்பாடு, மற்றும் தேசியப் பற்றுணர்வை வளர்ப்பதற்கும் மொழிக்கல்வி அறிவுக்கும் நாம் முன்னுரிமை கொடுத்தல் அவசியம். இந்த அடிப்படையில் திட்டமிட்டு தொண்டாற்ற விரும்புகின்றோம்.



**"தன்னை அர்ப்பணித்து தொண்டாற்றி வரும் மதவாழ்வினராக சமூகப்பணி செய்யும் பிரான்ஸிஸ் ஜோசப் அடிகள் தமது மதக்கோட்பாட்டின் அடிப்படையில் ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும் தனது வாழ்வை அர்ப்பணித்துள்ளார். பரந்த முழுமையான விடுதலை நோக்குடைய இந்தப் போராட்டம் வெல்லும்; நியாயமும் உண்மையும் தோற்றதில்லை; எனவே வெற்றி எமக்குத்தான் என்று எம்மில் நம்பிக்கையை ஊன்றி விடுகிறார்."**

கலை, இலக்கியங்களிலும் உங்களுக்கு மிகுந்த ஈடுபாடும் புலமையும் உள்ளதை அறிவோம். போராட்ட கால கலை இலக்கியங்கள் எத்தகைய தன்மை வாய்ந்தவையாக இருக்க வேண்டும்? எத்தகைய உணர்வை மக்களில் ஏற்படுத்த வேண்டும்? என்பது பற்றி விளக்கமாகக் கூறுங்கள்:

போராட்டக்கால கலை இலக்கியங்கள் எங்களுடைய உரிமைகளையும் அவற்றை அடையக் கூடிய வழிவகைகளையும் எடுத்துணர்த்தக்கூடியனவாக இருக்க வேண்டும். எங்களின் தியாகங்களையும், எமது அர்ப்பணிப்புகளையும் சித்தரிப்பவனாக அமைவது நன்று. எங்களின் பண்பாட்டையும் கலைகளையும் பேணிப்பாதுகாக்கவும், வளர்க்கவும் செம்மையான வாழ்வியலைப் பிரதிபலிக்கவும் ஏற்றனவாக இருப்பது சிறப்பானது. பண்பாட்டைச் சிதைக்கும் சக்திகள் இருக்கின்றன. அவற்றில் நமக்குச் சொந்தமான மரபுவழிப்பட்டன சிலவும், இறக்குமதியான சிலவும் உண்டு. இவற்றை நாம் இனங்காணுவது அவசியம். காலப் புரிந்துணர்வுடன், தேவையானவற்றை ஏற்று, இணங்கி புதிய பண்பாட்டை உருவாக்குவோம். இவற்றுடன் எங்களுடைய இழப்புகள், இன்னல்கள், துயரங்களைப் பிரதிபலிப்பனவாகவும் இருத்தல் இன்றைய கலை இலக்கியங்களின் பிரதான தேவையாகும். எங்கள் வீர உணர்வையும் நம்பிக்கையையும் மக்கள் உணர்விலும் மனதிலும் ஏற்படுத்துவது அவசியம். துன்ப துயரங்களுக்கூடாகத்தான் எமக்கு விடிவுண்டு என்பதை மக்களின் மனதில் பதியச் செய்யவேண்டும். சாவினூடாகவே வெற்றி என்பதையும் கோதுமை மணி மண்ணில் வீழ்ந்து மடிந்தாலே அது பலனளிக்கும் என்ற கோட்பாட்டையும் நினைவூட்டிக் கொள்வோம். இது போலவே எங்கள் இலக்கியங்களும் இந்த உண்மைக் கொள்கைக்கு இயைபாக இருக்கவேண்டும். ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## "போர்!"

ஓ!.... சிப்பாய் வீரனே
கொஞ்சம் நில்!

நீ காட்டுவது....
உன் முகத்தை உள்ளத்தை
இல்லை கைகளை மட்டுமா?

உள்ளத்தை மூடி
முகத்தைக் காட்டாதே!

முகத்தை மூடி
உள்ளத்தை திறந்து பார்!

கைகளைக் கீழே விடு!
நீ போராடப் போவது
யாருடன் என்று புரிந்ததா?

உன் போர்க்களம்
எங்கே என்றாவது தெரியுமா?

புலிகள் வாழும் புண்ணிய பூமியில்
உன் சரித்திரம் புதைந்து போகும்!

அவர்கள் பாதம் பட்டமண்ணில்
உன் சடலம் சங்கமமாகும்!

சம்மதமா உனக்கு?

அப்படி என்ன கட்டாயம்
உன் மீதும் உயிர் மீதும் என்ன வெறுப்பு?

நாட்டுப்பற்றா? வீட்டுத் தொல்லையா?
இல்லை காதல் தோல்வியா?

புலிகளை நோக்கி
துப்பாக்கி நீட்டும் உன் துணிவை
பாராட்டுகிறேன்!

ஒன்று கேள்....
நீ வீசப்போகும் ஒவ்வொரு தோட்டாவும்
உன் இனத்தின் ஆணிவேரையே குறிபார்க்கும்!

மறந்திடாதே!

துரையூரான் - யாழ்ப்பாணம்

# கொஞ்சம் சிரிக்கலாம்



ஐயா..... சாமி..... இரண்டு நாளா சாப்பாடு இல்லை. நடக்கக் கூட முடியாமல் 'வீக்'காக இருக்கு. கொஞ்சம் 'கரண்ட்' இருந்தா போடுங்கோ தர்மம் கிடைக்கும்.

இந்த யுத்தத்தினால் மக்கள் பாதிப்படைந்துள்ளனர் என்று கூறுவதெல்லாம் பச்சைப் பொய். சாதாரண இராணுவத்தினனாக இருந்த நான் வசதியுள்ள அரசில் வாதியாக உங்கள் முன் நிற்கிறேன் என்றால் அதற்கு என்ன காரணம்?





என்ர மகன் நீச்சல், ஓட்டப் பந்தயம், நீளம் பாய்தல் எல்லாத்திலையும் கெட்டிக்காரன்.

என்ர மகன் குதிரையாட்டத் திலை கெட்டிக்காரன்.

ரெயினுக்கும் ஹெலிமாதிரி மேலுக்கு காற்றாடி எல்லாம் இருக்குமா அப்பா?



கருத்து - புலி
சித்திரம் - தயா

நன்றி: சாளரம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# நிலையான நினைவாகிச் சென்றோன் நினைவோடு தமிழீழம் வெல்வோம்

'தமிழீழம்'

**இது தனித்த ஒன்றுதான்; பிரிந்த இரண்டின் சேர்க்கையல்ல.**

**ஒரே இனம், ஒரே மொழி, ஒரே நிலம், ஒரே வானம், ஒரே கடல், ஒரு தமிழீழம்; தமிழீழம் தனியென்றே அல்லாமல், இருவேறு துண்டுகளின் கூட்டல்ல.**

வல்லிபுரக்கோயில் மணற்காட்டில் - அலைகளாய் விழுந்து உவகையோடு எழுகின்ற இந்துமா ஆழி, 'எங்கள் கடல்!' என்றால் 'குமணக்' கரையின் மணலில் உருண்டு, கண்களை எரித்துச் சுகம் விசாரிப்பதும் 'எங்களோடது!' தான்; 'கருவேலன் காட்டு' ஓரத்தில் மோதி பாரையோடு சுறாவும் திருக்கையும் தருவதும் 'நம்மடது'தான் - தமிழீழம் ஒன்றுதான்!

'வாளேந்திய சிங்கம்' தானேந்திடும் வாளால் துண்டாக்கிப்போட்ட பின்பு, கூட்டாகிச் 'சங்கம்' அமைக்க - இது சோவியத் சாம்ராஜ்ஜியமும் அல்ல; துகள்களாகிப் பிளவுபடுத்தி சீரழித்துச் சிதைத்துவிட - இது 'பொஸ்னியா'வும் அல்ல.

'கரந்தனாற்றில்' கால் நனைத்துக் கொண்டு தமிழீழம் என்றால், வரண்டுபோய்க் கிடக்கின்ற 'வழுக்கியாறும்' தமிழீழம்தான். மன்னாரை ஈரமாக்கும் 'பறங்கியாறு'ம் அதுதான். 'மணலாறு'ம் எங்களதேதான்!

இலங்கையில் -

ஆசியாக் கண்டத்தின் தெற்கே, இந்துமா சமுத்திரத்தின் தாலாட்டில் மிதக்கும் அந்த மாங்காய் வடிவச் சிறு தீவில் -

அதன் - வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்குப் பிரதேசங்களில் - தமிழர்கள் காலாதிகாலமாக வேரோடி வாழ்ந்த 20,000 சதுர கிலோமீற்றர் நிலப் பரப்பு; தமிழர் மூதாதையரின் வியர்வை கலந்த 23,000 சதுர கிலோமீற்றர் கடற்பரப்பு; இவற்றின் மேலாக கூரையாய் வரியும் தமிழர் சரித்திரத்தின் மூச்சுக் கலந்திருக்கும் வான் பரப்பு - இந்த மூன்றுக்கும் ஒரே பெயர், அதுதான் தமிழீழம்.



**அற்புதமான போராளி; அசாதாரணமான வீரன்; கிடைத்தற்கரிய நண்பன்; மாண்பான மனிதன். வாழ்க்கையை அவன் கற்றுத்தரவில்லை; வாழ்ந்தவனைப் பார்த்து நாங்கள் கற்றுக்கொண்டோம்.**

வடக்கையும் கிழக்கையும் "இணையக்கூடாது! இணைக்கக் கூடாது!" என்று கொழும்பிலிருந்து கத்திக்கொண்டிருக்கிறார்கள். அது எமக்குப் புரியவுமில்லை; புரிந்து கொள்ள நாம் விரும்பவுமில்லை; விரும்பவேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில், 'இணைப்பது' அல்லவே எமது பிரச்சினை. தமிழீழத்தை (வடக்கையும் கிழக்கையும்) 'பிரிக்கக்கூடாது' என்பதுவே எமது பிரச்சினை. தேசம் பிரியக்கூடாது, யாரும் பிளக்கவே கூடாது என்பதற்காகவே நாங்கள் செத்துக் கொண்டிருக்கிறோம்; விடவே மாட்டோம்!

ஓரங்களில் அரிக்கப்படாத - நடுவினில் பிரிக்கப்படாத - நிறைவு குறைக்கப்படாத, உருக்குலைவற்ற தமிழீழத்தை மீட்டெடுத்து, தமிழரின் சுதந்திர தனியரசைப் பிரகடனப்படுத்தும் வரை, விடவேமாட்டோம்!

கொக்குவில் புயலாகும்; கொக்குத்தொடுவாய் களமாடும்; கொம்மாந்துறை அனலாகும்; தனியரசு எமதாகும் வரை தமிழீழம் போராடும். பலாலி வீதியிலிருந்து புனானை வீதியீறாக விடுதலைப் போர் நீளும். புலி ஆடும் கொடி எங்கள் நிலம் ஆளும் நாள் வரை போர் நீளும்! போர் நீளும்! விடவே மாட்டோம்.

தேசத்தை மீட்கும் இன்றைய போரில் தென்னக வீரர்கள் வடக்கில் அணி வகுத்துள்ளார்கள்; எல்லைகள் கீறும் நாளைய போரில், வடபுலி வீரர்கள் தெற்கில் வேலிபோடுவார்கள்.

தமிழீழம் ஒன்றேதான் - ஒரு நாடு; ஒரு கொடி; ஒரு தலைவன்.

***

ஒரு ஆவணி மாதத்து அதிகாலை. கச்சான் காற்றின் மெல்லிய வருடல். வைகறைப் பொழுதில் சூரியக் குளியல். எழுவான்கரையின் உளமெல்லாம் உற்சாகம். சாளைவலைத் தோணிகளில் கரை திரும்பிக்கொண்டிருந்த தேசத்தின் மீனவ சமூகம். "கெதியாய் போயிடவேணும் குமார்.... கச்சான் வலுத்துதெண்டால் மறுகா தண்டு வலிக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கிறது கஸ்டமா போயிடும்....." இவ் விரண்டு ஆட்கள், சிலதுண்டு வலைகளோடு பிடித்தெடுத்த மீன்கள்; கரை நோக்கிய வள்ளங்கள்.

பதினைந்து வயதேயான இளம் பராயம்; தேவைக்கும் அதிகமாகத் துளியும் பெருக்காத தேகம்; தோள்கள் திரண்டு, நெஞ்சு அகன்று, இடுப்பு ஒடுங்கி, கால்கள் வலுத்து - உடலை வருத்தி வருத்தி உழைத்ததால் இறுக்கமாகிய அழகு மேனி; சுருள் சுருளாகப் படரும் தலை முடிகள்; முழு நிலவாக ஒளிரும் முகம்; சதா புன்னகைக்கும் கண்களின் ஆழத்தில் உற்றுப் பார்த்தால் மட்டுமே தென்படும், அந்த சோகத்தின் மெல்லிய கீறல். நெற்றியில் சிந்தனையின் ........

குமார் நிமிர்ந்து நிலத்தைப் பார்த்தான். மேற்புறத் தொடுவானில் 'கும்பிமலை'யும் 'தொப்பிக்கல்'லும் பனிமூட்டங்களினூடு மெல்லிய நீல முகடுகளாய்.... கண் குளிர்ந்த காட்சி.

தோணி கரை ஒதுங்கியது. கடலுக்குள் இறங்கியவன் குனிந்து வள்ளத்திலும் தண்ணீரிலும் தொட்டு இரண்டு கைகளையும் நெஞ்சில் வைத்து கண்களை மூடினான். வலைகளை இழுத்து, பட்டிருந்த மீன்களை எடுத்து, கூடையில் நிறுத்து, விலைபேசி.... கச்சான் பலமாக ஊதத் தொடங்கிற்று. இரவு தொழிலுக்குப் போய் வந்தவர்கள் கண்ணாப் பற்றையோரங்களில் ஓய்வாக அரட்டையடிக்க, விற்போரும் வாங்குவோரும் நிறைய, களைகட்டிக் கலகலத்தது கடற்கரை. குமாருக்கு அவசரம்; நேர நெருக்கடி; மிதிவண்டியை உருட்டிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். "குமார் சாப்பிடாமல் போறான்.... அவனைச் சாப்பிடச் சொல்லுங்கோ..." - மீன் வாடிக்குப் பக்கத்திலிருந்த குடிலுக்குள்ளிருந்து ஒரு உடன்பிறவாச் சகோதரியின் பாசக்குரல். "குமார் சாப்பிட்டுட்டுப் போவன் தம்பி...."

"அக்கா, தங்கைச்சிக்குப் பள்ளி துவங்கிற நேரமாயிற்றுதண்ணை..... ஏத்திப்போய் விடணும்... நான் பிறகு வாறனண்ணை...." குடிலுக்குள் எட்டிப்பார்த்து - "அக்கா வாரனுங்க...." சைக்கிளை உருட்டினான்.

"ம்...." குடிலுக்குள்ளிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு கச்சானோடு கலந்தது.


வடக்கில் அணிவகுத்து நிற்கும் தென்னக வீரர்கள்

***

கல்குடா ஒரு பூர்வீக தமிழர் நிலம். கல்மடு அங்கொரு சிற்றூர். அண்ணாந்து பார்த்தாலும் வறுமைக்கோடு தெரியாத ஆழத்தில் வாழ்ந்த மக்கள். வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்திழுக்கும் சுந்தரபுரியாக மாறிவிட்ட தங்களூரில், மண்ணின் பண்பாடுகளையும், இனத்தின் உன்னதங்களையும் கறைபடியாமல் காத்தார்கள் அவர்கள். அதிலொரு குடும்பம் அவனுடையது.

சிங்களத்தைச் சரளமாகப் பேசியவன், உல்லாசப் பிரயாணிகளை வழிகாட்டக்கூடியளவுக்கு ஆங்கிலமும் பேசினான். பகலில் அவனுக்கு அதுதான் வேலை. பக்குவமாய் பாதுகாக்கும் இரண்டொரு நல்ல உடைகள் அவனுக்குத் துணை. சின்னவன், நல்லவன், பண்பானவன், ஏழை. விடுதிச் சொந்தக்காரர் நாளாந்தம் அவனுக்கென ஊர்பார்க்கும் வெள்ளைக்காரர்களை வைத்திருப்பார். கூட்டிக்கொண் அவன் பகலெல்லாம் திரிவான். மானிடப் பண்புகளும், சீரிய ஒழுக்கங்களும் மலிவு விலைக்கு ஏலம்போன உல்லாச விடுதிகளில், உடலாலும் உள்ளத்தாலும் சேதப்படாமல் வாழ்ந்தவன்.

மாலையானதும் மீண்டும் ஓட்டம். மிதிவண்டியில் களைக்க களைக்க ஓடி பள்ளிக்கூட வாசலில் காவலிருப்பான். பள்ளிவிட்டதும் - அக்காவையும் தங்கையையும் திரும்ப வீட்டிற்கு ஏத்திப் போவான். வீட்டு வேலைகளில் சின்ன ஒத்தாசைகள் செய்துவிட்டு, இரவானதும் கடற்தொழிலுக்குப் போகப் புறப்பட்டு விடுவான்.

இருள் கவிந்த அந்தி நேரம். மிதிவண்டியை உருட்டிக்கொண்டு அவன் படலைக்கு வர, பின்னாலே ஓடிவந்த தங்கச்சி கைகளில் பிடித்தாள். திரும்பினான். அக்கா அவனையே பார்த்தபடி வாசல் கதவோடு சாய்ந்திருந்தாள். தங்கை ஏக்கமாய் பார்த்தாள்.

"இண்டைக்கு மட்டும் தொழிலுக்குப் போகவேணாமண்ணா.... எங்க கூடவே இருங்கண்ணா....." அவள் கேட்டது தங்களது மகிழ்வுக்காக அல்ல; அவனது ஓய்வுக்காக மட்டுமேதான். இரக்கமாய்க் கேட்டவளைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. தொண்டைக்குள் எதுவோ அடைக்க, குரலுக்குப் பதில் கண்ணீர்தான் வந்தது. தங்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கையை கட்டி அணைத்துக்கொண்டான். கட்டுப்படுத்தமுடியாத கண்ணீர் அவனுக்கும் வந்தது; அவளுக்கும் வந்தது. துன்பச் சிலுவைகள் சுமந்தனர் பிஞ்சுகள். துயரமே வாழ்வான வாழ்வு. தங்கையின் தலையில் தடவிக்கொண்டே அவன் சொன்னான்- "இண்டைக்கு நான் போகலேண்ணா.... நாளைக்கு நாம் சாப்பிடமுடியாதம்மா!"

மிதிவண்டி அவனோடு உருளத் தொடங்கியது.

எதிர்பாராமல் ஒருநாள் கண்களை மூடிக்கொண்டு துடிக்கவிட்டுச் சென்றுவிட்டார் அன்பு அப்பா! அடுத்து வந்த நாளொன்றில், தனியாகத் தவிக்கவிட்டுக் காணாமல் போனாள் அம்மா! துயரக் கடலில் தூக்கிவீசப்பட்டனர் பச்சைக் குழந்தைகள். துடுப்பற்ற படகாய் மிதந்தவர்களுக்கு துணையாகி வாழ்ந்தான் குமார்; அவன்தான் எங்கள் லக்ஸ்மணன். தோழர்களின் அன்புக்குரிய பொம்மரண்ணன். சகோதரிகளை தன் நெஞ்சுக்கூட்டுக்குள் குடியிருத்தி வைத்திருந்த அன்புச் சகோதரன். சகோதரிகளில் ஒரு அசாதாரண பாசத்தைக் கொண்டிருந்தவன் அவன். தங்கச்சியில்தான் தனது உயிரையே வைத்திருந்தான். எல்லையற்ற அன்பால் பாதுகாத்து, எத்தனையோ கனவுகளோடு அவளை வளர்த்தான். அன்னையாகவும், தந்தையாகவும், அண்ணனாகவும், தம்பியாகவும் - அவர்களுக்கு எல்லாமாகவும் அவனே வாழ்ந்தான். தனக்கு கிடைக்காத கல்வி அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற ஆதங்கத்தோடு அவன் பட்ட துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல; அனுபவித்த கஷ்டங்கள் சொற்பமல்ல. அவர்களுக்காக, சுமைகளில் அழுந்தியவனைப் பார்த்து, அவன் அறியாமல் அவர்கள் அழுவார்கள். கடுங்குளிருக்குள் அலைகளோடு மாரடித்துவிட்டு வருபவன், பகல் வெயிலுக்குள் வெளிநாட்டுக் காரர்களோடு அலைந்தான். பாவம். ஓய்வே இல்லை.... ஓயவே இல்லை.....!

ஆனையிறவுச் சமரில் உலகம் கவனம் செலுத்திக்கொண்டிருந்தது. எங்கும், எவரிலும் அதே பேச்சு; அதே சிந்தனை. புலிவீரர்களை ஈன்ற தாய்மார்கள் மட்டுமல்ல, திருக்கோணமலையிலும் மட்டக்களப்பிலும் இருந்த தோழர்களும் தவித்துக்கொண்டிருந்தார்கள். பெரும் சமர்க்களம் ஒன்றில், இயக்கத்தின் பெரிய தொகுதி வீரர்கள் போரிட்டுக்கொண்டிருக்கும்போது, அந்தக் களத்திற்கு அப்பால் நிற்கும் ஒரு போராளியாலும் கூட அமைதியாக இருக்கமுடியாது. அந்த மனப்போராட்டத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், நீங்களும் விடுதலைப் புலிகளின் போராளியாக இருக்கவேண்டும். சந்திவெளித் திடலிலிருந்த 'கிலோ



வண்' முகாமின் போராளிகளும் இதே தவிப்போடுதான் தகவல் தொடர்புச் சாதனத்தைச் சூழ குழுமுவார்கள். ஒவ்வொரு காலையிலும் வரும் களநிலைச் செய்திகள், வீழ்ந்தவர்களின் நீண்ட பட்டியலைத் தருகின்றபோது - ஆன்மா துடிக்கும். அந்த ஒரு காலை; அவர்கள் காத்திருந்த வேளை - தரையிறங்கி நடந்த படையினரை எதிர்கொண்ட நேற்றைய சண்டையில் களப்பலியானோர் பெயர்கள்.... வரிசையாய்.... ஒன்றன்பின் ஒன்றாய்.... அதிலொன்றாய்.....! "லெப்ரினன்ற் சுனேத்ரா! - வேலாயுத பிள்ளை ஜெயந்தி, கல்மடு, கற....! மட்டக்...!...." அவன் அதிர்ந்ததை..... முகம் இறுகியதை.... நிலை குலைந்ததை..... அருகிலிருந்தவர்கள் கவனிக்கவேயில்லை. "அம்மான்! .... என்ர தங்கைச்சி...." என்று விம்மிய போது, பக்கத்திலிருந்த தோழனின் கைகளில் விழுந்து குலுங்கிக் குலுங்கி அழுதபோது, நண்பர்கள் விக்கித்துப் போனார்கள்.

கெட்டிக்காரி; கல்லூரியில் சிறந்து விளங்கியவள்; விவேகமானவள்- 'ஸ்டெதஸ்கோப்' வளைந்து தொங்கும் தோள்களோடு அவள் ஒய்யாரமாக நடந்து வருவதைக் கண்நிறையப் பார்க்க காத்திருந்தவன்; காலம் அவளது தோள்களில் துப்பாக்கியைத் தொங்கவிட்டுக் களத்திற்கு அனுப்பியபோதும் வருத்தப்படாதவன்-

"என்ர தங்கச்சி! என்ன விட்டுட்டுப்போட்...." சொல்லிச் சொல்லி அழுதுகொண்டே இருந்தான்.

***

லக்ஸ்மணன்-

பொம்பர்-

மற்றவர்களிடம் காணமுடியாத சில அபூர்வ தன்மைகளைக் கொண்டிருந்ததால் - மெதுவாக, ஆனால் உறுதியாக வளர்ந்து மேல்நிலைக்கு உயர்ந்த ஒரு புரட்சி வீரன்.

தென் பிராந்திய யுத்த அரங்கில், தன்னிகரில்லாப் போர் நாயகர்களாக விளங்கிய குறிப்படத்தக்கவர்களுக்குள் - தானும் ஒருவனாக ஒளிர்ந்த சண்டைக்காரன்.

களமுனையில் மாறுபடும் தளநிலைமைகளின் போக்குகளுக்கு ஏற்ப தீர்மானங்களை எடுப்பதிலிருந்து, பொறுப்பெடுத்த பணிகளை எவ்வளவு விரைவாகவும் எவ்வளவு சுலபமாகவும் ஆற்றிமுடிக்க இயலுமென்பதையே சிந்தித்து செயற்படுத்துவது வரை - எதிலெல்லாம் ஈடுபட்டானோ அதிலெல்லாம் - அவன், மதிநுட்பத்தோடு காட்டிய அசாத்திய துரிதத்திற்காகவே 'பொம்மர்' என்பது அவனது மறுபெயர் ஆனது. முற்றுமுழுதாகவே அது காரணப்பெயர்தான். "பொம்மரண்ணா! பொம்மரண்ணா..." என்று ஒரு கூட்டம், பொழுதெல்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

லாம் அவனைச் சுற்றிக்கொண்டே திரியும்.

அவன் -

அதிர்ந்து அனல் கக்கும் படைக் கலங்களின் முன்னால், துணிந்து களமாடும் ஒரு போர்வீரன்; நுட்பமாய் வென்றிடும் ஒரு தளபதி; நம்பி வேலைகளைக் கொடுத்து விட்டுப் போனால், இம்மியும் பிழையாமல் முடித்திடும் செயல் வீரன். ஒருநாள் அவனுடன் பழகக் கிடைத்தாலும் ஒருநாளும் அழியாத நினைவாகும் நண்பன்; இடையறாத போராட்ட அனுபவத்தில் இனங்காணப்பட்ட நேர்த்தியான பொறுப்பாளன்; விரிவுரை நிகழ்த்துகையில் ஒரு படையியல் பேராசான்; தேடிக்கேட்டுப் படிக்கையில், ஒரு அடக்கமான மாணவன்; கட்டுப்பாடாய் - ஒழுக்கமாய் - தமிழினத்தின் பண்பாட்டு நெறி பிறழாத மனிதனாய் வாழ்ந்து, இயக்கத்தின் உயரிய விழுமியங்களைக் காத்து நின்ற புலிகளின் போராளி; ஆலோசகனாகி, அறிவுரைகள் சொல்லி, தளபதி கருணாவின் தோளோடு தோள் நின்ற அந்தப் படைவீரன் - சாதனை செய்து, சரித்திரம் படைத்து, பிரபாகரன் என்ற தலைவனுக்கு பெருமையினைத் தந்த புலிவீரன்.

ஆயித்தயமலை. வரம்புயரத்திற்கு நீருயர்ந்து நெல் உயர்ந்திருக்கும் வயற்சேனை. அது - நீண்டு விரிந்து கிடக்கும் பரந்த வெளி; நான்கைந்து கிலோ மீற்றருக்கு ஈ எறும்பே இல்லாத வெட்டைத் தரை. நெற்கதிரைத் தவிர மண்மட்டத்திற்கு மேல் மங்கலாயும் ஏதும் தெரியாத புவியமைப்பு. இந்தச் சேனை நிலத்தை சரி நடுவாகக் குறுக்கறுத்துப் போகிறது - கரடியனாற்றையும் உன்னிச்சையையும் தொடுக்கும் பெருந்தெரு. இந்த வீதியால் நாளாந்தம் நடை ரோந்து போனது, சிங்கள அதிரடிப் படையணி ஒன்று. இந்த வெட்டை நிலப் பாதையில் வைத்து இந்த அணி மீது தாக்குவது பற்றிக் கதைத்தால், தேர்ந்த ஒரு படைத்துறை நிபுணன் 'முட்டாள்' என்பான். ஏனென்றால் தாக்குதலுக்குச் சாதகமே இல்லாத தளநிலைச் சூழல் அது. ஆனாலும் தாக்குதலை நடாத்துவது என முடிவெடுத்தான் லக்ஸ்மணன். புலிகள் இயக்கத்துக்குரிய தனித்துவம் அதுதான்! ஏற்கனவே தலைவர் சொல்லியிருப்பது போல, "அதீதமான தன்னம்பிக்கைதான் எமது பலமும்; பலவீனமும்." பாதகமானது எனக் கருதப்பட்ட அதே காரணத்தையே அவன் சாதகமாக்கினான். எதிர்ப்பை எதிர்பாராமல் எதிரி கவனயீனமாக நகரும் வேளை - அவதானமற்ற அலட்சியமாகவும், உசார் நிலையற்ற உல்லாசமாகவும் காலாற நடைபயிலும் அந்தப் பகைப் படையணி, ஒரு வாய்ப்பான இலக்குத்தான்!



**தேசத்தின் தலைவருடன் தென்தமிழீழத தளபதிகள்**

**அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கருணா, தளபதி ராம், துணைத் தளபதி லெப். கேணல் லக்ஸ்மணன்**

தானே நின்று பொம்மர் வேவு பார்த்தான்; இடம் தேர்ந்து, நாள் குறித்தான்; வீரர்களை ஒழுங்குபடுத்தித் தயாரானான். தளபதி கருணா ஒப்புதல் தந்தார்; புறப்பட்டான்.

உருமறைப்பு - போரில் இது ஒரு முக்கிய அம்சம். தாக்குதல் நடவடிக்கைகளின் போது இன்றியமையாத ஒரு பாத்திரம் இதற்குண்டு. உருமறைப்பானது, எதிரிக்கு எம்மை மறைப்பதுடன் எமது தந்திரோபாயத்தையும் மறைக்கின்றது. அதனால், தாக்குதலின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதில் அதுவும் பெரும்பங்கு வகிக்கின்றது. களத்தைத் திறப்பது நாங்களாய் இருக்கவேண்டும்; அவனாய் அல்ல.

ஒவ்வொரு வீரனாக லக்ஸ்மணன் தானே உருமறைத்துவிட்டான். போரின் இந்தத் தனிக்கலை - அவனுக்கு ஒரு கைவந்த கலை.

வரம்போடு வரம்பாக, நீரோடு நீராக, நெல்லோடு நெல்லாக, புல்லோடு புல்லாக.... காத்திருந்தார்கள்; பாயத் தயாரான புலிகள் பதுங்கிக் காத்திருந்தார்கள். வந்து கொண்டிருந்தான் - சாகத் தயாரான வகையில் பகைவன் வந்து கொண்டிருந்தான்.

பார்க்கின்ற தூரத்திலிருந்து கேட்கின்ற அளவுக்கு நெருங்கினான். எட்டித் தொடக்கூடிய வாறு.... இதோ பகைவன்! பக்கத்தில்!! கணக்கான இடைவெளி - சரியான தருணம். வெற்றிக்குரிய மணித்துளி இதுதான்! தீப்பொறி கக்கும் 'ஜீ திறீ' யோடெழுந்து, ஆட்டத்தைக் கோலாகலமாக ஆரம்பித்துவைத்தான் லக்ஸ்மணன். ஆவேசத் தாக்குதல்! உயிர் சிலிர்க்க வைக்கும் சண்டைக் கணங்கள். வெட்டை வெளித் தரையில், இந்த உச்சிப் பகற்பொழுதில் எங்கிருந்தையா வந்தனர் புலிகள்....? நடப்பதென்னவென உணரும் முன்னரே சுருண்டு விழுந்தனர் பகைவர். சிங்களக் கொமாண்டோ அணி தன்னில் 14 பேரை பிணங்களாய் இழந்தது. தப்பியோடியவர்கள் தப்பிப் போனமை ஏதோ கடவுள் கிருபையால்தான். என்ன அதிசயம் பாருங்கள், புலிகளுக்குச்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


சொந்தமான ஒரு துளி இரத்தமும் சிந்திடாமல் பெற்றெடுத்த வெற்றி அது!

'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்பதற்கு, சாலப் பொருத்தமானவன் அவன். வெளித் தோற்றத்தால் என்றல்ல, உள்ளத்து அழகினால் எங்களது உள்ளங்களை ஊடுருவி வாழ்ந்த ஒரு அற்புதமான நண்பன். அவனது அகத்திலும் முகத்திலும் மிளிர்ந்த பேரழகு, எல்லாரையும் வசீகரித்ததென்றால் மிகையே அல்ல. இனம்புரியாத அந்த ஈர்ப்புச் சக்தியின் வீச்செல்லைக்குள் அகப்படாதவர்களே இல்லை. எவரையும் கவரும் அபூர்வம் அவனில் மறைந்து கிடந்ததை அர்ப்பணித்து வரலாற்றில் முத்திரையைப் பதித்தவர்கள் எண்ணக் கூடியவர்கள்தான். லக்ஸ்மணனும் - அவர்களில் ஒருவனாகி, தலைவரின் விருப்பத்திற்குரிய ஒரு போராளியாகி, அவரது சிந்தையைக் கவர்ந்து உயர்ந்தான். அந்த உயர்ச்சி "லக்ஸ்மணனைப் போல..." என அவர் முன்னுதாரணம் காட்டுகின்ற உன்னதத்தை அவனுக்குப் பெற்றுத் தந்தது.

அவன் நின்ற இடம் சிறப்பைப் பெற்றது. அவனிடம் நின்றதால் குழுவொன்று மதிப்பைப் பெற்றது. சமையலில் உருசை; விளையாட்டில் திறமை; வேலையில் வேகம்; சண்டையில் வீரம். "பொம்மரண்ணான்ர குறூப்"க்கு தனிப் பேர் இருந்தது; ஏனைய குழுக்களிலிருந்து வேறுபாடு அப்பட்டமாய்த் தெரிந்தது.



போரெனில் பூரிக்கும் புலி வீரர்

நாங்கள் கண்டோம். எங்கும், எப்போதும், எவ்விதமாகவும் எடுத்துக்காட்டிச் சொல்லக்கூடியனவாக வாழ்ந்த - மாண்பான மனிதன் லக்ஸ்மணன்.

ஒரு மேற்சட்டை, ஒரு காற்சட்டை, ஒவ்வொரு உள்ளாடையோடு ஒரு சாரம் - கிழியக் கிழியத் தைத்து, எந்தச் சோலியுமில்லாமல் லக்ஸ்மணன் ஓராண்டைச் சமாளிப்பான். கந்தையாகக் கந்தையாகக் கசக்கிக் கட்டி - சிக்கனமாய் வாழ அவன் கற்றுத்தரவில்லை; அப்படியாக வாழ்ந்தவனை பார்த்து நாங்கள் கற்றுக்கொண்டோம்.

ஈடுபட்ட பணிகளிலெல்லாம் ஈடுபாட்டோடு இயங்கி - ஆற்றல், புலமை, திறமை அனைத்தையும்

காடென்ன? மலையென்ன? நடுப்பகல் வெயிலென்ன? நள்ளிரவுப் பொழுதென்ன....? பொம்மரண்ணா வேலைக்கென்றால் பின்னுக்கு நின்றவர்கள் கிடையாது; பின்னுக்கு நிற்பாட்ட ஆளே கிடையாது.

பெரும் தாக்குதலுக்குப் புறப்படும் போது, அவனது ஒழுங்கமைப்பைப் பார்க்கலாம். தாக்குதற்திட்டம் பெரிதாகும் போது, தயார்ப்படுத்தல் மிகப் பெரிதாய் இருக்கும். தயார்ப்படுத்தல் பெரிதாகும்போது, அவனுக்கே அது ஒரு சுமையாய் குவியும். எல்லாச் சுமைகளையும் தானே ஏற்பதால், அவனது தளபதிகளுக்கு வேலைப் பளு குறையும்.

பானை சட்டி எடுத்து, பருப்பு அரிசி பொதி செய்து, படை வீரருக்கு ரவை எண்ணி, மருந்துப் பெட்டியில் பொருள் பார்த்து... ஒவ்வொரு 'கிளைமோரு'க்கும் இடம் காட்டி, ஒவ்வொரு வீரனுக்கும் நிலை காட்டி, ஒவ்வொரு அங்குலமாய் வியூகம் போட்டு.... சென்று, வென்று, மீண்டு வரும் வரை, ஒவ்வொரு அடியிலும் அவனது உழைப்பிருக்கும்.

லக்ஸ்மணன் - நீங்காத நினைவுகளாய் ஆழ்மனதில் பதிந்துபோன அடலேறு அவன். ஒன்றை நினைக்க இன்னொன்று வருகின்றது. அதை நினைக்க வேறொன்று வருகிறது. வருவதை நினைக்க அடுத்தடுத்து வருகின்றது. ஓயாத எண்ணங்களாக, நினைவுகளின் தொடரசைவு.... நினைவுகள் அழிவதில்லை; அழிவதேயில்லை.

பயிற்சியில் நாங்கள் சோம்பலாகி பம்மாத்து விட்டபோது பக்கத்தில் நின்று தெம்பாக்கி சேர்ந்து வளைந்தவன்; தளத்தைச் செப்பனிட நாங்கள் கிடுகு காவி கூரை வேய, கம்பு தூக்கி மூடை அடித்துக் கூடவே முறிந்தவன். பிழைகள் இழைத்து நாங்கள் தவறுகள் செய்தபோது, பக்குவமாய் அணுகி எம்மை அன்பால் திருத்தியவன்; தவறுகள் செய்துவிட்டு நியாயம் சொல்வோர் மத்தியில், தனது தவறுகளாச் சுட்டியபோது அமைதியாய் ஏற்றுக்கொண்டவன். தவறுகளுக்காக தண்டனைகள் தந்தபின்பும், மேன்மையாய் விளக்கி அறிவுரை சொன்னவன். கீழ் இருக்கும் போராளி பெரிதாய்ச் செய்தபோது, மேலே இருக்கும் தளபதியிடம் இனங்காட்டி விட்டவன். கண் திறப்பான் என்று நாங்கள் காத்திருந்தபோது, கண் திறக்கவில்லை அவன் - காவியமாய் ஆனான்.

நினைவுகள் அழிவதில்லை; அவை அழிவதேயில்லை!

வாவிகளில் மீன்பிடித்து வந்து கறியாக்கித் தந்தான் - உண்டு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சுவைத்தோம். சண்டைக்குப் போய் ஆறுகடக்கத் திக்குமுக்காடியபோது 'வெல்லங் கம்பில்' கயிறு திரித்து ஆறு கடத்திக் கூட்டிப் போனான். வென்று மீண்டோம். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வீரனாகினான். சேர்ந்து மகிழ்ந்தோம். நீருக்குள் மீனாகி நீந்தினான். பார்த்து வியந்தோம். ஆறிமுத்துப் போன தோழர்கள் போனவர்தானென விக்கித்தவேளை, நீரிழுத்துப் போகாமல் மீட்டெடுத்துப் போட்டான் - அதிர்ந்து இன்புற்றோம். மேற்கத்தைய இசையில் கிற்றார் துணையுடன் சொற்றுணை வேதியனை...' மணியாய்ப் பாடினான் - கூடிக் குதூகலித்தோம். பாலு அண்ணனோடு நடைப் போட்டியில் நாரி வருத்தத்தால் பின்தங்கிப் போனான். நாமும் வருந்தினோம். தளத்தில் நடந்த ஆணழகன் போட்டியில் தசைகளை முறுக்கி எண்ணெயில் ஜொலித்தான். பார்த்து இரசித்தோம். காத்திருந்து நாங்கள் பரிதவித்துப் பார்த்திருக்க பூத்து விழி சிரியாமலே.... பூ உதிர்ந்து போனான் - உயிருக்குள் அழுகின்றோம்.

நினைவுகள் அழிவதில்லை; அவை அழிவதேயில்லை....

***

சண்டை செய்யத் தெரிந்தவன். சண்டையைச் செய்விக்கவும் தெரிந்தவன். போராளிகளை நிர்வகிக்கத் தெரிந்தவன். போரை நிகழ்த்தவும் தெரிந்தான்... களங்களிற்குத் திட்டமிடத் தெரிந்தவன், சமர்களை வெல்லவும் தெரிந்தவன்..... லக்ஸ்மணன் ஒரு போரியல் வல்லுனன்தான்; போரின் ஒவ்வொரு கூறிலும் அவன் தலைசிறந்து விளங்கியவன்; படைத்துறையில் ஒரு நிபுணனாகவே திகழ்ந்தவன். அவன் பங்கேற்ற களங்களிலெல்லாம் ஒரு All rounder ஆக - சகலகலாவல்லவனாக மட்டமல்ல, Man of the Battle ஆக - அந்தக் களத்தின் நாயகனாகவும் விளங்கியவன்.

'ஜீ. திறீ ஏ திறீ' - (G 3A3) சுரிகுழல் துப்பாக்கிதான் சிறுரக சுடுகலன்களுக்குள் அவனது விருப்பத்தேர்வு. தலைவர் அவர்களுக்கும் அது பிடித்தமானது; 'ஹெக்லர் அன் கொச்' நிறுவனம் உருவாக்கிய பெருமையைப் பெற்றது.

சீறிப்பாயும் சன்னங்களினூடு 'ஜி திறீ' யோடு அவன் முன்னேறும் விரைவு சண்டைக்காரர்களையே அசத்தும். சுட்டுக்கொண்டிருக்கும் பகைவனைச் சுட்டு வீழ்த்தும் வேகம்.... அந்த வேகத்தோடேயே அடுத்தவனைக் குறிவைக்கும் லாவகம்..... அதே சமநேரத்திலேயே வீரர்களை நகர்த்திச் செல்லும் திறமை.... பார்ப்பவர்களை அதிசயிக்கவைக்கும். தொய்ந்து கொண்டிருக்கும் சண்டைக்குள் அவன் புகுந்தால், புலிகள் பிய்த்துக் கொண்டு பாய்வார்கள். 'வோக்கி'

**தளபதி கருணாவின் தோளோடு தோள் நின்ற அந்தப் படைவீரன் - சாதனை செய்து, சரித்திரம் படைத்து, பிரபாகரன் என்ற தலைவனுக்கு பெருமையினைத் தந்த புலிவீரன்.**

யில் அவனது குரலைக் கேட்டாலே, அவர்களுக்குள் புதுத் தெம்பு புகுந்து விளையாடும். மூக்கென்றால் மூக்கு, கண்ணென்றால் கண், நெஞ்சென்றால் நெஞ்சு - சொல்லிச் சுடுவான் லக்ஸ்மணன் _ மில்லி மீற்றரும் விலகாது; நம்பி வைத்திருந்த 'ஜீ திறீ'யும் அவனுக்குத் துரோகம் இழைத்தது கிடையாது.... அவனொரு அசகாயசூரன்.

தளபதி கருணாவின் நேரடிக் கவனிப்பின் கீழிருந்த பிரத்தியேக தாக்குதலணியின் கொமாண்டராக லக்ஸ்மணன் நியமிக்கப்பட்டிருந்தான். மட்டு - அம்பாறை மாவட்டப் படையணியில் இவன் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். அங்கு போரிட்டாலும் சரி, எங்கு போரிட்டாலும் சரி லக்ஸ்மணன் இல்லாமல் அந்தப் படையணி சண்டையிட்டதேயில்லை. அவனை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்கலாம்; எப்பேர்ப்பட்ட தாக்குதலுக்கும் திட்டமிடலாம். "பொம்மரண்ணன்ர குறூப் இறங்கிறது எந்தப் பக்கம்....?'' என்பதை அறிய, தாக்குதல் திட்ட வரைபடத்தைச் சுற்றி போராளிகள் ஆவலாய் நிற்பது வழமை. எதிரியின் பலமான அரண் என்று கருதும் மிகவும் இறுக்கமான ஒரு பகுதி லக்ஸ்மணனின் அணிக்கு ஒதுக்கப்படும். திட்டம் செயல் வடிவம் பெறும்போது, முதலில் வீழும் பகுதியும் அதுவாகத்தானிருக்கும். எங்களுக்கு 'பொம்மரால்' வான் வழியால் மட்டும்தான் பிரச்சினை. பகைவனுக்கோ, 'பொம்மரால்' கால் வைத்த இடமெல்லாம் பிரச்சினை. அவனது பேரைக் கேட்டாலே ஒரு கலக்கம்; 'வோக்கியில்' குரல் கேட்டாலே நடுக்கம்; எதிரிக்கு அவனென்றால் நடுக்கத்தோடு காய்ச்சல். இது 'உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல.'

உன்னிச்சையில் இடர்பாட்டுக்குள் சிக்கிய ஒரு பலமுனைத் தாக்குதல். மேஜர் லத்தீப்போடு இன்னும் சிலரை, எதிரியின் எல். எம். ஜி. ஒன்று வீழ்த்திற்று. அந்த முனையில் வியூகம் குலைந்தது; சண்டை குழம்பியது; வீரர் தடுமாறிய நேரம். அந்த எல். எம். ஜியின் நிறுத்தமற்ற கதறல் முழுத் தாக்குதலையுமே பிசகிவிடச் செய்யக்கூடிய இக்கட்டான தருணம். பொருத்தமானவனாகத் தேவைப்பட்டான் இன்னொரு முனையில் நின்ற லக்ஸ்மணன். எல். எம். ஜி. அரணுக்கு நேரெதிராக ஒரு அணியை இறக்கி கவனத்தை திசை திருப்பி விட்டு, எதிரியின் பார்வையில் படாமல் தூரத்தால் வளைந்து நகர்ந்து, அந்த அரணைப் பின்பக்கத்தால் நெருங்கி பிடரியில் தாக்கினான். அந்த எல். எம். ஜி. புலிகளின் கைக்கு வந்ததுடன் சண்டையின் போக்கு புலிகளின் சார்பாகத் திசைமாறிய பின்னர் - வெற்றியும் புலிகளின் கைக்கே வந்தது.

முதலாவது ஈழப்போரில் பிரசித்தி பெற்றது வடமராட்சித் தாக்குதல் - அப்போது மட்டக்களப்பிலிருந்து வரவழைக்கப்பட்ட ஒரு படையணியில் அவன் சாதாரண போர் வீரனாக பங்கேற்றான்; இரண்டா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



வது ஈழப்போரில் சரித்திரம் படைத்தது பூநகரித் தாக்குதல் - இப்போது மட்டக்களப்பிலிருந்து பங்கேற்ற ஒரு படையணியில் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக லக்ஸ்ம ணன் படை நகர்த்தினான்.

நாகதேவன்துறை இறங்கு தள -த்தை கடற்புலி வீரர்கள் வளைத் துக்கொள்ள - ஞானி மடம் முகா மையும், அதற்கு அரணாய் அமைக் கப்பட்டிருந்த காவலரண் தொகு திகளையும் உள்ளடக்கிய - கடற்ப டைத் தளத்தை மட்டக்களப்புப் படையணி முற்றுகையிட்டது.

தளத்தின் கிழக்குப் பாதுகாப்பு வியூகத்தில், கறுக்காய்த் தீவுப் பகுதி முன்னணிக் காவலரண் வரிசை யைத் தகர்த்தெறிந்து பாதை திற -ந்து, ஞானிமடம் முகாமை அந்தப் பக்கத்தால் தாக்கவேண்டியது லக்ஸ்மணனின் தாக்குதற் பிரிவிற் குரிய பணி.

கிழக்குப் பகுதியால் இவர்கள் முகாமை நெருங்கும் அதே சம நேரத்தில் - தளத்தினது தெற்குப் பகுதியில் - பூநகரியிலிருந்து வரும் பிரதான வீதியோரக் காவலரண் களை உடைத்துக்கொண்டு உள் நுழையவேண்டிய இன்னொரு தாக் குதற் பிரிவு, சிக்கல்பட்டுவிட்டது.

தென்பகுதியில் எதிரி பலத்த எதிர்ப்பைக் காட்டியதால், அந்த அணி உட்புகுவது கைகூடவில்லை. சண்டை நீள அணி சேதப்பட்டுக் கொண்டேயிருக்க அணி பலவீன மாகிக்கொண்டே போனது. குறிப் பிட்ட நேரத்தில் அந்த அணி லக்ஸ்மணனின் தாக்குதற் பிரிவுக் குத் துணையாக வந்து சேராததி னால், முகாமைத் தாக்குவது சாத்தியப்படவுமில்லை.

சமர் நீண்டுகொண்டிருந்தது; வீரர்கள் வீழ்ந்துகொண்டிருந்தனர்; இரவு விடிந்துகொண்டிருந்தது; நிலைமை பிசகிக்கொண்டே போனது. உடனடியாக மாற்றுவழி ஒன்று தேடவேண்டிய கணங்கள். தென்பகுதியில் இறங்கிய தாக்குதல ணிக்குப் புதுப்பலம் சேர்த்து ஒரு அகோரத் தாக்குதலை நிகழ்த்தி, அரண்களை உடைத்தெறியவேண்

**பகைவனுக்கோ, 'பொம்மரால்' கால் வைத்த இடமெல்லாம் பிரச்சினை. அவனது பேரைக் கேட்டாலே ஒரு கலக்கம்; 'வோக்கியில்' குரல் கேட்டாலே நடுக்கம்; எதிரிக்கு அவனென்றால் நடுக்கத்தோடு காய்ச்சல்.**

டும். தளபதி பானு தீர்மானித்த போது, மனக்கண் முன்னால் லக்ஸ்மணன் தான் நின்றான். இத்த கைய இறுக்கமான சூழ்நிலைகளை இளக்கிவிடுவதற்குரியவன் அவன் தான்.

கிழக்குப் பகுதியிலிருந்த அணி பின்னுக்கு எடுக்கப்பட்டு தென் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டது. குழுக்கள் துரிதமாக மீள ஒழுங்க மைக்கப்பட்டன. உடனடித் தாக் குதற் பிரிவொன்று உருவாக்கப் பட்டது. லக்ஸ்மணன் தான் கொமாண்டர். மூர்க்கத்தனமான ஒரு தாக்குதல். கணிக்கப்பட்ட நேரத்திற்குள் காரியம் முடிய தெற் குப் பாதுகாப்பு அமைப்பையும் உடைத்தெறிந்துகொண்டு, புலிக ளின் தாக்குதற் பிரிவுகள் ஞானி மடம் முகாமைச் சுற்றி முற்றுகை யிட்டன. பூரணமாகவே புலிகளுக் குச் சார்பான தளநிலை பிறந்தது. எனினும் - பொழுது விடிந்து விட்டதால் முகாம் தாக்குதல் அடுத்த இரவுக்கு ஒத்திப்போடப் பட்டது.

மூன்றாள் நாள் மாலை - ஞானி மடம் கடற்படை முகாமை அழி -த்து, பூநகரி கூட்டுத்தளச் சமரை வென்று, புலிகளின் படையணிகள் வெற்றி வாகையோடு மீண்டுவர-

லக்ஸ்மணனை, மட்டக்களப்பு - அம்பாறைப் பிராந்தியத்தின் துணைத் தளபதியாகத் தலைவர் அவர்கள் நியமித்தார்.

தென்பிராந்தியப் படையணி புனருத்தாரணம் செய்யப்பட்டு - புதுமெருகூட்டப்பட்டு - புதிய நிர் வாகக் கட்டமைப்புகளுடன் மட் டக்களப்புக்குப் புறப்பட்டபோது - எவ்வளவு குதூகலத்தை அவனில் கண்டோம்.

தளபதி ராம் இதற்குத் துணைச் சேனாதிபதியாக அவன்....

எத்தனை கனவுகள்... எத்தனை கற்பனைகள்.... தென்தமிழீழமெங் கும் புலிக்கொடி கட்டும் ஆசை கள்....

கட்டுமுறிவுக்குளம் தாக்குதலில் பாதிப் பொறுப்பெடுத்துச் சென்ற வன், பூமாஞ்சோலைத் தாக்குதலில் முழுவதையும் பொறுப்பெடுத்தான். மட்டு நகரிலிருந்து ஏழே கிலோ மீற்றர் தூரம்தான். சற்றுச் சிக்க லான இலக்கு. சிக்கெடுத்துச் சிக் கெடுத்துப் பழகிப்போனவன் - முடி வெடுத்தான்.

படையாய்ச் சென்றனர்; பகையை வென்றனர். மீளத் திரும் பிட அவர்கள் தயாரான வேளை.... அதிர்ந்த ஒரு வெடியோசையோடு அந்தத் துயரம் நிகழ்ந்தது!

போரெடுத்துப் போரெடுத்துப் பகைவனை அழித்துக்கொண்டேயி ருந்த எங்களின் பொம்மரை, மறைந்து கிடந்த ஒரு பகையாளன் 'கிரனேட்'டால் வீழ்த்திவிட்டான்.

எட்டாண்டு காலமாக ஓயாத புயலாகச் சுழன்றடித்த அந்த வீரனை, கைக்குண்டின் சிதறல்கள் சுயநினைவற்று வீழ்த்தின. "பொம் மரண்ணா...! பொம்மரண்ணா....!!" என்று மௌனமாய்க் கதறிய தோழர்களின் மடியில் சாவோடு போராடிய அந்த வீரன்-

மரணத்தை வென்றான்; மனங்க ளில் நிறைந்தான். எம்முள் நிலை யான நினைவானான்!

அவனது பேர் சொல்ல- அவ னது கைகளில் வளர்ந்த நூற்றுக் கணக்கான போராளிகள், தானை வீரர்களாகவும் தளபதிகளாகவும் இன்று அணிவகுத்துள்ளார்கள்.

மகிழடித் தீவிலிருந்து புங்குடுதீவு வரை தமிழன் வென்றெடுக்கும் நாளினுக்காக அவர்கள் போரெ டுப்பார்கள்! போரெடுப்பார்கள்!! லக்ஸ்மணனின் புதைகுழி மீதினில் புலிக்கொடி நாட்டுவார்கள்! ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழ் நாடக வளர்ச்சி

சங்க நூல்களிலும் உரைகளிலும் நாடகக் கலையைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சங்ககாலத்திலேயே நாடக இலக் கியங்களும் - இலக்கணங்களும் இருந்தன என்பதற்கு அவை சான் றாக அமைந்துள்ளன.

பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், இசை நுணுக்கம், இந்திர காவியம், பஞ்சமரபு, பரதசேனாதிபதியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல் போன்ற பழந்தமிழ் நாடக - இசை



நூல்கள் கால வெள்ளத்தால் அழி ந்துபோயின. இவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டுமே ஆங்காங்கே காணக்கிடக்கின்றன.

திருக்குறளில் "கூத்தாட்டு அவைக் குழாத்து" என்று குறிப்பி டப்படுவதன் மூலம் நாடக அரங் கும் நாடகமும் அந்த நாளில் இருந் தன என்பதை நாம் அறிய முடி கிறது.

பட்டினப்பாலையில் "பாட லோர்ந்தும், நாடகம் நயந்தும்" என்ற குறிப்பு வருகின்றது

சீவகசிந்தாமணி, மணிமேகலை, பெருங்கதை, திருவாசகம் போன்ற நூற்களில் நாடகங்களைப் பற்றிய குறிப்புகள் நிறைய காணப்படுகின் றன.

நாடகம் பற்றிக் குறிப்பிட வந்த தொல்காப்பியர் பொதுவியல், வேத்தியல் என்ற பெயர்களால் குறிப்பிடுகிறார். நாடக நடிகர்கள் அந்த நாளில் கூத்தர், பொருநர், தோடியர் என அழைக்கப்பட் டனர். இவர்களுக்குத் துணையாக இசைபாடியும் இசைக் கருவிகள் இசைத்து உதவியவர்கள் பாணர் கள், பாடினிகள், விறலியர் என வழங்கப்பட்டனர். பண்டைய தமிழகத்தில் அகக்கூத்து, புறக்கூத்து, வசைக்கூத்து, புகழ்க்கூத்து, வரிக் கூத்து, வரிச்சாற்திக்கூத்து, சாந்திக் கூத்து, விநோதக்கூத்து, ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து, இயல்புக் கூத்து, தேசியக்கூத்து எனப் பல வகையான நாடகங்கள் நடிக்கப் பட்டுள்ளன,

சிலப்பதிகார அரங்கேற்ற காதை யில் நாடக அரங்க அமைப்பு பற்றி விரிவாகவே சொல்லப்படுகின்றது.

நாடக மேடையில் தொங்க விடப்படும் திரைகளில் எத்தனை வகையுண்டு என்பது பற்றிக்கூட சிலம்பு கூறுகிறது,

ஒருமுக எழினி
பொருமுக எழினி
கரந்துகவரல் எழினி

போன்ற பல்வேறு வகையான திரைகளைப் பற்றிய குறிப்புகளைப் பார்க்குபோது வியப்பாக உள்ளது.

ஷேக்ஸ்பியர் வாழ்ந்த காலத்தில் இங்கிலாந்து நாட்டு நாடகங்களில் மூடுதிரைகளே கிடையாது. அந்தக் கலையை 15ஆம் நூற்றாண்டு வரை ஆங்கிலேயர் அறிந்திருக்கவில்லை.

ஆனால் இரண்டாயிரம் ஆண் டுகளுக்கு முன்னரே தமிழர்கள் திரைச் சீலைகளை அமைக்கும் நுண்ணறிவு பெற்றிருந்தனர் என் பது நமக்குப் பெருமையளிப்பதா கும்.

பல்லவர் காலத்திலும் நாடக் கலை செழிந்திருந்தது. மகேந்திர வர்ம பல்லவன் எழுதிய "மத்த விலாசப் பிரவசன" சிறந்த சமஸ் கிருத நாடகமாகும்.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் கோவில்களில் நாடகங்கள் நடை பெற்றதற்கான குறிப்புகள் பல கல்வெட்டுக்களில் காணக்கிடைக் கின்றன.

மாமன்னனான இராசராச சோழனின் வீர வெற்றிகளைப் போற்றும் வகையில் விஜய ராஜேந் திர ஆசிரியர் என்பவர் எழுதிய, "இராஜ ராஜேஸ்வர நாடகம்", "பூம்புலியூர் நாடகம்" ஆகியவை அரங்கேற்றப்பட்டன.

14 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு குறவஞ்சிப் பள்ளு, நொண்டி போன்ற இசை - நாடக நூற்கள்

**பழ. நெடுமாறன்**

தோன்றின, இவைகள் பெருபாலும் கோவில் திருவிழாக்களில் நடத் தப்பட்டன.

திரிகூடராசப்பக் கவிராயர் பாடிய "குற்றாலக் குறவஞ்சி" சிறந்த நாடக நூல் மட்டுமல்ல, கவிதை நயமிக்க நூலாகவும் திகழுகிறது. அதைப் போலவே 'முக்கூடற்பள்ளு' என்ற நூலின் சிறப்பை அனைவரும் அறிவோம்.

17ம் நூற்றாண்டின் தொடக் கத்தில் அருணாசலக் கவிராயர் எழுதிய இராமயண நாடகம், அசோமுகி நாடகம், இராமச்சந் திரக் கவிராயர் இயற்றிய பாரத விலாசம், கோபாலகிருஷ்ணபாரதி எழுதிய நந்தன் சரித்திரக் கீர்த் தனை, இயற்பகை, நாயனார் கீர்த் தனை ஆகியவை இசைப் பாடல் களாகவே அமைந்தன. அரங்குக ளில் நடிக்கப்படவில்லை.

இதற்குப் பிற்காலத்தில் தெருக் கூத்துக்கள் தோன்றின. பாட்டும் வசனமுமாக இவை நடிக்கப்பட் டன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


தஞ்சையில் மராட்டியர்கள் ஆண்ட காலத்தில் நடத்தப்பட்ட மராட்டிய நாடகங்களை அடியொற்றித் தமிழ் நாடகங்களும் தோன்றலாயின.

மதுரை வீரன், தேசிங்குராசன், அரிச்சந்திரன். சித்திராங்கி, பவளக்கொடி போன்ற ஜனரஞ்சகக் கதைகள் நாடகங்களாக நடிக்கப்படத் தொடங்கின.

19ம் நூற்றாண்டின் இறுதியில் தொழில் முறையில் தமிழ் நாடகங்கள் உருவாக்கப்பட்டன.

கடந்த அரை நூற்றாண்டில் தமிழ் நாடக வளர்ச்சி என்பது பிரமிக்கத்தக்தாக இருந்தது.

சம்பந்த முதலியார், பரிதி மாற் கலைஞர், சங்கரதாஸ் சுவாமிகள், ஏகை சிவசண்முகம்பிள்ளை, உடுமலை முத்துசாமிக் கவிராயர், சித்திரக்கவி சுப்புராய முதலியார், குடந்தை வீராசாமி வாத்தியார், சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர், சி. கன்னையா ஆகியோர் நவீன நாடகக் கலையை வளர்த்தனர்.

அறிஞர் அண்ணா, மு. கருணாநிதி, திருவாரூர் தங்கராசு போன்றவர்கள் சீர்திருத்த நாடகக் கலையை வளர்த்தனர்.

திரைப்படக் கலையும், தொலை-க்காட்சியும் செல்வாக்குப்பெற்ற பின்னர் தமிழ் நாடகக் கலையின் வளர்ச்சி குன்றி வருகிறது.

பழைமையான தமிழ் நாடகக் கலை அழிந்துவிடாமல் பாதுகாத்து வளர்க்கும் பணியினை தலையாய கடைமையாக நாம் கொண்டுள்ளோம். இரண்டாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வந்திருக்கிற தமிழ் நாடகக் கலை, திரைப்படம், தொலைக்காட்சி போன்றவற்றால் நசிந்துவிடக்கூடாது. முத்தமிழில் ஒன்றான நாடகத் தமிழைப் போற்றிப் பேணுதல் தமிழர் கடமையாகும்.

# பகைவனுக்கு சனியனாகவே இரு!

“உனது பெயர் சனியனா?”

காகம் இவ்வாறு கிளியைக் கேட்டது!

“ஏன்”

“அப்படித்தான் அந்த ‘கொழும்பு அக்கா’ உனக்குப் பெயர் வைத்துள்ளா”

இது அந்தக் கிளி முன்னர் அடைபட்டுக் கிடந்த வீட்டின் கதை!

இப்போது அதே கிளி அந்த வீட்டில் தொங்கிய கூண்டுக்குள் அல்ல.

பரந்து வளர்ந்திருந்த ஓர் ஆலமரத்தின் உச்சக் கிளையிலே இருந்தும் வட்டமிட்டுப் பறந்தும் கனிகளைக் கோதிக் கொறித்தும் தனது சுதந்திர வானிலே மிதந்துகொண்டிருந்தது!

காகம் அந்த வீட்டையும் எட்டிப் பார்க்கும்; ஆனால் வெளியில் வாழ்ந்து கொள்ளும்!

கிளிக்கும் இதற்கும் அப்போது ஏற்பட்டது தான் இந்த உறவு!

“அவ என்னைச் சனியன் என்கிறாவா? நல்லது! பகைவர்களுக்கு நாம் பகைவர்களாகவே இருப்பது நல்லது!”

இவ்விதம் கூறியபடி மேலெழுந்து தென்னையில் இருந்து, வயல் வெளிகளையெல்லாம் கடந்து, கிளி விரைந்து செல்வது தெரிந்தது!

தனித்து அல்ல, தனது கிளையோடு சேர்ந்து! ‘கீக் - கீ’ என்ற இசையோடும் சேர்ந்து! எத்துணை இன்பம், இந்தச் சுதந்திர வாழ்வில்!

ஆனால் அந்த வீட்டிலே கூண்டினுள் அடைபட்டுக் கிடந்தபோது-

அன்று ஒரு நாள்-

‘கொழும்பு அக்கா’ ஊருக்கு வருகிறா என்றதும் அந்த வீடு கும்மாளம் கொண்டது! குழந்தைகள் குதித்துக் கூத்தாடினர்!

அக்காவும் நல்லவதான். சிரித்த முகத்தோடு நிறைய பொருள் கொண்டுவந்து குழந்தைகளுக்கும் எல்லோருக்கும் தாராளமாய் வழங்கினா!

கூண்டுக்கிளிக்கு?

அதையும் பரிவோடு பார்த்தாள். “பாவம்” என்றாள்!

கிளியின் நெஞ்சம் ஆவலால் அடித்தது!

மறுநாளும் அக்கா ‘கிளி பாவம்’ என்றாள்!

தான் விடுபடப்போகும் நாளை கிளி உறுதிப்படுத்திக் கொண்டது! ஒரே “கீச் கீச்” தான்!

மூன்றாம் நாள், அக்காவின் பரிவு மேலும் வளர்வது தெரிந்தது.

நான்காம் நாள், ஒரு வேலையாள் வந்தான்; அக்காவின் கட்டளைப்படி வந்தான்.

கையிலே ஒரு வளையம் வைத்திருந்தான். அது, கிளி கூண்டிலே இருந்து ஊஞ்சலாடவாம்! மறு கையில் ஒரு தீந்தைத் தகரம், கூண்டுக்குப் பச்சைநிறப் புதுப்பொலிவு கொடுக்க!

கிளி ஏங்கி நின்றது. முகம் கறுக்க நின்றது!

வந்தவன் கூண்டின் கதவை மெதுவாகத் திறந்து, கிளியை ஒரு மரணப் பிடியோடு வெளியே எடுத்தான்.

- இங்குதான் இயற்கையின் நுட்பம் விளங்குகிறது! ஒவ்வொரு உயிருக்கும் அது அஞ்சாமை, வீரம், ஆயிரம் மடங்கு பலம் என்பதைப் புகுத்தியே நிற்கிறது; இவை மட்டுமல்ல, ஆயுதமும் தான்!

கிளி சிறகடித்துப் பார்த்தது. முடியவில்லை! எங்கிருந்து தான் அந்த ஆவேசம் பிறந்ததோ தெரியாது - தலையை ஓங்கி நிமிர்த்தி அவனின் கையிலே ஒரு கொத்து! கொத்தல்ல, ஒரு கிழியல்! நுனிவிரல் பிழந்து குருதி கொட்டிற்று!

“ஐயோ!” என்று அலறிக் கைவிட்டான் அவன்!

உதவிக்கு ஓடிவந்த அக்காவுக்கும் ஒரு கீறல்!

அத்துடன் பறந்தடித்துக்கொண்டு உயர்ந்துவிட்டது கிளி!

கொழும்பு அக்காவின் ‘சனியன்’ பட்டத்தை அது ஏற்று மகிழ்கிறது!

“எதிரியின் சலுகைக்கு உள்ளாகி உன்னை நீ அடிமையாக்காதே!” - இது காகம் காட்டி வாழும் தத்துவம்.

‘எதிரிக்கு எதிரியாய் எழுந்தாலே வெற்றி!’ -இது கிளி செய்து காட்டிய சாதனை!

நாக. பத்மநாதன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மதிப்புரை

## விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய

# கேசவராஜனின்

# 'பிஞ்சுமனம்'

உலக சினிமா அரங்குக்குத் தமிழ் சினிமா தெரியா மலே இருக்கும் நிலையை மாற்றுவ தாயின் நாங்கள் தான் மாற்ற வேண்டும். உண்மையில் சினிமா என்பது 'கமெரா'வை முதன்மை யாகக் கொண்ட 20-ம் நூற் றாண்டின் உன்னத கலை வடிவம் என்பதும், அதன் சக்தி மகத்தானது என்பதும் கேசவராஜன் அவர்க ளின் பிரக்ஞையில் ஆழமாயுள்ளன. ஆம்! எமது வீடியோ திரைப்பட வளர்ச்சியில் பிஞ்சு மனம் ஒரு பாய்ச்சல்!

ஒரு திரைப்படத்தில் கோணம், ஒளியமைப்பு, சலனத்தன்மை ஆகி யவை முக்கியமானவை என்பதைத் தெரிந்து செய்திருக்கிறார் கேசவ ராஜன்.

பிஞ்சு மனத்தின் கருப்பொருள் என்ன? அதனைப் பார்த்து முடிய எமது மனத்தில் நிலைபெறுகிற செய்தி என்ன? இந்தக் கேள்விக ளின் விடைகள் பார்வையாள னுக்குப் பார்வையாளன் மாறுபட லமாயினும் சர்வதேசமும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு கருப்பொருள் அதனுள்ளே உண்டு. "மனிதர்க ளால் ஏன் ஒன்றிணைந்து மகிழ்ச்சி யாக வாழ முடியவில்லை?" என்ற கேள்விதான் அந்தப் பரந்த விரிந்த கருப்பொருள்!

போஸ்ட் மாஸ்டர் மாசிலா மணி தனியாக இருக்கிறார். அவருக்கு அன்பு தேவைப்படுகிறது. அன்பு காட்டக்கூடிய குழந்தை ஒன்று முன்வீட்டில் வசிக்கிறது. ஆனால் அந்தக் குழந்தையிடம் அன்பு காட்டமுடியாதபடி அவரை ஏதோ ஒன்று தடுக்கிறது. அது என்ன? இந்தக் கேள்வியை மனத்தில் எழுப்புவதே படத்தின் வெற்றி எனலாம். படத்தின் ஆரம் பத்தில் இருந்தே சிரிப்பு இல்லாத பாத்திரமாக வரும் மாசிலாமணி குழந்தைக்கும் அவருக்குமிடையில் நல்ல வழிகாட்டலும் நல்ல உறவும் வந்த பிறகு சிரிக்கிறார். அதுதான் செய்தி! வேறென்ன? இந்த விரிந்த பார்வையைத் தவிரச் சற்று உள்ளே வந்து பார்க்கும் போது தமிழீ ழத்தின் பல மனிதர்களுக்கு மாசி லாமணி ஒரு குறியீடாகிறார். அவருடைய பாத்திரவாக்கம் மிகச் சிறப்பாக இருக்கிறது. வடமராட்சி சிவராஜா, பாத்திரத்துக்கு ஈடுகொ டுத்து நடிக்கிறார். அவருடைய பேச்சில் வரும் மண்வாசனை (என்னடாம்பி மற்றும் வருத்தக்கா றர் போன்றவை) சிறப்பாக இருக்கி றது. அது அந்தப் பாத்திரத்துக்கு மனதில் நிற்கும் ஒரு தனித்தன்மை யைக் கொண்டு வருகிறது.

பாத்திரங்கள் எதையும் லட்சிய மயப்படுத்தாமல் இருப்பது இன் னொரு சிறப்பம்சம் எனலாம். எமது அனுதாபம் குழந்தையின் குடும்பத்தின் பக்கமே இருக்கிறது. பிள்ளை பிழை செய்கிறது. பிள்ளை செய்தது பிழை என்பதைத் தந்தை ஒப்புக் கொள்கிறார்; மன்னிப்புக் கேட்கிறார். இழப்புத்தான் ஈடு செய்வதாகச் சொல்லுகிறார். "உன்னால் முடியாது" என்று மாசி லாமணி சொல்லும் போதுதான் அவருடைய சுயகௌரவம் பாதிக் கப்படுவதாக உணர்கிறார். மாசி லாமணி மீது எழுந்த கோபம் Displaced Anger ஆகக் குழந்தை மேலேயே திரும்புகிறது. தனது நடத்தையால் பிள்ளை ஆபத்தான நிலைக்கு வருகிறதைப் பார்க்கிற போது ஏற்படும் சுயவெறுப்பு, கழிவிரக்கம் ஆகியவை அவரைக் குடிக்கத் தூண்டுகின்றன. ஒரு சாதாரண மனிதனின் சிக்கலான நடத்தை, உளவியல் கோணத்தில் பார்க்கப்பட்டிருப்பது படத்தின் மற்றொரு 'பிளஸ் பொயிண்டா'க அமைகிறது.

"கோபம் வந்தா அடிப்பீங்க, கவலை வந்தா குடிப்பீங்க.... நாங் கள் என்ன செய்யிறது?'' என்று மனைவி கேட்கிறாள். அந்த இடத் தில் தமது உணர்வுகளை எல்லாம் மனத்தின் ஆழத்தில் புதைத்து, பொறுமை என்ற முலாம் பூசி குடும்பத்தை இழுத்துச் செல்லும் எமது பெண்களின் நிலை தெளி வாகக் காட்டப்படுகிறது. ஆண்கள் தமது உணர்வுகளுக்கான வடிகால் களை இலகுவாகத் தேடிக்கொள் ளும் போது, பெண்கள் அதனைப் புதைத்து வைக்கும் அவலத்தை இதைவிட நுணுக்கமாக வேறு எப் படிக் காட்டமுடியும்? தனபாலு டைய பாத்திரம் Variety நிறைந்த நடிப்பை வேண்டி நிற்கிறது. சிறப் பாகச் செய்கிறார்.

'கிட்டு பூங்கா'வில் உலா வருகிற போது குழந்தையின் தாய் ஊதா நிறச் சேலை உடுத்தியிருக்கிறார். கி.மு. 5ம் நூற்றாண்டில் இருந்த கிரேக்க அரங்கியலே ஊதா துன் பத்துக்குரிய (Tragie) நிறமாகப் பயன்பட்டிருக்கிறது. அகமெம்னன் போர் முடிந்து திரும்பும் போது ஊதாநிற உடை அணிந்த பெண் கள் அவனை வரவேற்கிறார்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


அது அவனுக்கு வரப்போகும் துன்பத்துக்கு அறிகுறியாகிறது. இங்கேயும்.....

மனைவியையும் குழந்தையையும் சைக்கிளில் வைத்து அவன் உழக்கிக் கொண்டு போகிறான். சமநிலைக்கு கஷ்டப்படுவதை நாம் அவதானிக்கிறோம். அது வெறும் சைக்கிள் பயணமாக எமக்குத் தோன்றவில்லை. எமது நாட்டில் இன்று ஒரு குடும்பத் தலைவன் எவ்வளவு சிரமப்பட்டு தன் குடும்ப வண்டியை ஓட்டுகிறான். சமநிலையைப் பேண எவ்வளவு சிரமப்படுகிறான் என்பதையும் அது நினைக்க வைக்கிறது.

கடினவேலையும் இன்பமான காட்சிகளும் மாறிமாறிக் காட்டப்படுகிற போது அவன் கஷ்டப்பட்டு உழைத்துத் தன் பிள்ளையைச் சந்தோசமாக வைத்திருக்கின்றான் என்பதற்கு மேலாக இன்பமும் துன்பமும் வாழ்வின் தவிர்க்கமுடியாத இரு பக்கங்கள் என்ற தத்துவத் தொனியும் இணைந்து தெரிகிறது.

விமானத் தாக்குதலில் பலியான பெற்றோர் இருவரும், பிள்ளை பாடசாலை விட்டு வந்து பார்க்கும் வரை வேறு எவராலும் கவனிக்கப்படாமல் அந்த இடத்தில் கிடப்பது யதார்த்தத்திற்குக் கொஞ்சம் முரண் போலப்படுகிறது.

நல்ல படங்களில் கமெராவும் படத் தொகுப்பும் முக்கியமானவை. மிக நல்ல தயாரிப்பாளர்கள் படத் தொகுப்பு அறைக்குள் பல நாட்களாகவே அடைபட்டுக் கிடப்பார்கள். இங்கே இன்னும் வளர்ச்சிக்கு இடம் இருக்கிறதாயினும் இப்படத்தில் இவ்விரு விடயங்களும் கவனிக்கப்பட்டுள்ளன.

நாங்கள் தயாரித்த முன்னைய வீடியோ படங்கள், குறும்படங்களுடன் ஒப்பிடுகையில் எமது மெல்லிய உணர்வுகளைத் தொட்டு வெற்றி பெற்றுள்ள இப்படத்திற்காகத் தயக்கம் எதுவுமின்றிக் கேசவராஜனுக்கும் அவரோடு இணைந்த கலைஞர்களுக்கும் 'சபாஷ்' கூறலாம்!

# கல்லறைக் கோயில்கள்

போராளியின் பேனாவிலிருந்து..

**- மகிந்தன் -**

கல்லறைகளும் போர்தொடுக்கும்
எங்கள் கல்லறைகளும் போர்தொடுக்கும்
எங்கள் நெஞ்சிலே குண்டது பாய்ந்தாலும்
எங்கள் பொன்னுடல்கள் மண்ணில் சாய்ந்தாலும்
(கல்லறைகளும்)

தாய்தந்தையைப் பிரிந்து வந்தோம்
தாய்நாட்டிலே அன்புகொண்டோம்
சத்தியப் போரிலே எம்முடல் வீழ்ந்தாலும்
இலட்சிய வேங்கையெங்கள் கனவுகள் அழியாது
(கல்லறைகளும்)

வேங்கைகள் நாம் உறுதிகொள்வோம்
தமிழீழ மண்ணினை மீட்டெடுப்போம்
இன்னல்கள் ஆயிரம் வந்தாலும்
இடியாய் பாய்வோம் வென்றிடுவோம்
வீரர்கள் நாம் மடிந்தாலும் வீரசரித்திரத்தில் நிறைந்திருப்போம்
(கல்லறைகள்)

எங்களின் கல்லறைகள் கோயிலிலும் மேலாகும்
வேங்கைகள் எங்கள் சாதனைகள் அனைத்துக்கும் மேலாகும்
இழந்துவிட்ட எம்தாயகத்தை மீட்டிடும் போரில் நாம் மாண்டாலும்
மாவீரராய் நிலையடைந்து இம்மண்ணில் நாம் புதைந்தாலும்
(கல்லறைகளும்)

## 'எரிமலை' நடாத்தும் முதலாவது 'சிறுகதைப் போட்டி'

இந்த நாடோடி வாழ்க்கையை வெறுத்து துன்பப்படுகின்ற ஏராளமான உள்ளங்களே, புலம் பெயர் வாழ்வில் நாம் எத்தனையோ புதிய அனுபவங்களைப் பெற்றிருக்கின்றோம். பிறந்த பூமியின்பால் எப்போதும் துடிப்பும், துயரும் உள்ளத்தின் அடியாளத்தில் இருந்து கிளர்கின்றன. அவை எம் துயிலைக் கலைக்கின்றன. முகமிழந்த அகதியாய் வாழும் இந்த வாழ்விடத் துயரம் சாதாரணமானதல்ல. எமது சுய அடையாளம் அழிந்து போய்விடுமோ என்ற அச்சத்தை எமக்குள் ஏற்படுத்துகின்றது. இழிந்தும், நலிந்தும்போய் விடுவோமா? எங்காவது எம்மில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற சில பண்பின் அடையாளங்களை வைத்துக் கொண்டு நாங்கள் 'தமிழர்கள்' என்று கொண்டிருப்போமா? புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ எழுத்தாளர்களே எங்கே - இன்னுமொரு சந்ததிக்கு இத் துயர் வந்துவிடக் கூடாது என்று சபதம் எடுங்கள். உங்களைச் சுற்றிலும் ஓராயிரம் கண்ணீர்க் கதைகள். இயந்திரமாய் சுழலும் வாழ்வின் வேகத்தை ஒரு கணம் நிறுத்தி ஆற அமர இருந்து உங்களின் சின்னச் சின்னக் கதைகளை எழுதுங்கள்.

உலகம் பூராவும் பரந்து வாழும் தமிழீழச் சிறுகதை எழுத்தாளர்களே! உங்கள் அனைவரையும் எரிமலை நடாத்தும் இச் சிறுகதைப் போட்டியில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

முதலிடம் பெறும் மூன்று கதைகளும் எரிமலையில் பிரசுரிக்கப்படும். போட்டிக்கு வரும் சிறுகதைகள் திருப்பி அனுப்பி வைக்கப்படமாட்டாது.

உங்கள் சிறுகதைகளை ஆடி 10ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கலை இலக்கியக் கல்வியும் திறனாய்வும்

## சில அடிப்படை வினாக்கள்

அ. கணிதக் கல்விக்கு புதுமெருகு தர முனைந்தோர் "புதிய கணிதம்" என்ற எண்ணக் கருவை முன்வைத்தனர். அத்தகைய ஒரு முன்னெடுப்பைக் கலை இலக்கியக் கல்வியும் வேண்டி நிற்கின்றதா?

ஆ. ஒழுக்க வாழ்க்கை, உணர்ச்சி வாழ்க்கை, உலகு பற்றிய தரிசனம், அறிவின் புதிய தொடுவானம் முதலிய எதிர்பார்ப்புகள் கலை, இலக்கியக் கல்வியூடாக முன்னெடுக்கப்படும் என்ற இலக்குகள் நழுவவிடப் படுகின்றனவா?



இ. "மகிழ்ச்சியின் ஊடாட்டம்" என்ற இலக்குகள் கலை இலக்கிய கல்வியில் கைவிடப்பட்டு பொறிமுறையான பரீட்சை இலக்குகளுக்குள் கற்பித்தல் காலூன்றி விட்டதா?

ஈ. நெகிழ்ச்சியற்ற உபாயங்களின் நெறிப்பாடாக் கலை இலக்கியத் திறனாய்வு பயன்படுத்தப் படும் வேளைகளில் பொறி முறையான உருச்சிதைவுகள் ஏற்பட்டு விடுகின்றனவா?

உ. கலை இலக்கிய உருவங்கள் முழுமையாக நோக்கப்படாது வெட்டிப்பெயர்த்து உருக்குலைக்கப்படும் செயல்முறைகள் வளர்த்து எடுக்கப்படுகின்றனவா?

## ஒரு மீள் நோக்கு

மேற்கூறிய வினாக்களினுள்ளே உணர்ச்சிக் கலப்புக் காணப்பட்டாலும் அவற்றினூடே குறிப்பிடப் படும் அறிகைக் கோலங்களை ஆய்வுக்குட்படுத்த வேண்டியுள்ளது.

### கலை இலக்கியங்களைப் பாடங்களாக்குதல்:

கலை இலக்கியங்களுக்குரிய "சுய இயங்கும் வலு", "தனித்துவமாக இயங்கும் ஆற்றல்", "மொழி பெயர்க்கமுடியாத இயல்பு" என்பவை அவை உருவாக்கப்படும் சமூகத் தளத்தின் இயல்புகளோடு சங்கமித்து நிற்கும். தனித்துவம் என்பவற்றின் வழியாக நோக்கும் பொழுது "சிக்கலாகும்" தன்மையை அவதானிக்கலாம். வினைத்திறன் மிக்க வெளிப்பாடு "சிக்கலாகும் தன்மை"யினைக் கொண்டிருக்கும். உதாரணமாக மனித மூளையானது வினைத்திறனொட்ட செயல்களை இயற்றுகின்றது என்று கூறும்பொழுது அதன் சிக்கலாகிய தன்மையின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. இலக்கிய ஆக்கங்களுக்கும் இக் கருத்து பொருந்துவதாக அமைகின்றது.

கலை இலக்கியங்களின் முழுமையான பண்பை யாதாயினும் ஓர் அளவுகோலுக்குள் சுருக்குதல் விபத்துக்களை ஏற்படுத்துவதாக அமையும். "சுருக்கமுடியாமை" என்ற பண்பு இலக்கியக் கல்வியிலும் திறனாய்வுகளிலும் நேர்முகமாகவோ, எதிர்முகமாகவோ நிராகரிக்கப்படும் சந்தர்ப்பங்களையும் காணலாம். "நயத்தல்" அல்லது "நயம் எழுதுதல்" என்ற கற்பித்தல் செயல்பாட்டில் சுருக்கமுடியாமை (Irreduoibility) என்ற இயல்பு கைவிடப்பட்டு "சுருக்கப்படும் அலகுகள்" வழியாகவே நயத்தல் முன்னெடுக்கப்படுகின்றது. உதாரணமாக ஒரு பெருங் கவிதையின் முழுமையாதாயினும் ஒரு கருத்தினுள்ளே அல்லது ஒரு சொற்றொடரினுள்ளே சுருக்கி விடப்படுகின்றது.

கலை, இலக்கியம் முதலியவை "பாடம்" என்ற அமைப்பினுள் கொண்டுவரப்படும் பொழுது ஏனைய பாடங்களுக்கு வழங்கப் படும் கட்டளைகளை ஏற்கவேண்டியுள்ளமையால், இலக்கிய ஆளுமையும், சுவையும், நயத்தலும் கைநழுவ விடப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் எழுகின்றன.

பாடக்குறிப்புக்கள் தருவோரால் வழங்கப்படும் இரண்டாம் நிலைத் தகவல்கள் மீதும், இலக்கியத்துக் கான குறிப்புப் புத்தகங்கள் மீதும் தங்கி நிற்கும் நிலை ஏற்படுகின்றது. கலை இலக்கியக் கல்வியின் சிறப்புப் பண்புகளுள் ஒன்றெனத் தீர்ப்புக்கூறும் திறன், அல்லது "விழுமியத் தீர்மானிப்பு" வலு வற்புறுத்தப் படுகின்றது. ஒவ்வொருவருக்குமுரிய ஆளுமைத் தனித்துவத்தின் வழியாகவே இது கட்டியெழுப்பப்பட வேண்டியுள்ளது. கலை இலக்கியத் துக்கான அணுகுமுறை ஒவ்வொருவரும் வாழும் சமூக நிரலமைப்பின் தனித்துவத்தின் வழியாக முனைப்படைகின்றது.

கலாநிதி சபா. ஜெயராசா

கல்விச் செயன்முறையும், சமூகச் செயன்முறையும் தனிமனிதரைக் கலை சம்பந்தமான வெறும் மூலப்பொருளாக (Artistically rawperson) வைத்திருப்பதில்லை. கலை இலக்கிய இரசனை என்பது மாணவரது மனக்கருத்து உருவாக்கம், அறிக்கை அமைப்பு என்பவற்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


றுடன் தொடர்புடையதாக இருப்பதனால், சமூகச் செயல்முறையில் இருந்து பிரித்துத் தனிமனிதரையும், இரசனையையும் பற்றி விளக்குதல் கடினமாகவுள்ளது.

ஆரம்பப் பாடசாலைகளில் கலை இலக்கியங்கள் சித்தரிப்புப் படங்களுடனும், உதாரணங்களுடனும் இணைத்துக் கற்பிக்கப்படுகின்றன. அதாவது கலை இலக்கிய ஆக்கங்களும் உருவகங்களும் நிபந்தனைப்படுகின்றன. இந்த நிலையிலிருந்து அருவமான கலை இலக்கியங்களை நோக்கிய பெயர்ச்சியானது உரிய முறையிலேயே ஏற்படுத்தாத சந்தர்ப்பங்களில் கலை இலக்கியக் கல்வியும் இரசனையும் பாதிக்கப்படுகின்றன.

ஆசிரியர்களும் திறனாய்வாளர்களும் கலை இலக்கியங்களை விளக்குவதற்குப் பல நுட்பவியல் சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக கவிதையை விளக்குவதற்கு படிமம், அசைவு, ஓசை, ஒத்திசைவு, மனவெழுச்சி, சிந்தனை, கற்பனை முதலாம் நுட்ப அலகுகளைப் பயன்படுத்துகின்றனர். இந்த அலகுகள் அல்லது ''தனிமங்கள்'' பிற அலகுகள் மீது சாராது சுதந்திரமாகத் தனித்து இயங்குவதில்லை. இதனைப் புலப்படுத்தாதவிடத்துக் கலை இலக்கிய அணுகுமுறை பின்னடைய நேரிடும். இந்த அலகுகளின் ஒன்றிணைப்பைத் திறனாய்விற் கவனத்துக்கு எடுக்கவேண்டியுள்ளது. இத்துறையில் விரிவான ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கலை இலக்கியங்களில் பிரதிநிதித்துவம் செய்யப்படும் "யதார்த்தம்'' என்பதற்கும் வாழ்க்கை யதார்த்தத்துக்குமிடையே நுண்ணிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. திறனாய்வுகளிலும், கலை இலக்கியம் கற்பித்தலிலும் "இரண்டும் ஒன்று" என்ற கருத்தே பெருமளவில் முன்வைக்கப்படுகின்றது. வாழ்க்கை யதார்த்தம் கலை இலக்கிய ஆக்கத்துக்குரிய மூலப்பொருளாகும். மூலப் பொருள் பண்படுத்தப்பட்டு, நிலைமாற்றம் செய்யப்பட்டு, மெருகூட்டப்பட்ட பின்னரே முடிவுப் பொருளாகத் தரப்படுகின்றது. ''வாழக்கை யதார்த்தம்", "கலை இலக்கிய யதார்த்தம்" என்பவற்றுக்கிடையே வேறுபாடுகளைக் கண்டறியாதவிடத்து அடிப்படை எண்ணக்கருக்களே, தவறுகளே கையளிக்கப்படும். கலை இலக்கிய யதார்த்தத்தில் ''உள அறிகைத் தொழிற்படும்'', அதன் "தெறிப்பும்" சம்பந்தப்படுகின்றன. அதாவது, வாழ்க்கை யதார்த்தங்களில் இருந்து பிறக்கும் கலை இலக்கிய யதார்த்தம் மேலும் கூர்மைப் பட்டதாகக் காணப்படும்.

"உள்ளடக்கப் பொருள்", "உள்ளடக்க விழுமியம்'' என்ற ஒன்றிணைத்த இரு கூறுகள் கலை இலக்கியங்களிலே காணப்படும். உள்ளடக்கப் பொருள் "புறவயமான'' மதிப்பீடுகளுக்கு உட்படும், உள்ளடக்க விழுமியம் ''அகவயமான'' மதிப்பீடுகளுக்கு உட்படும். இந்நிலையில் இலக்கியத்தை முற்றிலும் புறவயமாக மதிப்பீடு செய்ய முனைதல், அல்லது முற்றிலும் அகவயமாக மதிப்பீடு செய்ய முனைதல், என்ற துருவப்பாடுகளை எடுக்க முனையும் பொழுது சமநிலை பிறழ்வடைய நேரிடுகிறது.

இயற்கை என்பது கடவுளின் வெளிப்பாடு
கலை என்பது மனிதனின் வெளிப்பாடு

- லாங்ஃபெல்லோ



யாதாயினும் ஓர் அறிவுத் துறையினை ஆழ்ந்து கற்றவர் தனது துறையினூடாக கலை இலக்கியத்தை அணுகுதல் சமநிலைப் பிறழ்வை ஏற்படுத்துமா என்ற வினா இத்துறையில் இன்னமும் ஒரு சவாலாகவே கருதப்படுகின்றது.

## அறிகையும் எழுச்சியும்

கற்பித்தலிலும், திறனாய்விலும் ''அறிகை ஆளுகை'', ''எழுச்சி ஆளுகை'' என்ற இரு எண்ணக் கருக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த எண்ணக் கருக்களை விரிவாக விளக்கிய புளும் என்பாரதும், அவருடன் இணைந்த ஆய்வாளர்களதும் கருத்துக்கள் இலக்கியக் கல்வியில் பெருமளவு செல்வாக்கைச் செலுத்தியுள்ளன. விஞ்ஞானப் பாடங்களில் "இது சரி", "இது பிழை'' என்ற திட்டவட்டமான விடைகள் மாணவருக்குக் கற்பிக்கப்படுகின்றன. அவ்வாறு திட்டவட்டமான முடிவுகளை இலக்கியக் கல்வியில் ஆசிரியர் முன்வைக்க முயலும் பொழுது அது கருத்தேற்றமாக (Indoctrination) மாற்றப்படுகின்றது.

கலை இலக்கியங்களிற் பயன்படுத்தப்படும் சொற்கள் அல்லது குறியீடுகள் இரண்டு விதமாகப் பாகுபடுத்தப்படும். ஒரு வகையான சொற்கள் ''பிரதிநிதித்துவத் தொழிற்பாடு'' என்ற பண்பைக் கொண்டிருக்கும். பிரதிநிதித்துவத் தொழிற்பாட்டைக் கொண்டிருக்கும் சொற்களை விளக்குதல் அறிகை ஆட்சியின் பாற்படும். "வெளிப்பாட்டுத்" தொழில் புரியும் சொற்கள் பற்றிய விளக்கம் எழுச்சி ஆட்சியின் பாற்படும். எழுச்சி ஆட்சியின் அறிகைப் பண்புகள் உட்பொதிந்து இருக்கும் என்பதை நிராகரிக்க முடியாது.

கலை இலக்கியம் கற்பித்தல் தொடர்பான டேவிட் கொல்புறாக் என்பவரின் கருத்துக்கள் "புதிய அழகியல் வாதம்'' என்ற கண்ணோட்டத்தைத் தழுவியுள்ளன. "கலை இலக்கிய அனுபவங்கள்", "சொந்த வாழ்க்கையிலிருந்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முகிழ்த்த அனுபவங்கள்'' என்ற இரண்டுக்குமுள்ள வேறுபாடுகளை மாணவர் ஒப்புமை செய்து பார்த்தல் வேண்டும். இந்த ஒப்புமையின் வழியாகவே கலை இலக்கியம் எது, கலை இலக்கியம் அல்லாதது எது என்பதை மாணவர் கண்டறிந்து கொள்ளல் வேண்டும். இந்த அணுகுமுறையும் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக கம்ப இராமாயணத்தில் ஒரு காட்சி தொடர்புபடுத்தும் மனவுணர்விற்கும் சமகால மனவுணர்வுகளுக்கும் இடையே சில சந்தர்ப்பங்களில் மாணவர்க்கு இணக்கமின்மை ஏற்படலாம்.

கலை இலக்கியங்களைப் பொறுத்தவரை "அனுபவச் சித்தரிப்''புக்கு அழைத்துச் செல்வதற்கான "தூண்டல்'' என்ற பண்பும் காணப்படும். இவற்றை இனங்காணும் முயற்சியாக திறனாய்வு அமையும் போது அது தனித்துவமுள்ள ஓர் அறிவுத் துறையாகவும், தன்னளவிலே செயற்படக்கூடியதாகவும் வளர்ந்து வரும். இந்த நிலையில் ஏனைய துறைகளுடன் அதன் ஒன்றிணைப்பை மேலும் வலுப்படுத்தவேண்டியுள்ளது.

கலை இலக்கியங்களை விளங்குவதற்கும், விளக்குவதற்குமான அறிகை அமைப்புகளை மேலும் கூர்மைப்படுத்த வேண்டியுள்ளது. அறிகை அமைப்புக்கள் தர்க்கபூர்வமான ஒழுங்கமைப்புக்கு உட்பட்டவை.

கலை இலக்கியங்களுக்கான விளக்கங்கள் விரும்பியவாறும் எழுந்தமான முறையிலும் கொடுக்கப்படலாம் என்று கூறப்படும் பொழுது அவை தர்க்கபூர்வமான ஒழுங்கமைப்புக்கு உட்படுகின்றனவா என்பதை நோக்குதல் வேண்டும். அறிகை அமைப்புக்கள் அமைக்கப்படுதலும் குலைக்கப்படுதலும் ஏனைய துறைகளைக் காட்டிலும் கலை இலக்கியத் திறனாய்வில் துரிதமாக நிகழ்கின்றன. இவற்றின் காரணமாகத் திறனாய்வில் "மிகையான மலினப்படுத்தல்'' என்ற பண்பும் ஏற்பட்டுவிடுகின்றது. ❒

# மீளும் பொருட்டு



கொட்டுண்டு கருகி விழுந்த
கொழுந்துகளே, இளம்
தளிர்களே,
மொட்டாகி மலர்ந்து
குலுங்கிய
மோகனங்களே, வாலிபங்களே,
சட்டென்று வீசிய சூறையில்
சாய்ந்து கிடக்கும்
பழக்குலைகளே
வெட்டுண்டு துண்டுகளாகி
விழுந்து சிதறிய சீவியங்களே

உங்களை நாங்கள்
நினைவு கூர்கிறோம்
உயிர்கலந்து நாம்
உணர்வு சேர்கிறோம்

பலியாகி மறைந்து போயினீர்
பாழாகி மடிந்து போயினீர்
பலியாக்கி உயிர்கள் தந்ததால்
பலிபீடம் சிவந்துபோனதால்,
பலகாலம் நனைந்துபோனதே!

பலியாகி மறைந்த உங்களின்
நினைவாலே மனது
சோர்கிறோம்.

உங்களை நாங்கள்
நினைவு கூர்கிறோம்
உயிர் கலந்து நாம்
உணர்வு சேர்கிறோம்

ஊழித் தாண்டவம்
முடிந்து போயினும்
உயிர்ப்பு மீளவும்
நிகழ வேண்டுமே!
வாழ்வுக் கூத்தை நாம்
ஆட வாழ்கிறோம்.
வலிமை நோக்கி நாம்
பயணம் ஆகிறோம்
உயிர்ப்பு மீளவும்
நிகழ வேண்டுமே!
உணர்வும் ஆவியும்
இழைய வேண்டுமே!
அயர்ச்சி, சோர்வுகள்
அகல வேண்டுமே!
அமைதி வாழ்நிலை
மலர வேண்டுமே!

உங்களை நாங்கள்
நினைவு கூர்கிறோம்
உயிர் கலந்து நாம்
உணர்வு சேர்கிறோம்.

**முருகையன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


அகராதியில் அழித்தெழுதிக் கொள்ளுங்கள்
பூபதி அம்மா....
ஒரு பெண்ணின் பெயரல்ல...
பூகம்பத்துக்குப் புதுப் பெயர்.
இவள்,
காலக்குரலுக்கு,
சேலைகட்டிய தோற்றம்.
ஊரெங்கும் ஓநாய்கள்,
ஊளையிட்ட போது,
தன்னந்தனியனாக தடியெடுத்து விரட்டியவள்.
எமது சுற்றுப் புறச் சூழலை,
அந்நியக் காற்று அசுத்தப்படுத்திய போது,
ஊத்தைக் காற்றின் உரிமையாளர் மீது,
வழக்குத் தொடுத்து வாதிட்டவள்.
இங்கு அதிகமானோர் மௌனித்திருந்த போது,
"புலிகள் எங்கள் பிள்ளைகள்
அவர்களே எங்கள் பாதுகாவலர்கள்"
என்று,
வாய் திறந்து பாடிய விடுதலைக் குயில்,
சக்தி,
வலுப்பொருள்.
விஞ்ஞானம் இப்படி விதந்துரைக்கிறது.
சக்தி,
தாய்மையின் வடிவம்.
மெஞ்ஞானம் இப்படி முழக்கமிடுகின்றது.
எப்படிப் பார்த்தாலும்
பூபதி அம்மா பூரண வடிவம்.



# அநீதிக்கு சவால் விடுத்த அன்னை பூபதி



உலக விடுதலைப் போராட்டங்களுடன் ஒப்பு நோக்கி பார்க்கும் போது தமிழீழ சுதந்திரப் போராட்டம் தனக்கே உரித்தான தனித்துவச் சிறப்பம்சங்களைக் கொண்டது. உலக வரலாற்றில் எவருமே சாதிக்காத, எங்குமே நிகழ்ந்திராத, அற்புதமான அர்ப்பணிப்புக்களைக் கொண்டதாக எமது போராட்ட வரலாறு அமையப் பெற்றிருக்கிறது.

இந்த மகத்தான தியாக வரலாற்றில் அன்னை பூபதியின் அர்ப்பணிப்பு ஒப்பற்றது.

ஒரு சாதாரண தாயின் அசாதாரண துணிவாகவும், அலாதியான தேசியப் பற்றுணர்வாகவும் அன்னையின் அறப்போர் அமைந்தது. தர்மத்தின் குரலாக, தனித்து நின்று அவர் ஒரு சாம்ராஜ்யத்தின் அதர்மத்தை எதிர்த்தார். நீதியின் நெருப்பில் தன்னை எரித்து அநீதிக்குச் சவால் விடுத்தார்.

சாவுக்கு அஞ்சாத மனோதிடம் படைத்தவர்கள் எதையும் சாதிக்கும் வல்லமை பெற்றவர்கள். அவர்களே சரித்திரத்தையும் படைக்கிறார்கள். அன்னை பூபதியும் ஒரு சரித்திரத்தைப் படைத்தார். ஒரு தனித்துவமான, காலத்தால் சாகாத சரித்திரத்தைப் படைத்தார்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

(தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் 31-3-1992 இல் 'தமிழீழ ஈகச் சுடர்' நூலுக்கு வழங்கிய செய்தியிலிருந்து)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சுவீடனில்

# மாவீரர்நாள் - 1994

மாவீரர் நாள் தமிழரின் தேசிய எழுச்சி நாளாக விளங்குகிறது. மாவீரர்களின் நினைவு சுமந்து உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் எழுகின்றார்கள். மாவீரர்களின் உன்னதத்தைப் பாடுகிறார்கள். சுதந்திர நல்வாழ்வுக்காக வாழ்ந்த அந்த வீர புருசர்களை தங்கள் இதயங்களில் சுமக்கிறார்கள். அடிமைகளாகி முகமற்றவர்களாகிப் போகும் புலம்பெயர் வாழ்வினை வெறுத்து உணர்வாலும், உள்ளத்தாலும் தாய்மண்ணோடு நிறைந்த பற்றுடையவர்களாகவே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இங்கு வீசும் எந்தக் காற்றிலும் சிக்குண்டாது தம்மைக் காத்து எழுவதையே அவர்கள் அர்த்தமுள்ளதாகக் கருதி இயங்குகிறார்கள். மண்ணில் வீசும் புயலின் வாடையும், அங்கு பரவும் வெளிச்சத்தின் கீற்றும் புலம்பெயர் வாழ்வில் புதிய தரிசனங்களை ஏற்படுத்தி வருகின்றன. தமிழீழமே தமிழர் அனைவரினதும் தாகம் என்கிற காலகட்டத்தில் அவர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். தமது அவலங்களையும், துயரங்களையும் வெல்வதற்கான உயரிய மார்க்கம் அதுவே என உணர்கிறார்கள். மாவீரர்களின் வாழ்வும் அவர் தம் கனவும் ஒவ்வொரு தமிழர்களின் உள்ளத்திலும் இலட்சிய நெருப்பை ஏற்றுகிறது. கூனல் நிமிர்ந்து எழக் கூவிய விடுதலைக் குயில்களின் கானம் எப்போதும் இதயத்துள் இசைக்க - `சுவீடனில் ஸ்ரோக்கோமில்' உள்ள புலம்பெயர்ந்த தமிழீழ மக்களும் மாவீரர் நாள் கொண்டாட்டங்களை உணர்வுபூர்வமாகக் கொண்டாடி இருக்கிறார்கள். விடுதலைப் புலிகளின் சுவீடன் கிளையினர் இக் கொண்டாட்டங்களை எழுச்சிகரமாக அமைத்திருந்தனர்.

அந்நாளில் மாவீரர்களின் குடும்ப அங்கத்தினர்கள் மங்கள விளக்கேற்றினார்கள். மாவீரர்களின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவு சமாதிக்கு மக்கள் தீபமேற்றி அஞ்சலித்தார்கள். தமிழரின் விடுதலைப் போரைப்பற்றியும் மாவீரர்களின் தியாக வாழ்வு பற்றியும் ஆய்ந்துவரும் திரு. பீற்றர் ஷாக் அவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

மாவீரர்களின் நினைவோடு சிறுவர்கள், சிறுமிகள் ஆடிப்பாடினார்கள்; எழுச்சி கீதங்களை இசைத்தார்கள். கலைபண்பாட்டுக் கழகத்தினரால் 'வேங்கைகள் ஓய்வதில்லை' என்ற நாடகம் அரங்கேற்றப்பட்டது. உயிர்த் துடிப்பு மிக்கதாகவும், மண்ணின் யதார்த்தம் தோய்ந்தும் கலைப்படைப்பு விளங்கியது.










www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# மைத்தமும் அர்த்தமும்

மனிதனிலிருந்து தொடங்குகிறது இந்தத் தத்துவம். எல்லாவற்றிற்கும் மேலாக, மனித இருப்பிற்கு அது முதன்மை கொடுக்கிறது.

இது மனித உலகம். மனிதன் வாழும் உலகம். மனிதனால் படைக்கப்பட்ட உலகம். மனித உறவுகளால் பின்னப்பட்ட உலகம். இந்த உலகில் சகலதற்கும் மையமாக இருப்பவன் மனிதன். மனிதனே இவ்வுலகின் மெய்ப்பொருள். சகலதற்கும் அவனே அடிப்படை. சகலதற்கும் அவனே அளவுகோல். அவனிலிருந்தே சகலதும் அர்த்தம் பெறுகிறது.

எனது இருப்பே எனக்கு முதன்மையான உண்மை. எனது இருப்பு நிலையிலிருந்தே நான் என்னையும் இந்த உலகத்தையும் இனம்கண்டு கொள்கிறேன். நானே எனக்கு வெளிச்சம். நானே எனக்கு வழிகாட்டி. நானே எனது இருப்பிற்கு ஆதாரம். என்னிலிருந்து எல்லாம் எனக்குத் தோற்றப்பாடு கொள்கிறது. நான் வாழும் இந்த உலகமும், நான் உறவுகொள்ளும் மற்றவனும், என்னைச் சூழ இருப்புக் கொள்ளும் எல்லாமே எனது அனுபவத் தரிசனத்தால் அர்த்தம் பெறுகிறது.

மனித வாழ்வு பற்றிய விசாரணைகள் அனைத்தும் மனிதனிலிருந்தே தொடங்கவேண்டும் என்கிறது இந்தத் தத்துவம். மனித அனுபவத்திற்கு அது முக்கியத்துவம் கொடுக்கிறது.

மனிதனுக்கு புறம்பாக நின்று மனித உலகிற்கு அப்பால் நின்று, மனிதனைக் கண்டுகொள்ள முடியாது. மனித மெய்யுண்மையை மனிதனிடமிருந்து, மனித அனுபவத்திலிருந்து, மனித வாழ்நிலையிலிருந்தே கண்டுகொள்ள முடியும்.

மனிதன் என்பவன் வானத்திலிருந்து பூமியில் விழுந்த அற்புதம் அல்ல. அன்றி இயற்கையால் வனையப்பெற்ற பொம்மையும் அல்ல. மனித இயல்பு என்பது இயற்கையின் பரிணாம விதியால் மனிதனிடம் திணிக்கப்பட்ட பண்பல்ல. மனித இருப்பிலிருந்தே மனிதனின் இயல்பு தோன்றுகிறது. மனிதனே தன்னைப் படைக்கிறான். தன்னை உருவகம் செய்கிறான். மனிதனே மனிதனின் சிரு-ஷ்டி கர்த்தா.

மனித இயல்பிற்கு முன்னோடியானது மனித இருப்பு (Human existence proceeds Human essence)

## பிரம்மஞானி

என்கிறது இந்தத் தத்துவம்.

பிறப்புடன் இந்த உலகத்தில் பிரவேசம் செய்யும் மனிதன், தான் பிறந்த கணத்திலிருந்து தனது இருப்பையே முதலில் உணர்ந்துகொள்கிறான். ஜீவானுபவமே எல்லாவற்றிற்கும் முதன்மையானது. தனது இருத்தலை உணர்ந்துகொண்ட பிரக்ஞையுடன், மனிதன் முதலில் தன்னை எதிர்கொள்கிறான். தன்னைச் சூழவுள்ள மனித உலகத்தை எதிர்கொள்கிறான். தொடக்கத்தில், மனித இயல்பு என்று எதுவும் இருப்பதில்லை. ஆரம்பத்தில், மனிதன் ஒரு வெறுமையாகப் பிறப்பு எடுக்கிறான். காலப்போக்கிலேயே தனது வெறுமையை நிறைவு செய்துகொள்கிறான். மனித இயல்பு என்பது இருப்பின் வாயிலாக, வாழ்வனுபவத்தால் மனிதன் தானாக சிருஷ்டித்துக்கொள்ளும் மாண்பு.

மனிதனின் இருப்பு நிலையை ஆழமாகத் தரிசிக்க விழையும் இந்தத் தத்துவம் தனிமனிதனுக்கும் தனிமனிதனின் வாழ்வனுபவத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது.

வாழ்வனுபவ நிலையில், எல்லா மனிதர்களும் தனிமனிதர்கள். அனுபவம் அகவயமானது; அகநிலை தனித்துவமானது; தனிமனிதம் சார்ந்தது. எனவே, மனிதானுபவம் என்பது தனிமனிதனிடமிருந்து, தனிமனிதக்கூறுகளாகப் பிரவாகம் எடுக்கிறது.

இந்த உலகத்தில் நான் ஒரு தனிமனிதப் பிறவி. இனம், மதம், தேசம், சமூகம் என்ற முழுமையில், மொத்தத்தில், கூட்டுறவில் நான் கட்டுண்டு கிடந்தபோதும், நிதர்சன வாழ்வில் நான் தனித்துவமானவன். முழுமை என்ற பெருவெள்ளம் என்னை அடித்துச்சென்ற போதும், நான் என்னை நானாக, ஒரு தனித்துவ ஜீவனாக, ஒரு சுதந்திரப் பிறவியாக, நானே எனக்குப் பொறுப்பானவனாக, நானே எல்லாவற்றையும் தெரிவு செய்பவனாக, தீர்மானிப்பவனாக, எனது வாழ்வனுபவத்திற்கு நானே உரித்தானவனாக, நான் என்னை, எனது தனித்துவத்தை உணர்கிறேன். மீளமுடியாதவாறு, தனிமனிதம் என்ற சிலுவையில் நான் அறைபட்டுக் கிடக்கிறேன்.

தனிமனிதத்துவத்தை இந்தத் தத்துவம் வலியுறுத்துகிறது. ஆயினும், அதேவேளை கூட்டுவாழ்வின் நிதர்சனத்தை அது மறுதலிக்கவில்லை.

மனிதன் தனிமனிதப் பிறவியாக வாழ்ந்த போதும் மனித உறவுகள் என்ற சங்கிலித் தொடர்பில் பிணைக்கப்பட்டிருக்கிறான். தனிமனித இருப்பு சமூக இருப்பு என்ற சமூகத்துடன் சதா சங்கமிக்கிறது.

இந்த உலகம் என்பதே, மானிடத்தைக் குறிக்கிறது; மற்றவர்களைக் குறிக்கிறது. இந்த மனித உலகத்தில் நான் தனித்து நின்றபோதும் மற்றவர்களுடன் இணைந்து வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறேன். எனது இருப்பின் எண்ணற்ற தேவைகளை நிறைவுசெய்ய மற்றவர்களின் உறவு எனக்குத் தேவை. நான் தனித்தவனாக, தனிமனிதனாக, சமூக உறவுகளை அறுத்துக்கொண்டு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தனிச் சீவியம் நடத்த முடியாது. நான் வாழ, மற்றவர்களுடனான கூட்டுவாழ்வு எனக்கு அவசியம்.

நான் எனக்கு மட்டும் பொறுப்பாளி அல்ல. நான் மற்றவர்களுக்கும் பொறுப்பாளியாக இருக்கின்றேன். சமூகத்தின் சட்டம், சமூகத்தின் கட்டுபாடுகளிலிருந்து நான் தப்பிவிட முடியாது. எனது செயற்பாடுகளும், நான் எடுக்கும் முடிவுகளும், மற்றவர்கள் சம்பந்தப்பட்டதால் நான் எனக்கு மட்டுமல்ல, உலகத்தாருக்கும் பொறுப்புள்ளவனாக இருக்கின்றேன். அன்பையும், ஆதரவையும், அரவணைப்பையும் நான் மற்றவர்களிடம் வேண்டி நிற்கிறேன். எனது உடற்பசிக்கும், உளப் பசிக்கும், எனது ஆசைக்கும் அவாவிற்கும் மற்றவர்களின் உறவு அத்தியாவசியமாகிறது. நான் எனக்காக, என் குறிக்கோளிற்காக, என் திருப்திக்காக, என் நிறைவுக்காக, என் வாழ்விற்காக, என் இருப்பிற்காக, மற்றவர்களை நாடி நிற்கிறேன். நானும் மற்றவர்களும் என்ற உறவு, என் இருப்பின் தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தமாக என்னையும் மற்றவர்களையும் பிணைத்து வைத்திருக்கின்றது. என்னைப் புரிந்துகொண்டவர்களுடன், என் போக்கிற்கும் பார்வைக்கும் ஒத்திசைவானவர்களுடன் நான் உறவு கொள்ளும் போது, அந்தக் கூட்டுறவு எனது தனித்துவத்தைப் பேண ஏதுவாக அமைகிறது. இந்த உறவில் நானும் மற்றவனும் அவரவர் தனி-த்துவ அடையாளங்களை இனம் கண்டு, அதைப் புரிந்துகொண்டு, அந்தப் புரிந்துணர்வால் எழும் பற்றுறவால் பிணைந்துகொள்ளும் பொழுது தனித்துவத்தின் சுதந்திரம் மேம்பாடு கொள்கிறது.

மற்றவர்களுடன் உறவு ஒத்திசைவாக அமையும் போது தனி மனித வாழ்வு நிறைவுடையதாக அமைகிறது. கூட்டு வாழ்வு இசைவாக அமைந்து, எனது மனிதத்துவத்தையும் சுதந்திரத்தையும் மேம்பாடு செய்யுமானால் எனது இருப்பு ஆக்கபூர்வமானதாக (Authentic existence) அமைகிறது. ஆனால், அதேவேளை சமூகக் கூட்டுவாழ்வு எனது தனித்துவத்தை நசுக்கிவிடும் எதிர்மறைத் தன்மைகளையும் கொண்டது. தனிமனிதனுக்கு விரோதமானதாக, தனி மனித சுதந்திரங்களை ஏப்பம்விடும் அதிகார பூதமாக சமூகக் கட்டமைப்பு உருவாக்கம் பெறும்பொழுது எனது இருப்பு அர்த்தவீனமானதாக மாறிவிடுகிறது. இந்த சூழ்நிலையில், அரூபமான, அனாமதேயமான, ஒருமுகமற்ற சக்தியாக சமூகத்தை நான் எதிர்கொள்கிறேன். எனக்குப் புறம்பாக, எனக்கு முரணாக, எனக்கு விரோதமாக சமூகம் இருப்புக்கொள்கிறது. ஆன்மாவை இழந்தவர்களாக, அடையாளமற்றவர்களாக, வெற்று மனிதர்களாக நான் மற்றவர்களை எதிர்கொள்கிறேன். இப்படியான சமூக சூழலில், எனக்கும் மற்றவர்களுக்குமான உறவு அர்த்தமற்றதாகிறது. அபத்தமாகிறது.

அபத்தமான வாழ்நிலை பற்றியும், அபத்தத்திலிருந்து அர்த்தத்தைத் தேடும் மனிதனின் முனைப்புகள் பற்றியும் இந்தத் தத்துவம் ஆழமாக விசாரணைகளைச் செய்கிறது.

இந்தத் தத்துவம் இருப்பியம் (Existentialism) எனப்படும்.

இந்தத் தத்துவார்த்த சிந்தனை 19ம், 20ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் தோற்றம் கொண்டது. இந்தக் கருத்துலகை சிருஷ்டித்த தத்துவாசிரியர்கள் பலர். ஒவ்வொருவரும் வித்தியாசமாக எழுதினார்கள். ஒவ்வொருவரது வாழ்க்கைப் பின்னணியும், வரலாற்றுச் சூழ்நிலையும் வேறுபட்டிருப்பினும், தாம் வாழ்ந்த காலத்தை உருவகப்படுத்தி, அக்காலத்தில் வாழ்ந்த மனிதனின் வாழ்நிலை அனுபவத்தை முதன்மைப்படுத்தி எழுதினார்கள்.

ஐரோப்பிய முதலாளியத்தின் வளர்ச்சி, ஏகாதிபத்தியத்தால் எழுந்த உலக ஆதிக்கப்போட்டி, ரஷ்ய கம்யூனிஸ்ட் புரட்சி, நாசிஸத்தின் எழுச்சி, உலக மகா யுத்தங்கள் - இப்படியான வரலாற்று நிகழ்வுகளால் ஐரோப்பிய மனிதன் வாழ்விலும் பார்வையிலும் பாரதூரமான பாதிப்புகள் விழுந்தன. மனித நாகரிகத்தின் சிகரத்தில் நின்றுகொண்டு உலகத்திற்கு ஒளி விளக்காக இருப்பதாக ஐரோப்பிய மனிதன் கண்டுவந்த கனவு, இந்த நிகழ்வுகளால் தகர்ந்துபோனது. கிறிஸ்தவ அறத்தில் கேள்விக்குறி எழுந்தது. கடவுட் கோட்பாட்டில் நம்பிக்கை தளர்ந்தது. சர்வாதிகார சமூகக் கட்டமைப்பில் வெறுப்புத் தட்டியது. விஞ்ஞானத்தின் அழிவு நோக்கிய அசுர வளர்ச்சியில் பயம் எழுந்தது. இந்தப் புறநிலைப் பாதிப்புக்களால் ஐரோப்பிய சிந்தனைப் பாரம்பரியத்தை உடைத்துக் கொண்டு வித்தியாசமாகச் சிந்தித்தனர். மனிதத்துவத்தின் இயல்பையும், வாழ்க்கையின் அர்த்தத்தையும் கண்டுகொள்ள விழைந்த இந்தச் சிந்தனையாளரின் தேடுதலாக இருப்பியக் கருத்துலகம் தோற்றம் எடுத்தது.

இருப்பியல் கருத்துலகைப் படைத்த தத்துவாசிரியர்கள் வரிசையில் சோரன் கைகேகார்ட் (Soren kierkegaard) நீச்சே (Nietzsche) மார்ட்டின் கைடேகர் (Martin Heidegger) கார்ள் ஜாஸ்பர்ஸ் (Karl Jaspers) ஹுசேள் (Husserl) ஜோன் போல் சாத்தர் (Jean Paul Sartre) ஆகியோரை முக்கியமாகக் குறிப்பிடலாம். டொஸ்தோவஸ்கி (Dostoyevsky) காவ்கா (Kafka) போன்ற எழுத்தாளர்களின் படைப்பிலக்கியங்களும் இருப்பியத் தரிசனங்களாகக் கொள்ளப்படுவதுண்டு.

வித்தியாசமான காலத்தில், வித்தியாசமான சூழலில், வித்தியாசமான வடிவத்தில், வித்தியாசமான நடையில், வித்தியாசமான பார்வையில், இவர்களது எழுத்துக்கள் அமைந்தபோதும், பொதுப்படைக் கருப்பொருளாக மனித நிதர்சனம் பற்றியும், மனித இருப்பு நிலை பற்றியும், மனித வாழ்வனுபவம் பற்றியும் மிகவும் தீட்சண்யமான கூர்நோக்குடன் இவர்கள் எழுதினார்கள்.

சோரன் கைகேகார்ட் *(1815-1855)* இருப்பிய தத்துவத்தின் தந்தையாக கருதப்படுபவர். இவர் டென்மார்க் நாட்டைச் சேர்ந்த சிந்தனையாளர்.

ஐரோப்பிய சிந்தனைப் பாரம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



பரியம் தனிமனிதனின் ஆழமான உணர்வுகளை தொட்டுநிற்க வில்லை. மாறாக, மனித வாழ்வ னுபவத்திற்கு புறம்பாக நின்று, புரியாத மொழியில், பூடகமான தத்துவக் கோட்டைகளை கட்டி யெழுப்பியது என விமர்சித்தார் கைகேகார்ட். இந்தத் தத்துவ தரிச னங்களின் சிறப்புப் பிரதிநிதியாக விளங்கிய ஹேகலை அவர் கண் டித்தார். மனித இருப்புநிலைக்கு அப்பால், புலனாகாத பிரபஞ்ச விலாசத்தில் மனித வாழ்விற்கு அர்த்தம் தேடும் ஹேகலின் தத்து வத்தில் எவ்வித அர்த்தமுமில்லை என்றார். சிந்தனை உலகத்தில் உண்மையைக் கண்டுகொள்ள முடி யாது. உண்மை என்பது அகவயமா னது; அது மனிதனின் உள்ளுணர் வில் மறைந்து கிடக்கிறது என்றார். வாழ்நிலையில் மனிதன் எதிர் கொள்ளும் மன அவலங்களை, அங்கலாய்ப்புக்களை அவரது எழுத்துக்கள் மிகவும் துல்லியமாக விபரிக்கிறது. நிலையாமையை, நித்தியமின்மையை சந்தித்து நிற்கும் தனிமனிதன் இருப்பின் அர்த்தத் தைப் புரியாது தடுமாறும் தவிப் பையும், துயரத்தையும் மிகவும் ஆழமான ஆன்ம சோதனையாக அவர் சித்தரிக்கிறார். அவரது எழுத்துக்கள் மனித இருத்தலையும், மனித உணர்வுகளையும் முதன் மைப்படுத்தி நிற்பதால் இருப்பிய தத்துவத்தின் முன்னோடியாக அவர் கருதப்படுகிறார்.

நாஸ்திக இருப்பியல் வாதிக ளின் குருநாதராகக் கருதப்படுபவர் நீச்சே. (இவரது தத்துவப் பார்வை பற்றி பிறிதொரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம்.)

கடவுள் மரணித்துவிட்டார் என்ற செய்தியை இவர் மானி டத்திற்கு எடுத்துச் சொல்கிறார்.

கடவுளின் மரணத்துடன் ஆன் மீக உலகமும் அஸ்தமித்துவிடுகிறது. நரகம் என்றும், சுவர்க்கம் என்றும், பாவம் என்றும், புண்ணியம் என் றும், கர்மம் என்றும், தர்மம் என் றும், கடவுட் கோட்பாட்டின் கீழ் கட்டியெழுப்பப்பட்ட அறநெறிகள் அனைத்தும் அர்த்தமிழந்து போகி றது. நிரந்தரமான ஆன்மாவைக் கற்பித்து, நித்திய சீவியத்திற்கு ஆசைகொண்ட மானிடத்தின் கனவும் கடவுளின் மரணத்துடன் செத்துப் போய்விடுகிறது. மனித வாழ்வும் அர்த்தமிழந்து போகிறது. அபத்தமாக மாறுகிறது. நித்தியமா னது செத்துப் போனதால் நிலை யாமையானது இருப்பின் பேருண் மையாகிறது. சாவின் இருள் பூமி மீது நிரந்தரமாகக் கவ்விக்கொள் கிறது. மரணத்தின் குகைக்குள் வாழ மானிடம் நிர்ப்பந்திக்கப்படு கிறது.

நீச்சே, மனிதனின் கனவுகளை கலைத்துவிட முனைந்தார்; மனித இருப்பின் மிகவும் கசப்பான உண் மைகளை எடுத்துரைத்தார்; பூமி யில் கடவுளின் ஆட்சியைக் கவிழ் -த்து, அந்தச் சிம்மாசனத்தில் மனி தனை இருத்திவிட முனைந்தார் என்பது அவரைக் குருவாக வரித் துக்கொண்டவர்களின் கூற்று.

கடவுள் இல்லாத உலகமும், அறமில்லாத வாழ்வும், நிலையில் லாத சீவியமுமே, மனித இருப்பின் துயரமான, அவலமான, நிதர்சன மான நிலை என்பதை அவரது எழுத்துக்கள் அழுத்தமாகச் சொல் கிறது.

காலத்தில் முகிழ்கிறது வாழ்வு. பிறப்பிற்கும் இறப்பிற்குமிடையே விரியும் காலத்தில் நிலைக்கிறது வாழ்வு. இந்தக் காலம் தான் மனித இருப்பின் எல்லைக்கோட்டை இடுகிறது. இருத்தலின் எல்லைக்கு அப்பால் இல்லாமை இருக்கிறது. இல்லாமையை, அதாவது இருத்த லிலிருந்து இல்லாமல் போவதை, சாவு என்று சொல்கிறான் மனி தன்.

காலமும், நிலையாமையும், சாவும் மனித இருத்தலின் மெய் யுண்மைகள் இவை பற்றிய ஆழ மான தரிசனத்தைத் தருகிறார் கைடேகர். இருப்பிய தத்துவாசிரி யர்களில் இவர் மிகவும் முக்கியமா னவர்.

இருப்பு என்பது காலத்தின் பாதையால் நடைபெறும் பயணம். இந்தப் பயணத்தில் நான் ஒரு கணமும் தரித்துநிற்க முடியாத வாறு காலம் என்னை நகர்த்திச் செல்கிறது. இழுத்துச் செல்கிறது. நான் காலத்தில் மிதந்துகொண்டு பயணிக்கிறேன். நான் நடந்து முடிந்தது, இறந்த காலமாகவும், நடக்கப் போவது எதிர்காலமா கவும், நடந்துகொண்டிருப்பது நிகழ் காலமாகவும் எனக்குத் தென்படு கிறது. இறந்தகாலம் செத்துப் போனாலும் எனது அனுபவத்தின் நிழலாக அது என்னை சதா பின் தொடர்கிறது.

எனது வாழ்வனுபவம் எப்பொ ழுதுமே நிகழ்காலமாகவே கட்ட விழ்கிறது. எதிர்காலமானது, இறந் தகாலமாக மாறும் நொடிப் பொழுதுகளாக நான் காலத்தை அனுபவிக்கிறேன்.

நிகழ்கால அனுபவமே நிதர்ச னமானது; மெய்மையானது என்கி றார் கைடேகர். ஆனால் மனிதன் நிகழ்காலத்தில் வாழாமல், எதிர் காலம் பற்றியே சிந்திக்கிறான். மனித ஆசைகளும் எதிர்பார்ப்பு களும், திட்டங்களும், எதிர்காலத் தில் நிறுத்தப்பட்டிருப்பதால், மனி தமானது எதிர்காலத்தை நோக்கி யதாக, எதிர்காலத்தில் நிலைத்துப் போகிறது. செத்துப்போன காலத் தில் புதையுண்டு போகாமலும், நிகழ்காலத்தில் வாழ்வதுதான் அர்த்தபூர்வமானது என்கிறார் அவர்.

காலத்தில் நிகழும் எனது பய ணம் சாவுடன் முடிகிறது.

நிலையற்ற இந்த உலகில் நிலை யானதாக ஒன்று உண்டு என்றால் அதுதான் சாவு. எனது உயிர்ப்பின் கணத்திலிருந்து சாவும் என்னோடு உடன்பிறப்பு எடுத்திருக்கிறது. எனது இருத்தலின் ஒவ்வொரு கணத்திலும் இல்லாமை என்ற சூன்யத்தை நான் எதிர்கொண்டு வாழ்கிறேன். எனது சாவை நான்

**என்றும் மனிதன் சந்தோசம் கொண்டிருக்கவே கலையும், இலக்கியங்களும் உதவுகின்றன. கலையும், இலக்கியமும் மனித வாழ்வின் ஒரு பகுதியே. அது வேறு வேறு அல்ல.**

*- மகாகவி பாரதியார் -*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பட்டறிந்துகொள்ள முடியாது. இந்த உலகில் அதுமட்டும் எனது அனுபவத்திற்கு அப்பாலானது. எனது அனுபவத்தின் முடிவாக, எனது இருத்தலின் முடிவாக, நான் இல்லாமல் போகும் இறுதிக் கண மாக சாவு என்னை எதிர்கொண்டு நிற்கிறது.

என்னைச் சூழ எங்கும் சாவு நிகழ்கிறது. மற்றவர்களது சாவை நான் நித்தமும் சந்திக்கின்றேன். எனக்கு வேண்டியவர்கள், நான் பற்றுக்கொண்டவர்கள் மடியும் போது துயரத்தின் சுமை என் ஆன்மாவை அழுத்துகிறது. மனித இருப்பின் மிகவும் சோகமான, துன்பமான நிகழ்வாக சாவு சம்பவிக்கிறது.

எந்த நேரத்திலும், எந்த சூழ்நிலையிலும், நான் சற்றும் எதிர்பாராத சந்தர்ப்பத்தில், சாவு என் கதவைத் தட்டலாம். திடீரென, இருப்பிலிருந்து இல்லாமை என்ற சூன்யத்திற்குள் நான் தூக்கி வீசப்படலாம். எனது இருப்பின் நிலையாமை எனக்குத் தெரிந்தும், சாவின் நிச்சயத்துவத்தை நான் உணர்ந்தும், நான் அதுபற்றி சிந்திக்கத் துணிவதில்லை. மனித பயங்கள் எல்லாவற்றிற்கும் மூல பயமாக, தலையான பயமாக, மரணபயம் எனது ஆழ்மனக் குகைக்குள் ஒளிந்துகிடக்கிறது. நான் அதை அடக்கி, ஒடுக்கி, என் நனவு மனத்திலிருந்து ஒதுக்கி வைத்திருக்கிறேன்.

சாவு என்பது மனித இருப்பு நிலையின் தவிர்க்கமுடியாத உண்மை என்கிறார் கைடேகர். அதைமறுப்பதும், அதற்கு அஞ்சுவதும், அதிலிருந்து ஓடி ஒளிந்து கொள்ள முயல்வதும் அபத்தமானது. சாவின் பிடியிலிருந்து எவருமே தப்பிவிடமுடியாது. அது வாழ்வின் ஒரு நிகழ்வாக என்றோ ஒரு நாள் எதிர்கொள்ள வேண்டியது. சாவைச் சந்திப்பதற்கு மனிதன் துணியவேண்டும். அந்தத் துணிவிலும், தெளிவிலும், விழிப்பிலும் மனித வாழ்வு அர்த்தமுள்ளதாக, நிறைவானதாக அமையும் என்கிறார் கைடேகர்.

(தொடரும்)

# பிஞ்சுகளின் சோகம்

— விவேக் —

தம் தாயிடமிருந்து பிரிக்கப்பட்டு அநாதைகளாக வீதியில் விடப்பட்ட நாய்க்குட்டிகளை எப்போதாவது கண்டிருக்கின் றீர்களா?

உணவின்றி, பசியால் கத்திக் கொண்டும் - வேடிக்கை பார்க்கும் சிறுவர்களின் அருகில் வந்து 'விசுக் விசுக்' கென வாலை ஆட்டிக் கொண்டும், வீதியில் செல்வோரின் பின்னால் ஓடிக் கொண்டுமிருக்கும் அந்தக் குட்டிகளைப் பார்க்கும்போது பரிதாபமாக இருக்கும்.

இன்று ருவண்டாவில் பெற்றோர்களைப் பிரிந்து அநாதைகளாகியிருக்கும் சிறுவர்களின் நிலையும், இந்த நாய்க்குட்டிகளைப் போலவே அமைந்துவிட்டது.

கொஞ்சப்பேர் அல்ல, இரண்டு லட்சம் சிறுவர் சிறுமியர்.

வீதியில் செல்வோரின் பின்னால் சென்று அவர்களின் ஆடையைப் பிடித்துக் கொண்டும் தம் பெற்றோரைக் கூவி அழைத்து அழுது கொண்டும் எரிமலைக் கற்களின்மேல் படுத்துத் தூங்கிக் கொண்டும் அலைந்து திரியும் இச் சிறுவர்கள் தொண்டர்களால் அழைத்துச் செல்லப்பட்டு, அகதி முகாம்களின் முன்பாக வீதியோரங்களில் இருத்தி வைக்கப்பட்டுள்ளனர். இக் கூடாரங்களைக் கடந்து செல்லும் மக்கள் இந்தப் பிள்ளைகளை அடையாளம் காண்பதற்காகவே இவ்வாறு இருத்தப்பட்டுள்ளனர்.

ஆனால் அவர்களை எவருமே கண்டுகொள்ளவில்லை. சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள், அவர்களிடம் வந்து பேட்டி காண்கின்றார்கள். அவர்களின் விபரங்களைச் சேகரித்து அவர்களின் பெற்றோரிடம் சேர்க்க முயல்கிறார்கள்.

ஐந்து வயதான பற்றிசும் நான்கு வயதான அவளது தங்கையும் தனது தந்தைக்கு என்ன நடந்தது என்று கேட்கப்பட்டபோது, தங்கள் கைகளால் தலையிலடித்துக் கொண்டு. அழுகின்றனர். தந்தை வெட்டிக் கொல்லப்பட்டதையும் இப் பிள்ளைகள் மயிரிழையில்

## பிரான்ஸ் குழந்தைகள் அகதிகளுக்கு உதவினர்

ருவண்டா நாட்டுப் படுகொலையால் பல இலட்சம் பேர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர். அவர்களுக்கு உதவிட 25 தொன் உணவுப் பொருட்களை பிரான்ஸ் நாடு அனுப்பி வைத்தது.

அத்துடன் "பள்ளிக் குழந்தைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு கிலோ அரிசி கொண்டுவந்து தர முடியுமா? என்ற வேண்டுகோளையும் பிரான்ஸ், நாட்டுக் குந்தைகளிடம் அரசு வைத்தது. அவ்வளவுதான்; பள்ளிக் குழந்தைகள் அரிசியைக் கொண்டுவந்து குவித்துவிட்டனர். இதனால் மேலும் பத்துடன் அரிசி ருவான்டாவிற்கு அனுப்பப்பட்டது. தாங்கள் சேகரித்த அரிசியைப் பள்ளிக் குழந்தைகள் சின்னஞ் சிறு கைகளினால் பெரிய பைகளில் அடைக்கவும் உதவினர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


உயிர் தப்பியதையும் அருகிலிருந்த தாதி கவலை தோய்ந்த முகத்துடன் கூறுகிறார்.

"எனக்கு நண்பர்கள் இல்லை. தந்தை கொல்லப்பட்டார். தாயாரைக் காணவில்லை." என அழுதபடி ஜீன் என்ற ஆறுவயது சிறுவன் கூறுகிறான்.

அந்தப் பிஞ்சுகள் ஒவ்வொன்றினது கதையும் இவ்வாறானதே.

தினசரி கொலரா நோயினால் பல சிறுவர்கள் இறந்து போகின்றனர்.

மாலையில், நோயினால் இறந்துபோன சிறுவர்களின் உடல்களை ஏற்றிச் செல்ல ஐ. நா. நிறுவனத்தின் வாகனம் வரும். சீலையால் சுற்றப்பட்ட உடல்கள் வாகனத்தில் தூக்கிப் போடப்





படும் சத்தம் 'தொம்' எனக் கேட்கும். பார்த்துக் கொண்டிருக்கும் சிறுவர்கள் பயத்தினால் ஒருவர் கையை மற்றவர் பற்றிக் கொள்வர்.

ஐக்கிய நாடுகள் அனைத்துலக சிறுவர் பராமரிப்பு நிதியத்தைச் சேர்ந்த மருத்துவர் ஸ்ரீபன் சொல்கிறார், "கடவுளுக்காகவேனும் நாங்கள் இவர்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டும். அவர்கள் மரணத்திலிருந்து தப்பி வந்தவர்கள், ஆகையால் அவர்கள் இறக்கக் கூடாது."

இவ்வளவு தொகையான அநாதைகள் இருந்தும் இவர்களைப் பொறுப்பேற்கக் கூடிய நிலையில் வெளியுலகம் இல்லை எனத் தொண்டர் அமைப்பு அதிகாரிகள் கூறுகின்றனர்.

மேற்கத்தைய முறைகளை அவர்கள் மேல் திணிக்க முடியாது. நாங்கள் அவர்களது குடும்பங்களைக் கண்டு பிடிக்க வேண்டும் என இன்னொரு அதிகாரி கூறுகிறார்.

சில சமயங்களில் அழவும் முடியாமல், சிரிக்கவும் முடியாமல், பயத்தினால் நடுங்கிக் கொண்டு இந்தச் சிறுவர்கள் காலத்தைக் கழிக்கின்றனர்.

அண்மையில் ருவண்டாவில் இடம் பெற்ற இன மோதல்களில் ஐந்து இலட்சம் மக்கள் கொடூரமாக கொல்லப்பட்டதும், லட்சக்கணக்கானோர் அகதிகளாக எல்லைப் புறங்களிலுள்ள நாடுகளுக்குச் சென்றமையும் நாம் அறிந்த விடயங்களே.

அந்த அவலங்களின் தொடர்ச்சியாக இந்தச் சிறுவர்கள் குறித்த துயரச் செய்திகள் மனித மனங்களை உலுப்பியெடுப்பதாகவுள்ளன.

நன்றி: சாளரம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**மே**கம் விளையாடும் - இங்கு
மின்னல் பூச்சூடும்
ஈரக்கடலலை ஆரத்தழுவிடும்
கோணமலைச் சிகரம் - தமிழ்
ஈழத் தலைநகரம்.

மல்லிகைப் பூக்களை நுள்ளிய காற்றிடை
மாங்குயில் இசைபாடும் - இங்கு
வெள்ளலை துள்ளிடும் வேகத்தில்,
மேகத்து
வெள்ளிகள் சதிராடும்

எங்களின் தாயகம் எதிரியின் காலிடை
என்றபின் தூங்குவதா? - அட
சிங்களன் கைகளில் திருமலை
போனபின்
இங்கிருந் தேங்குவதா?

தலைவனின் பாதையில்
தலைநிமிர்ந்தாடுவோம்
தலைநகர் எட்டுமடா - எந்த
விலைகொடுத்தாயினும் வேங்கைகள்
பாய்ந்திடும்
விடுதலை கிட்டுமடா.

- மாலிகா -


கடற்கரும்புலிகளால் அழிக்கப்பட்ட சூரயா கப்பல்

## ஆழக் கடல் எங்கள் காலில் அடங்கும் ஆடும் களத்தில் எல்லாம் வெற்றி துலங்கும்

அலை எழுந்து பாடும் திருமலைக் கடல் முத்தாய் உப்பு நீர் சிதற முக்குளித்து எழுந்து சிரிக்கும். சின்னச் சின்னத் தோணிகளில் துறைகள் சேர்ந்து எண்ணத்தாடிய எங்களின் இனிய வாழ்வை எதிரி சிறையிட்டான். சிறீலங்கா கடற்படையின் பெரிய கப்பல்கள் மனித வாழ்வை அச்சுறுத்தியபடி பூதம் போல கடலில் நிற்கும். தரைப் போரில் நின்று பிடிக்க முடியாத சிங்கள அரசு கடலில் தன் பலத்தை கட்டி எழுப்பி தமிழீழத்தை அடக்கி விடலாம் என்றே கனவு காண்கின்றது.

திருமலைத் துறைமுகம் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இயற்கைத் துறைமுகம். இந்தத் துறைமுகத்தை சிங்கள அரசு ஒருபோதும் விட்டுக்கொடுக்கத் தயாராய் இல்லை. இத் துறைமுகத்தைச் சூழ இராணுவ முகாம்களும், கடற்படை முகாம்களும் எனப் பெரிய பாதுகாப்பு வேலியையே அது விட்டிருக்கின்றது. எந்நேரமும் பாதுகாப்பு அரண்களில் இராணுவமும் கடற்படையும் கண்விழித்தபடி செயற்பட்டுக்கொண்டிருக்கும்...

திருமலை துறைமுகத்தில் சங்காய் ரகத்தைச் சேர்ந்த 'சூரையாவும்', 'ரணசுருவும்' என்ற இரு கப்பல்களிலும் கடல் அலை மோதி வெடித்து நீர் சிதறிக் கொண்டிருந்தது. கரிய இருள் படர்ந்து, ஆழ்ந்த துயிலில் இயற்கை சிலிர்த்துக் கிடக்கின்றது. எதிரியின் கொடிய கரங்களுக்குள் சிக்கிக் கிடக்கும் மக்கள் நிம்மதியாய் மூச்சு விடுவது எங்கே? துயரின் ஒலி சுமந்தகாற்று வீசியது.

1986 ஆண்டு காரைநகர் கடற்படைத் தளத்தில் இருந்த கப்பல் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடாத்த முயன்று வீரச் சாவடைந்த சுலோயன் பெயரில் 1994ல் சுலோயன் விசேட நீரடி நீச்சல் பிரிவு ஆரம்பிக்கப் பட்டது. அதே சமயம் கடந்த ஆண்டு காங்கேசன் துறைமுகத்துள் தாக்குதல் நடாத்திய அங்கயற்கண்ணியின் நினைவாக, அங்கயற்கண்ணி விசேட நீரடி நீச்சல் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இவ் இரு அணிகளில் இருந்தும் கடற் கரும்புலி மேயர் கதிரவன் (பரந்தன்), மேயர் தணிகை மாறன் (கட்டைக்காடு), கடற் கரும்புலி மேயர் மதிசா (குச்சவெளி, திருமலை), கப்டன் சாந்தா (புங்குடுதீவு) ஆகியோர் திருமலை துறைமுகத்துள் நீந்திச் சென்றுகொண்டிருந்தனர். ஆழ் கடலில் முக்குளித்தெழுந்து அதிகாலை ஒருமணியளவில் கடற்படையினரின் 250 மில்லியன் ரூபாய்கள் பெறுமதி வாய்ந்த அதிவேகப் பீரங்கிக் கப்பல்களைத் தகர்த்தெறிந்தார்கள். திருமலையெங்கும் அதிர்வொலி எழுந்து அதிர்ந்தது. துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த ஏனைய கப்பல்களை துறைமுகப் பகுதிகளில் இருந்து விரைவாக வெளியேற்றிச் சென்றனர். இத் தாக்குதலில் 27 படையினர் காயமடைந்தும், 12 பேர் கொல்லப்பட்டனர். எங்களின் கடலை ஆக்கிரமித்து கடலில் திரிந்த கடற்படைக் கப்பல்கள் கடலில் மூழ்கியது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# சிறை மீட்பு



குமாரசாமியின் வீடு மூன்று மாதங்களாக செத்தவீடு மாதிரி இருந்தது. அவனது மனைவி சரியாக சாப்பிடுவது கூட இல்லை. இந்த மூன்று மாதத்தில் உடல் மெலிந்து வருத்தக்காரி போல் ஆகிவிட்டாள். ஒவ்வொரு நாளும் அழுகைதான்.

இரண்டு நாட்களுக்கொருமுறை என குமாரசாமி புளியங்குளம் இராணுவ முகாமுக்கு போய் வருவது ஒரு தொழிலாகி விட்டது. ஆனால் எந்தப் பலனும் இல்லை.

ஒருநாள் நானும் குமாரசாமியுடன் புளியங்குளத்திற்கு புறப்பட்டேன். யாரையாவது பிடித்து முடிந்த வரை கதைத்துப் பார்க்கலாம் என்பது எனது எண்ணம்.

பஸ்ஸிலிருந்து இறங்கியதுமே பழுதான நெய் மணப்பது போல் ஒன்று மூக்கைத் துளைத்தது. மனத்திற்குள் பயத்தை உண்டு பண்ணியது. ஒரு தேனீர்க் கடைக்குள் போய் 'பிளேன்ரீ' அருந்தினோம். அந்த முகாமின் நடைமுறைகளை முதலில் இந்தத் தேனீர்க் கடைக் காரரிடம் விசாரித்து அறிந்துகொள்வது நல்லது என எனக்குத் தோன்றியது.

குமாரசாமியின் இரண்டாவது மகன் கொழும்பில் படிப்பிப்பதையும், விடுமுறைக்கு வீடு வரும் வழியில் புளியங்குளம் முகாமில் பிடித்து வைக்கப்பட்டதையும், மூன்று மாதங்களாகியும் விடுவிக்கப்படாததையும் ஒன்றுவிடாமல் கடைக்காரனிடம் கூறினேன்.

எம்மை கொஞ்ச நேரம் கடையில் அமர்ந்திருக்கும்படி கடைக்காரன் சொன்னான். பின்னர் பீடி வாங்க வந்த இந்தியச் சிப்பாய் ஒருவனிடம் விடயத்தைக் கூறி எம்மை அறிமுகப்படுத்தினான். அந்தச் சிப்பாய் ஒரு தமிழன். எம்மைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"நாங்க என்னய்யா செய்யிறது. தமிழர் ரெண்டு மூணுபேர் தான் இங்கே இருக்கோம். எல்லோரும் இந்திக்காரனும், சீக்கியனும்தான். நீங்க பேசுறது அவனுக்குப் புரியாது. அவன் பேசுறது உங்களுக்குப் புரியாது. என்ன பண்ணப் போறீங்க....?"

எம்மைக் கேள்விக்குறியோடு பார்த்தான் அந்தச் சிப்பாய்.

"ஐயா நாங்களும் தமிழர். நீங்களும் தமிழன். மகனை ஒருக்கா பாக்கிறதுக்கு எண்டாலும் உதவி செய்யுங்கோ" குமாரசாமி அழும் குரலில் வேண்டினான்.

"நான் ஒண்ணும் செய்யமுடியாதுங்க. எல்லாம் உங்க ஆளுக செய்யிற வேலை. ஆ..... அங்க பாருங்க முன்னாடி ஒரு 'சென்றி' தெரியுதே. அங்க உங்க ஆளு ஒருத்தன்தான் முகமூடி போட்டுக்கிட்டு, பஸ்சில் வாறவங்க போறவங்க எல்லாரையும் காட்டிக் குடுக்கிறான். தா....ளி" என்று கெட்டவார்த்தை ஒன்றால் அவனைத் திட்டினான் அந்தச் சிப்பாய்.

சிறிது நேரம் யோசித்த அந்தச் சிப்பாய், பெயர் விலாசத்தைத் தரும்படியும் தாம் ஆளைப் பார்த்துவிட்டு என்ன நிலையில் இருக்கிறான் என்பதையாவது கூறுவதாகச் சொன்னான். அடுத்தநாள் வந்து இதே தேனீர்க் கடையில் நிற்கும்படியும் கூறினான்.

பஸ்ஸில் திரும்புகையில் குமாரசாமியின் முகத்தில் சிறிது அமைதி தெரிந்தது. மகன் பிடிபட்டு மூன்று மாதங்களாகியும் பார்க்கக்கூட அனுமதிக்கப்படவில்லை. அந்தச் சிப்பாய் பார்த்துக் கூறுவதாகச் சொன்னது சிறிது நிம்மதியைத் தந்திருக்கவேண்டும்.

அடுத்தநாள் புளியங்குளத்திற்கு வந்தோம். அதே தேனீர்க் கடையில் 'பிளேன்ரீ' அருந்தினோம். சிறிது நேரம் காத்திருக்க அந்தச் சிப்பாய் வந்தான்.

"ஏனய்யா பையன் ஸ்கூல் மாஸ்ரர்னு சொன்னீங்க. அவன் எல். ரீ. ரீ. என்று வாக்குமூலம் கொடுத்திருக்கான்."

"ஐயோ எண்ட தாயாணை சத்தியமா, அவன் கொழும்பிலை படிப்பிச்சுக் கொண்டிருந்தவன். போன ரெண்டு லீவுக்கும் வர வேண்டாம் எண்டு கடிதம் எழுதினனான். இந்த லீவுக்கு தாயைப் பார்க்க வேணுமெண்டு வந்தவன். பொய் எண்டால் இதைப் பாருங்கோ." 'பாக்'கில் இருந்து ஏதோ பத்திரங்கள் கடிதங்களை எல்லாம் எடுத்து அந்தச் சிப்பாயிடம் காட்டினான் குமாரசாமி.

நன்றாக அடித்துச் சித்திரவதை செய்திருப்பார்கள். அதனால் தான் அப்படி வாக்குமூலம் கொடுத்திருக்கிறான் என்று எனக்கு விளங்கியது.

"இதைவிட நான் ஒன்றும் செய்யமுடியாது. பெரியவனோட

**- விவேக் -**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பேசிப் பாருங்க."

"இங்கிலீஸ் தெரிஞ்ச யாரையாவது கூட்டிக்கிட்டு வந்து பேசுங்க" என்று சொல்லிவிட்டு அந்தச் சிப்பாய் அவசரமாக அவ்விடத்தை விட்டு அகன்றான்.

குமாரசாமி கண்களைத் துடைத்துக்கொண்டு என்னைப் பார்த்தான். எனக்கு ஒரு யோசனை தலைக்குள் பளிச்சிட்டது. கிளிநொச்சி குளத்தடி முகாமில் தமிழன் ஒருவன் பெரியவனாக இருப்பதாகப் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவனுடன் தொடர்பு கொண்டு அவனூடாக முயற்சித்தால் சரிவருமோ? எதற்கும் முயன்று பார்க்கலாம் என்று தோன்றியது. என்ன இருந்தாலும் தமிழனுக்கு ஒரு பற்றுணர்வு இருக்கும், அந்த புளியங்குள சிப்பாய் போன்று. எனது யோசனையை குமாரசாமியும் ஏற்றுக்கொண்டான்.

அடுத்தநாள் கிளிநொச்சி 'சிட்டிசன் கொமிட்டி' ஆள் ஒருவரிடம் விசாரித்தேன். குளத்தடி முகாமிலுள்ள பெரியவனின் பெயர் மேஜர் நடராஜா என்று அறிந்துகொண்டேன். ஆனால் அவன் எப்படியான ஆள் என்பதை அறிய முடியவில்லை. 'சிட்டிசன் கொமிட்டி'க் காரரின் உதவியுடன் மேஜர் நடராஜாவைச் சந்திக்கவும் ஏற்பாடு செய்துகொண்டேன். பார்ப்போம். தமிழன்தானே, ஏதும் உதவுவான் என்று எனக்குள் எண்ணிக் கொண்டேன்.

ஓர் வெள்ளியன்று காலை நான், குமாரசாமி, அவனது மனைவி மூவரும் முகாமுக்குச் சென்றோம். ஒரு மணித்தியால காத்திருப்பின் பின் மேஜர் நடராஜாவை சந்திக்க முடிந்தது. புளியங்குளத்தில் சந்தித்த தமிழ் சிப்பாயின் முகத்தில் தெரிந்த இளகிய தன்மை மேஜர் நடராஜாவின் முகத்தில் தெரியவில்லை. சற்று இறுக்கமான முகமாகவே தோன்றியது.

"என்ன வேணும்?" மேஜர் கேட்டான்.

குமாரசாமியும் அவரது மனைவியும் பதற்றத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்ள ஒரு முன்னுரையாக நான் தொடங்கினேன்.



"இவர் பெயர் குமாரசாமி. இவரின்ர மகன் கொழும்பிலை 'ரீச்' பண்ணுறார். லீவுக்கு கிளிநொச்சிக்கு வாறவழியிலை புளியங்குளத்து ஆமி காம்பிலை பிடிச்சுப் போட்டினம். அவன் ஒண்டிலையும் தொடர்பில்லை. அஞ்சு வரிசமா கொழும்பில்தான் வேலை. நாங்க புளியங்குளத்தில் போய் கதைச்சம். அவைக்கு தமிழ் தெரியாதா...."

மேஜர் நடராஜா இடையில் குறுக்கிட்டான். "ஆமா நீங்க யாரு"

"நான் இவரோட சினேகிதன்"

"ஏன் இவங்களுக்குப் பேச வராதோ"

"இல்லை..."

"நீரு இடையில என்ன புறோக்கர் வேலையா பார்க்கிறீரு?"

"இல்லை... வந்து"

"யோவ் நீ பேசாம இரு. அவங்க சொல்லட்டும்"

எனக்கு சங்கடமாகப் போய்விட்டது. நான் முதலில் கதைக்கத் தொடங்கியது தவறு போலவே பட்டது. பேசாமல் தலையைக் குனிந்து கொண்டேன்.

குமாரசாமியும் அவரது மனைவியும் நடந்த விடயங்களைச் சொன்னார்கள்.

எல்லாவற்றையும் கேட்ட மேஜர் நடராஜா ஒரு விசமப் புன்னகை செய்தான். தொண்டையைச் செருமிக்கொண்டு பின் பேசத் தொடங்கினான்.

"நீங்க எல்லாரும்தான் எல். ரீ. ரீ. யை சாப்பாடு போட்டு வளர்க்கிறீங்க. எல்லாரையும் தான் தண்டிக்கணும். ஒவ்வொருத்தனும் பல பேர்ல உலாவுறான். வீட்ல ஒரு பேரு. றோட்ல ஒரு பேரு. காட்ல ஒரு பேரு. ஒவ்வொருத்தனுக்கும் ஒம்பது பேர் இருக்கு. குறிப்பா எவனையும் எங்களுக்கு புடிக்க முடியாம இருக்கு. முழிச்சிக்கிட்டு இருக்கப்போவே கண்ணுல மண்ணத் தூவுறான். திடீர்னு வந்து சுட்டுட்டு ஓடுறான். முந்தா நாள் 'திறீஸ்டார்' காரங்க நாலு பேரை வந்து சுட்டுட்டு போனான். போன வாரம் எங்க ஆமி இரண்டு பேரை உள்ள புகுந்து சுட்டாங்க. இவங்களை எல்லாம் சும்மா விடமுடியாது. அம்பது பேரைப் புடிச்சா அதுல அஞ்சு பேராவது எல். ரீ. ரீ. இருப்பான். அதைத்தான் நாங்க செய்யப்போறம். இப்ப புளியங்குளத்தில் அதைத்தான் ஆரம்பிச்சிருக்கோம்."

அவன் கதைக்கும் போது அவனது முகம் சிவந்து ஆவேசம் கூடிக்கொண்டு போனது. அவன் தொடர்ந்தான்.

"ஸ்கூல் மாஸ்டர்னா எல். ரீ. ரீ. இல்லைன்னு எங்களை நம்பச் சொல்லுறியா? எங்களுக்கு எல்லாம் தெரியும்."

"ஆமா விக்கியைத் தெரியுமா.... விக்கி?"

எனக்கு இவனை ஏன் சந்திக்க வந்தோம் என்றாகிவிட்டது. அவன் பேசப்பேச பயம் அதிகரித்தது.

"சொல்லுங்கய்யா விக்கியைத் தெரியாதா? யோவ் நீ சொல்லுய்யா உனக்குத் தெரியாதா?"

என்னைப் பார்த்து அவன் கேட்டான். நான் விக்கியைத் தெரியாது என்று சொன்னால் அவன் நம்பமாட்டான். ஊரில் சின்னக் குழந்தைக்கும் விக்கியின் பெயர் தெரியும். நகரில் அடிக்கடி ஊடு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ருவி தாக்குதல் செய்துவிட்டு மறைவது விக்கியின் 'குறூப்' என்று இங்கு பலருக்குத் தெரியும். சில வேளை தன்னந் தனியாக வந்தும் தாக்குதல் செய்வான் விக்கி. அப்பகுதியில் இந்தியப் படையினருக்கு விக்கியின் பெயர் சிம்ம சொப்பனமாக இருந்தது. மேஜர் நடராஜா ஆவேசத்துடன் முகத்தைச் சுருக்கி விரித்துப் பேசிக்கொண்டிருந்த விதம் எம்மைப் பயமுறுத்தியது. சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாக எமது நிலைமை இருந்தது. நாம் அவனிடம் வந்த நோக்கம் வேறு. அவன் எம்மிடம் கதைத்துக்கொண்டிருந்த விடயம் வேறாகப் போய்விட்டது. மேஜர் விடவில்லை. தொடர்ந்து துப்பாக்கி மாதிரி வார்த்தைகளைப் பொழிந்தான்.

"எல். ரீ. ரீக்கு யாரு. சாப்பாடு குடுக்கிறது, வீட்டில தங்க வைக்கிறது, தகவல் சொல்றது எல்லாம் எங்களுக்குத் தெரியும். ஸ்கந்தபுரத்தில் தபாலாபீசு வேலை செய்யிற நாராயணனைத் தெரியுமாய்யா உனக்கு. அவன் வீட்டில தான் இந்த விக்கிப் பய தங்கிறது, சாப்பிடுறது எல்லாம். முதல்ல அவனைப் புடிக்கணும். புடிச்சி நாயைச் சுடுறமாதிரி சுட்டுத் தள்ளணும். அப்பத்தான் நீ எல்லாம் திருந்துவ. பாரு. பார்த்துக்கிட்டே இரு. இன்னும் ஒரு வாரத்தில அந்த விக்கியை நாங்க புடிப்பம். புடிச்சி நாய் மாதிரி தெருத் தெருவா இழுப்போம். அவனை மட்டுமில்லை சாப்பாடு போடுற அத்தனை பேரையும் புடிச்சு சுட்டுத் தள்ளுவோம்."

அவன் பேசிக்கொண்டிருக்க சிப்பாய்கள் பலர் எங்களைக் கடந்து வரிசையாக ஓடினார்கள். முன்னால் நின்ற 'ரக்'குகளில் பாய்ந்து ஏறினார்கள்.

"பாரு. இவங்க எல்லாம் இன்னிக்கு விக்கியைப் புடிக்கத்தான் போறாங்க. எப்படியும் புடிச்சிடுவாங்க. போங்கய்யா ஓடுங்க. ஒருத்தனும் இந்தப் பக்கம் வரக்கூடாது. ஸ்கூல் மாஸ்டர் மட்டுமில்லை. எவனையும் நாங்க நம்பமாட்டோம். எல்லோரும் ஒண்ணு தான். போங்க போங்க"

அவன் எங்களை விரட்டுவது போலிருந்தது. பயத்துடன் அசடு வழிய முகாமை விட்டுத் திரும்



பினோம். சிறைச்சாலையிலிருந்து விடுபட்டதைப் போன்ற உணர்வு. மூவரும் ஒருவரோடொருவர் கதைத்துக் கொள்ளாமல் நடந்தோம். குளத்தடி வீதியைக் கடந்து கண்டி வீதியால் திரும்பி நடந்தோம். இந்தியச் சிப்பாய்கள் வரிசையாக நடந்துபோய்க்கொண்டிருந்தனர்.

'டிப்போ சந்தி'யால் திரும்பி கனகபுரம் வீதியில் நடந்த போது சைக்கிளில் வாழைக்குலை கட்டிக் கொண்டு முன்னால் ஒரு பசளை 'பாக்'கில் ஏதோ சுற்றிக் கட்டிக் கொண்டு ஒருவன் எம்மைக் கடந்து நகருக்குள் சென்றுகொண்டிருந்தான். உடம்பில் சட்டை இல்லை. தலையில் தலைப்பாகை. அந்த முகத்தை எங்கோ பார்த்த ஞாபகம் எனக்கு வந்தது. தலைக்குள் திடீரென்று மின்னல் வெட்டியது. அது விக்கியின் முகம் போலவே இருந்தது. விக்கிதானோ? இவ்வாறான வேடத்தில்தான் விக்கி நகருக்குள் புகுந்து தாக்குதல் நடாத்துவதாக ஊரில் பலர் பேசிக் கொள்கிறார்கள். அப்படியென்றால் அது விக்கிதானா....?

'இந்த மண்ணே சிறைக்கூடமாகி விட்டது. இதனை மீட்க விக்கிகளால் மட்டும் தான் முடியும்' மனதிற்குள் கூறிக்கொண்டே வேகமாக எட்டி நடந்தேன். விடயம் புரியாமல் குமாரசாமியும் அவனது மனைவியும் ஓட்டமும் நடையுமாக என்னோடு தொடர்ந்தார்கள். காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டு நடந்தேன். சிலசமயம் வெடிச்சத்தங்கள் எதுவும் கேட்கலாம்.

# மாவீரர் நாள்

## கார்த்திகை 27, 1995

**உலகம் பூராகவும் பரந்து வாழும் படைப்பாளர்களே!**

தூங்கிக் கிடந்த எம் இனத்தில் துடித்து எழுந்து சிறக்கை விரித்த துணிவுப் பறவைகளை, தேசத்தின் விடிவிற்காய் எழுந்த இளைய ஞாயிறுகளின் வாழ்க்கையை, அவர்களின் உன்னதத்தை, அவர்களின் நேசத்தை, அவர்களின் காதலை, அவர்களின் தாகத்தை பாடுவதும், பேசுவதும், எழுதுவதும், அவர்களின் பாதையில் நாமும் நடப்பதும் நாம் அவர்களுக்குச் செய்கின்ற மிகப் பெரிய கடனாகும்.



தேசத்திற்காய் வாழ்ந்தவர்களை மறந்துவிடுதல் மனிதமாகாது. படைப்பாளர்களே! அந்த விடுதலை வீரர்களின் உன்னதத்தைப் பாடும் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், ஓவியங்களை புரட்டாதி மாதம் 10ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள். (கடித மேலுறையில் `மாவீரர் நாள் - 95' எனக் குறிப்பிடவும்)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ‘கூத்துக்கலையும் பெண்களின் பங்களிப்பும்’

## ‘கூத்துக் கலையும் பெண்களின் பங்களிப்பும்’ கட்டுரை பற்றிய எரிமலை வாசகர் ச. தில்லைநடேசனின் சில குறிப்புக்கள்

எரிமலையில் மறுபிரசுரம் செய்யப்பட்டிருக்கும் ‘கூத்துக் கலையும் பெண்களின் பங்களிப்பும்’ என்ற கட்டுரையில் கூத்து கலை பற்றியும் வட்டுக்கோட்டை நாட்டுக் கூத்து பற்றியும் சில தவறான கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதனால் இக் கடிதக் கட்டுரையை எழுதுகிறேன்.

நாட்டுக்கூத்தானது 15ம், 16ம் நூற்றாண்டிலேயே வடிவம் பெற்றது எனக் கட்டுரையாளர் கூறியுள்ளார். இக்கூற்று நுணுகி ஆராயப்படவேண்டும். தமிழகத்தில் கூத்து வடிவம் பெறத்தொடங்கி 3000 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும். இதற்கு ஆதாரங்கள் உண்டு. சங்ககால இலக்கியங்களில் கூத்து பற்றிய பல தகவல்கள் உண்டு. அவை ஒரு கதையைக் கூறுபனவாக இருந்திருக்கிறது. இதனை பின்னர் வந்த சிலப்பதிகாரமும் உறுதிப்படுத்தும். பள்ளுக்குரிய இலக்கணம் 14ம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண நூல் ஒன்றில் கூறப்பட்டுள்ளது. ஆகையால் அதற்கு முன்பே பள்ளு நாடக வகை இருந்திருக்கவேண்டும்.

எங்கள் கூத்து வடிவங்களின் ஊற்றுக்கண் தமிழகத்திலிருந்துதான் தொடங்கியது என்பதை நாங்கள் மறைக்கத் தேவையில்லை. ஆனால் இந்த தொடர்பு கிறிஸ்துவுக்கு முன்பாகவே தொடங்கி விட்டது என்பதுதான் உண்மை. பூநகரிப் பிரதேசத்தின் தொல்லியல் ஆய்வின் போது, பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களுக்குரிய பொருள்களில் ‘காற்சலங்கை’களும் கிடைத்துள்ளன. இதனை அவர்கள் எதற்காகப் பாவித்திருப்பார்கள். அக்கால கட்டத்தில் பரதநாட்டியமானது கூத்துக்கலையிலிருந்து பிரியவில்லை. கி. மு. 1ம் நூற்றாண்டை அண்டித்தான் மக்கள் கலையான கூத்திலிருந்து பரதநாட்டியம் ஒழுங்கமைக்கப்பட்டது.

வடமோடி, தென்மோடி எனும் பிரிப்பு கதைப் பிரதிகளிலிருந்து துல்லியமாக வரமுடியாது. அது ஆட்டவகையினைச் சார்ந்தது. அத்துடன் வடமோடி தமிழகத்தின் வடக்கிலிருந்து, அதாவது, தெலுங்கு, கன்னடப் பிரதேசங்களிலிருந்து வந்திருக்க வேண்டும் என்றும் தென்மோடி தமிழகத்திலிருந்து (சேர, சோழ, பாண்டிய) வந்திருக்க வேண்டுமென்ற கருத்தும் உண்டு. இது ஆட்ட வகைகளை ஒப்பீடு செய்து ஆராயப் படவேண்டும்.

கூத்து ஆடுபவர் பெரும்பாலும் தாழ்ந்த குலத்தினராக கருதப்பட்டு வந்தனர் என்று கட்டுரை ஆசிரியர் எழுதியுள்ளார். அதனை மிகவும் கவனமாகக் கையாண்டிருக்க வேண்டும். தாழ்ந்த குலத்தில் என்பதை விட உழைக்கும் பாட்டாளிகள் என்று எழுதியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். யாழ். தீபகற்பத்தைப் பொறுத்தவரை, மருத நிலமும், நெய்தல் நிலமும் மட்டுமே உண்டு. இதனால் மருத நில மேட்டுக்குடி மக்கள், நெய்தல் நில மக்களை தாழ்ந்தவர்கள் என்று எண்ணும் யாழ்ப்பாண மனோபாவம் ஒன்றுண்டு. இது களையப்பட வேண்டும். சாதியால் பிரிந்து கிடந்த தமிழன் இன்று இனரீதியில் ஒன்றுபட்டு போராடும் போது இதுபோன்ற சொற்கள் கவனமாகப் பாவிக்கப்பட வேண்டும். அதேவேளை தமிழர் சமூகவியல் சாதிய பற்றிய வரலாறுகள் பதிவு செய்யப்படவேண்டும் என்ற ரீதியில் எனக்கு கருத்து முரண்பாடு இல்லை.

கூத்துக்களில் முதலிடம் பெறுவது மட்டக்களப்பு மாவட்டம் ஆகும் என்ற முடிவை எந்த முறையில் கட்டுரையாளர் எடுக்கின்றார் என்று தெரியவில்லை. இது வெறும் மேலோட்டமான முடிவு. மட்டக்களப்பு மாவட்டக் கலைகளை நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் அதற்கு எந்த வகையில் மற்ற மாவட்டக் கலைகள் குறைந்தது.

யாழ். தீபகற்பத்தைப் பொறுத்தவரை வடமோடி, தென்மோடி ஆடப்பட்டு வருகின்றது. கரையோரப் பகுதிகளில் தென்மோடி நாட்டுக்கூத்து ஆடப்பட்டு வந்தது. அது கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டது போன்று பின்னர் ஆட்டப் பண்பு குறைந்து விலாச நாடகத் தன்மையில் ஆகிவிட்டது. அதனை இப்போது தென்மோடி நாட்டுக்கூத்து என்று சொல்லமுடியாது.

இதிலிருந்து தப்ப, யாழ் குடாநாட்டிலேயே தென்மோடி நாட்டுக்கூத்து விறுவிறுப்புடன் தாளக்கட்டு பிசகாமல் நுணுக்கமாக ஆடப்பட்டுவரும் இடம் வட்டுக்கோட்டை சிந்துபுரம் (இறாத்தலடி) ஆகும்.

கட்டுரையாளரின் பெயர் குறிப்பிடப்படாததால் அவர் உண்மையில் எங்கள் ஊருக்கு வந்து பார்த்தாரா இல்லையேல் கேள்விப்பட்டு எழுதினாரா என விளங்கவில்லை.

மட்டக்களப்பு மாவட்ட கூத்துக்கு நிகராக யாழ். தீபகற்பத்தில் இப்போதும் ஆடப்பட்டு வரும் ஒரே இடம் வட்டுக்கோட்டை சிந்துபுரம்தான்.

இந்நாட்டுக்கூத்தை இப்போது ஐரோப்பாவில் பிரான்ஸ், ஜேர்மன், சுவிஸ், லண்டன், நோர்வே போன்ற இடங்களில் ஆடிவருகின்றோம்.

இக்கடிதக் கட்டுரையை ‘எரிமலை’யில் வெளியிட்டு உண்மையை பதிவுசெய்ய சந்தர்ப்பம் அளிப்பீர்கள் என எண்ணுகிறேன். இக்கடிதப் பிரதியை ‘வெளிச்சம்’ சஞ்சிகையிலும் வெளியிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்கு
ச. தில்லைநடேசன்
வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து
அபிவிருத்திக்குழு (பிரான்சுக் கிளை)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்












# ஒளிக்கரம் நீட்டிய ஒளிவிழா

## பிரான்ஸ்

சிங்கள இராணுவக் கொடுமைகளினால் தமது வீடு வாசல்களை இழந்து, அகதி முகாம்களிலும் மர நிழல்களின் கீழும் அடிப்படை வசதிகளற்று அல்லலுறும் மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் முகமாக 23-04-95 அன்று பாரிஸ் நகரில் இவ்விழா நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரெஞ்சுக் கிளையினரால் நடாத்தப்பட்ட இவ் விழாவில் பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில், அண்மையில் தமிழீழத்தில் வெளியிடப்பட்ட 'இசைபாடும் திரிகோணம்' எனும் ஒலிப்பதிவு நாடாவில் ஒலித்த 'ஒருநாள் விடியும்' எனும் பாடலுக்கு பாரிஸ் தமிழர் கல்வி நிலைய (சார்சல்) மாணவிகள் அபிநயத்தனர்.

மேற்படி ஒலி நாடாவில் ஒலித்த 'பச்சை மலைகள் முத்து மணிகள் பாங்குடன் விளங்கும் நம்நாடு' எனும் பாடலுக்கு அர்ச்சனா நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் அபிநயித்தனர்.

அதை அடுத்து 'எங்கள் தேசம் தமிழீழமடி' என்னும் கும்மிப் பாடலுக்கு சோதியா கலைக் கல்லூரி மாணவிகள் அபிநயித்தனர்.

'நவீன கண்ணகிகள்' என்னும் தலைப்பில் நிகழ்ந்த வில்லிசை பெண் கடற்கரும்புலிகளின் தியாகத்தையும் அவர்களது வீரத்தையும் எடுத்துக்கூறியது.

தாயின் வழியிலேயே சந்திரிகாவும் செல்வார் என்றும் சந்திரிகாவின் சமாதானம் என்கிற நாடகத்தையும் அவரது பொய்முகத் தோற்றத்தையும் 'சினிமா' எனும் தாளலய நாடகம் தோலுரித்துக் காட்டியது. இந் நிகழ்வினை கலைபண்பாட்டுக் கழகத்தினர் வழங்கியிருந்தனர்.

மறைந்துவரும் பழந்தமிழ் கலைகளுக்கு புத்துயிர் அளிப்பதாகத் திகழ்ந்த வட்டுக் கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவினரின் காவடியாட்டம், புரவி நடனம், அனுமானாட்டம் என்பன தாளக்கட்டுக்களாலும் ஆட்ட வேகத்தாலும் அனைவரையும் கவர்ந்தது.

நிகழ்வின் இறுதியாக திலீபனின் தியாக சீலம் பற்றிய பாடல்கள் ஒலித்தன.

நிகழ்வுகள் அனைத்தும் அனைவரையும் சொந்த மண்ணிற்கு அழைத்துச் சென்றிருந்தன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தேசத்தின் இரத்தம் வழிந்தோடியது

10 வருடங்களுக்கு முன்னர் சிறீலங்காவின் இனவாத அரசு எமது மண்ணில் கட்டவிழ்த்துவிட்ட காட்டுமிராண்டித்தனங்களால், எமது மண்ணில் இரத்த ஆறு ஓடியது. வெங்கொடுமைச் சாக்காடாய் எமது மண் இருந்தது. 9.05.85 வல்வட்டித்துறைக் கிராமத்தை இராணுவம் முற்றுகையிட்டது. அந்தக் கிராமத்தில் உள்ள வளங்களையெல்லாம் கொள்ளையடித்தது. 50 க்கும் மேற்பட்ட மக்களை நூல்நிலைய மொன்றிற்குள் அடைத்து வெடிமருந்து வைத்து வெடிக்கவைத்து கொன்று குவித்தது. வெறிபிடித்த இராணுவம் வீதிகளில் கண்ட மக்களையெல்லாம் சுட்டுக் கொன்றது.

15.05.85 அன்று நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் துறைமுகத்தை நோக்கி வந்துகொண்டிருந்த குமுதினிப் படகை சிங்களக் கடற்படை வழிமறித்தது. படகிலிருந்த பெண்கள், குழந்தைகள் அனைவரையும் வாளால் வெட்டிக் கொன்றது. ஏழாற்றுக் கடல் சிந்திய இரத்தத்தால் சிவந்தது. இந்தக் கொடுமைகளை எண்ணும் தோறும் விழிகள் சிவக்கும். கடற்புலி மங்கையர் எழுந்திடும் எங்களின் கடலில் எதிரியின் கொடுமை இனி எழுந்திடக் கூடுமோ...





## புரட்சி

– இளந்திரையன் –

நித்திரையின்றி நான்
நிலவில் எரிகையில்
தேசத்தின் மௌனம் ஒப்பாரி இடுகையில்
ஏன் என்று கேட்க நான் பாய்ந்தேன்.

எனது வீடு
உறவுகளோடு எரியூட்டப்படுகையில்,
பற்குதறும் போர்வையுள்
உயிர் பிடுங்கிய காயங்களுடன்,
சிவப்பாக்கப்பட்ட
வெள்ளைச் சீருடையின் அருகே,
குடல் சிதறிப்போன மாட்டின் பக்கம்
தெருவில் என் தங்கையின்
உடல் கண்டு அழ முனைந்தேன்
வாய் திறந்தால் 'வெடி என்றார்

நெஞ்சு நிறைந்து
ரவைகளாய் குத்தும் வேதனைகளை
எழுத்தாய் இறக்கிவிட அமர்ந்தால்
என் உயிர் போகும் என்றார்.

எல்லாம் சேர்ந்து குமைந்து
இதயம் வழி
நாடி, நாளம் எங்கும்
கண்ணீர் புடைத்தோட
என்னுள்ளே நான் இங்கு
வெடிக்கிறேன்

அவர்களின்
தலைமைச் செயலகச் செவிப்பறை
கிழிய
சிவிளொளிபாத மலையிலும்
எதிரொலிக்கும் படியாய்
ஏன் என்று கூவ நான்
துணிந்தேன்! துணிந்தேன்!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



எதிரி திணிக்கும்
எரிபொருள் தடையை
எதிர்கொண்ட போது
வாகனவசதிகள்
இன்றித் தவித்தனர்.

ஓ! ஓ! வண்டிக்காரா
ஓட்டு வண்டியை
ஓட்டு
பொழுதுபோகுமுன்
புதிய நகரம் நோக்கி!

புதுப்பாட்டு பிறந்தது





வாழ்க்கைச் சுமையோடு அல்லற்படுகின்ற மனிதன் - விறகுவெட்டி

இருப்பதைக் கொண்டு எழுந்திடக் கற்றார்





பிரதான போக்குவரத்துப் பாதைத் தடையால் மக்கள் இடர்ப்பட்டனர் புதிய பாதை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அந்தோ...
அண்டங்களின் ஐம்புலன்களின்
அறிவுக்கு அப்பாலும்
நீண்டு நீண்டு செல்லும்
நினைவானவள் பூபதி

- கஸ்தூரி -







ஜேர்மனியில் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினரால் அன்னை பூபதியின் ஏழாவது ஆண்டு நினைவுகள் உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்பட்டது. அந் நிகழ்வுகளின் சில காட்சிகள்.

# தலை விதி

விடிகாலைக் கருக்கல் கலைந்த வண்ணம் இருந்தது. கண்மணி தன் பிள்ளைகளுடன் படுத்திருந்தாள். நிலவன் அடுப்பில் வைத்திருந்த பால் பொங்கி வெளிச் சிந்தியது. உறக்கத்திலிருந்த கண்மணி திடுக்குற்றுக் கண்விழித்தாள். "என்னப்பா அடுப்பில பால் பொங்கி ஊத்துதே..."

"ஓமப்பா அடுப்பிலை பால் வைச்சனான்; மறந்துபோயிட்டன்"

கண்மணி அடுப்படிக்கு விரைந்து சென்றாள். அடுப்படியில் பால் வழிந்து கிடந்தது. கண்மணி கண்களைக் கசக்கிய வண்ணம் "ஏனப்பா உங்களுக்கு இந்த வேலை? என்னை எழுப்பியிருக்கலாமல்லோ?" என்று கத்தியவாறு கற்கண்டை அந்த மீதிப் பாலுக்குள் கலந்து ஊற்றிக்கொண்டு வந்து கணவனிடம் கொடுத்தாள். நிலவன் பாலைக் குடித்த வண்ணம் "அதில்லையடியப்பா, உனக்கு ஏன் தொல்லை தருவான் எண்டுதான் நானே போட்டேன்."

"சரி சரி நீ போய்ப் படப்பா. நான் இந்தப் பாலைக் குடிச்சிட்டு நாலு துண்டுப் பாண் தானே... அதையும் கண்ட்க்கொண்டு போறன். நீ ஆறுமணிக்கு எழும்பினால் இரவு பத்து மணி வரை ஓயாமல் கஷ்ரப்படுவாய். எனக்கும் பிள்ளைகளுக்கும் மூண்டு நேரம் சமைக்கவும், வீட்டு வேலையளும் செய்து களைப்பிலை இருப்பாய். போய்ப் படு கண்மணி." என அன்பு கலந்த குரலில் அரவணைத்துக் கூறினான்.

கண்மணி படுக்கை அறைக்குச் சென்று படுக்க முன் பிள்ளைகளை ஒரு கணம் பார்த்தாள். பிள்ளைகளின் போர்வை விலகி ஒரு புறமாய் கிடந்தன. பிள்ளைகளைத் தூக்கி நேர்த்தியாகப் வளர்த்தி விட்டு, போர்வையையும் போர்த்திவிட்டு தானும் போர்த்திக்கொண்டு உறக்கமுற்றாள்.

நிலவன், வேலைக்குக் கிழம்ப ஆயத்தமானான். அவன் மனச்சாட்சி அவனை உறுத்தியது. "ஏனடா நீ நாட்டை விட்டு வந்தது சரியா?"

நிலவனுக்கு தொண்டை அடைக்க மாடிப்படிகளில் கால்கள் தடுமாறியது. எட்டாம் மாடியிலிருந்து முதலாம் மாடிக்கு கால்கள் வந்ததை உணரவில்லை. தாய் நாட்டை விட்டு வந்த உணர்வில் அவன் உள்ளம் குறுகியது. குழம்பிப் போய் தெளிவற்றவனாய் நடந்துகொண்டிருந்தான். அவன் கால்கள் வெண்பனி மீது விரைந்துகொண்டிருந்தன.

**மித்திலன் வசீகரன் - ஒஸ்லோ**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உறுத்தும் மனச்சாட்சிக்குப் பதிலளிக்கமுடியாமல் பஸ் வண்டிக்குள் புகுந்து இருக்கையில் அமர்ந்தான்.

பஸ் வண்டி அடுத்த தரிப்பிடத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. மனச்சாட்சி கேட்ட கேள்விக்குப் பின் இவன் நினைவுகளோ, தமிழீழத்தில் இவன் சந்தோஷமாக வாழ்ந்த நாட்களை தேடிக்கொண்டிருந்தது. அடுத்த பஸ் தரிப்பில் கந்தவனத்தார் பஸ் எடுக்கிறவர் என்று நிலவனுக்கு நல்லாய்த் தெரியும். அவன் நினைத்தது மாதிரியே கந்தவனத்தார் பஸ்ஸுக்குள் நுழைந்தார். நிலவனைக் கண்டு கண்களால் வணக்கம் தெரிவித்து, அவனை நோக்கி வந்தார். நிலவனும் என்றும் இல்லாதவாறு ஏதோ ஆழ்ந்த யோசனையில் மனசுக்குள்ள குமுறிக் கொண்டிருப்பதை கந்தவனத்தார் கண்டுபிடித்துவிட்டார் போலும்.

"என்னடா நிலவன், என்ன சங்கதி?... ஏதேனும் வீட்டில விசேஷமே? என்ன திருட்டு முழியை பிரட்டிக் கொண்டிருக்கிறாய்" என்று கூறியவாறே அவன் அருகே அமர்ந்தார்.

"உங்களுக்கு நெடுக என்னோட பகிடி விடாட்டா பொழுது விடியாது போங்கோ"

"அது ஒன்றுமில்லை அண்ணே. நான் தமிழீழத்தை விட்டு வந்து நாலு வருடமாச்சு!"

"என்னடா! உனக்கு உன்ரை அம்மா, அப்பாவின்ரை ஞாபகம் வந்திட்டுதே?"

"ஓம் அண்ணை அது ஒரு புறம். அதைவிட இண்டைக்கு காலமை என்ரை மனச்சாட்சி என்னை உறுத்திச்சு."

"அடே... அடே... என்னடா கனக்க யோசிக்கிறாய்?"

"கந்தவனம் அண்ணை, நாங்கள் நாட்டை விட்டு வந்தது உங்களுக்கு சரியெண்டு படுகுதோ?"

"ஓமடா... நான் சரியெண்டு தான் நினைக்கிறன். அதுக்கு இப்ப என்ன?"

"எனக்கு என்னவோ நாட்டை விட்டு வந்தது சரியாப்படேல்ல"

"நிலவன்! உந்த எங்கடை நாட்டுப் பனங்கள்ளுக் கதையை விட்டுப் போட்டு ஏதாவது இந்த நாட்டு பிராண்டிப் போத்தலைப் பற்றிக் கதை."

"சும்மா போங்கோண்ணை. உங்களுக்கு எந்த நேரமும் விஸ்கியும் பிராண்டியும் பத்தின கதை தான்."

"அண்ணை நான் இந்த வெளி நாட்டுக்கு வர முதல், என்ன சுதந்திரமாய் வயல்வெளி தோட்டம் எண்டு விவசாயம் செய்து கொண்டு திரிஞ்சனான். அந்த எங்கடை பிள்ளையார் கோவில்ல உள்வீதி, உள்மண்டபம், வெளிமண்டபம் எண்டு கூட்டித்தொண்டு செய்துகொண்டு இருந்தனான். அந்த சுதந்திரமும், சுதந்திர தேசத்தில் உள்ள சந்தோசமும் இந்த நோர்வே நாட்டுக்காரன் வைச்சிருக்கிற பெற்றோலை வித்தாலும் வேண்டேலாது."

"இங்கை என்னடா எண்டால், இந்த நாட்டுக்காரன்ரை கந்தோரையும், மலசலகூடத்தையும் கழுவிற துக்கெண்டு, நானும் நீங்களும் விடிய வெள்ளாப்புக்கை, இந்த கடும் குளிருக்க எழும்பிப் போறம்."

"பிரச்சினைக்குப் பயந்து பணம் பொருள் தேட இங்க ஏதோ சொர்க்க பூமி எண்டு ஓடி வந்தனாங்கள்."

"நீங்கள் சொல்லுறதும் சரிதான் கந்தவனமண்ணை. நாங்கள் தமிழனாய் பிறந்தது, தலைவிதி எண்டு சொல்லுங்கோ. ஆனால், தமிழனாய் பிறந்தது தப்பெண்டு சொல்லாதையுங்கோ. தமிழனாய் பிறந்ததில சந்தோஷப்படுகிறவன் இன்றைக்குது தமிழீழத்தில இருக்கிறான்."

"தமிழன் என்று தரணிக்கு தலை நிமிர்ந்து சொல்லிக்கொண்டு தமிழீழத்தில இருக்கிறவன் உண்மையான தமிழன்; வீரத்தமிழன்."

"நாங்கள் எண்டைக்குச் சண்டைக்குப் பயந்து தமிழீழத்தை விட்டிட்டு வந்தமோ, அதுதான் சரியான தவறு. இனி இல்லை எண்ட பெரிய தப்பு. எங்களுக்குத் தலைகுனிவும் கூட. எங்கட தங்கத் தம்பிகளைப் போல நெஞ்சை நிமிர்த்தி எதிரியை விரட்டிக் கொண்டு தமிழீழத்தில இருந்திருந்தால் எங்களுக்கு ஏன் இந்தத் தலை குனிவு? கேவலமான, சோகமான, அந்நியமான, அகதியான, அவலங்கள் ஒண்டும் நடந்திருக்காது." என்று தன்னுள்ளே அடக்கி வைத்திருந்தவற்றை பொழிந்து தள்ளினான்.

"நிலவன்! நீ சொல்லுறதும் சரி. நான் சொல்லுறதும் சரி. ஆனால், உன்ரை பிள்ளைகளும் மனைவியும் நாளைக்கு இங்க கஞ்சி குடிக்க வேணுமெண்டால் முதல்ல பஸ் விட்டு இறங்கு. வேலை இடம் வந்திட்டுது. கந்தோருக்குப் போவம்."

கந்தவனம் அண்ணை மீண்டும் தன்னுடைய பாணியில் பகிடி விட்டுக்கொண்டு பஸ் வண்டியை விட்டு இறங்கினார்.

இருவரும் வெறுப்புக் கலந்த சிரிப்புடன் வேலைக்குச் சென்றனர். ♦

**நேற்று முன்தினம் தந்தை, நேற்றுக் கணவன், இன்று மழலை மகன்**

"கெடுக சிந்தை கடிது இவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
யானை எறிந்து களத்து ஒழிந் தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள்
கொழுந்தன் பெருநிரை விலக்கி
ஆண்டுப்பட்டனனே.
இன்றும்,
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோன்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே."

- ஒக்கூர் மாசாத்தியார்
புறநானூறு 279

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



குனிந்தோம் வளைந்தோம்
எத்தனை ஆண்டுகள் அடிமையாய்க் கிடந்தோம்
எதிரியின் காலடிப் புழுவாய் நெளிந்தோம்
இன்று நாம் நிமிர்ந்தோம்! தமிழராய் நிமிர்ந்தோம்!!
வீரவரலாறு மீண்டது எப்படி??



www.tamileelamarchive.com